ஸ்ரீமதே ராமாநுஜாயநம:.

DONATED BY
Chakravarthi Srinivasa Chariar's Sons
133 BIG STREET,
KUMBAKONAM.

ப்ரபன்னஜனக்ரேஸரரான

ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த

T. 8583

# ஸ்ரீஆளவந்தார்ஸ்தோத்ரம்.

இதற்கு,

ஸ்ரீமத்ப்ரபன்னஜனக்ரேஸரரான

பெரியவாச்சாம்பிள்ளை

யருளிச்செய்த வ்யாக்கியாநமும்

இவை,

ஸ்ரீ-உ-திருமழிசை-கோயில்கந்தாடை

மஹாபாஷ்யம்—ஸ்ரீரங்காசார்யராலும்,

ஸ்ரீ-உ-பெருமாள்கோயில் திருமலை

ஈச்சம்பாடி—இராகவாசார்யராலும்,

அநேகப்பிரதிகளைக்கொண்டு பரிஷ்க[illegible]டு,

பத்தி-இராமாநுஜ—லு நாயகரவர்களால்

ஸ்வகீய

ஸ்ரீநிகேதநமுத்ராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

[illegible]adras.

[illegible]878.

[illegible] Copy-right.

T008583
Sarasvati Mahal Library. Thanjavur



ஸ்ரீமதே ராமானுஜாய நம:.

# அவதாரிகா.

ஸர்வேச்வரன், ஆழ்வாருக்கு தன்னுடைய ஸ்வரூபரூபகுணவி
பூதிகளை மயர்வறமதிநல மருளினனென்கிறபடியே நிர்ஹேதுகக்ரு
பையாலே தன்னைக்காட்டிக்கொடுக்க, கொடுத்த ஜ்ஞானம்பக்திரூபா
பன்ன ஜ்ஞானமாகையாலே, பரபக்தியுக்தராய்க்கொண்டு, பக
வத்குணானுபவத்தைப்பண்ணி, அதினுடைய விபாகதசையான ப
ஜ்ஞானம்பிறந்து, அதடியாக பரமபக்திபிறந்து, அத்தாலே, "பர
ம்ச்யோதிருபஸம்பத்ய" என்றும், "பரமம்ஸாம்யமுபைதி" எ
றும் "தம்மையேயொக்கவருள்செய்வர்" என்றும், சொல்லு
படியே ஸ்வஸ்வரூபத்தைப்பெற்று, பார்யைக்கு அங்கபூஷ
போலே "வழுவிலாவடிமைசெய்யவேண்டும்" என்றும், "அ
வற்றுவீடுபெற்ற" வென்றும் சொல்லுகிறபடியே ப்ராப்திபலமான
கைங்கர்யத்தைப்பெற்ற வாழ்வாருடைய த்ரவிடோபநிஷத் ரஹஸ்
யத்தை, பெரியமுதலியார், ஆழ்வாருடைய ப்ரஸாதத்தாலே லபித்
து, பின்பு ஆசார்யோபதேச க்ரமத்தாலே, ஆளவந்தார் அந்தத்ர
விடோபநிஷத் ரஹஸ்யார்த்தங்களைலபித்து, அத்தைத் தாமனுஸந்
தித்து, அவ்வனுஸந்தானத்தால் பிறந்த ப்ரீதி உள்ளடங்காமையாலே
பரீவாஹாபேக்ஷை பிறக்கையாலும், ஸம்ஸாரிகள் துர்க்கதியைக்கண்
டுயிவர்கள் இத்தை யிழக்கவொண்ணாதென்னும் க்ருபையாலும், ஸக
லோபனிஷத் ரஹஸ்யமாய், துர்ஜ்ஞேயமான வர்த்தத்தை ஸர்வரு
மறியும்படியாக, இவர் ஸ்தோத்த்ரமாக வெளியிடுகிறார். பகவத்வ்யதி
ரிக்த விஷயங்களில் ஸ்தோத்த்ரமாவது— "ஸ்தோத்த்ரந்நாம கிமா
மனந்தி" அன்யத[illegible]த்குணோக்தி: என்று இல்லாதவற்றை யேறி
ட்டுச்சொல்லுதல், உள்ளத்தையடையச்சொல்லுதலாயிருக்க, யதோ

வாசோநிவர்த்தந்தே - அவிஜ்ஞாதம்விஜாநதாம் - யுதார்த்தேசதமாஸ்துதி: நஸமர்த்தாஸ்ஸுராஸ்தோதும் என்று பரிச்சேதித்துப் பேசநிலமல்லாத பகவத்விஷயம் ஸ்துதிவிஷயமானபடி யெங்ஙனே யென்னில், அங்கனே யிருந்ததேயாகிலும், ஸ்தவ்யஸ்தவப்ரிய: என்று ஸ்துதிப்ரியனாகையாலும், எத்தவேழுலகங்கொண்டவென்றும், எத்தவேத்த வெங்கேய்தும் என்றும் ஸ்தோத்ரவ்யவஹாரமுண்டாய்ப் போருகையாலும், இதொழிய வாசகசப்தமில்லாமையாலும், இவ்விஷயத்திலும் ஸ்தோத்ரமென்னலாம்.

அதவா, தர்மார்த்த காமமோக்ஷாக்யா: புருஷார்த்தா உதாஹ்ருதா: இதி சதுஷ்டயமென்றும்,மன்னுமறம்பொருளின்பம்வீடென்றும்சொல்லுகிறபடியே புருஷார்த்தம் நாலாய், அவற்றில். தர்மம்-ஸாதனதயா புருஷார்த்தமானாலும், க்லேசஸாத்தியமாகையாலும், அர்த்தம் ஸ்வயம் புருஷார்த்தமானாலும் அஸ்திரமாய் க்லேசஸாத்யமாகையாலும், புருஷார்த்தாந்தரங்களுக்கு ஸாதனமாகையாலும், [illegible]மம் ஸ்வயம் புருஷார்த்தமானாலும் அல்பாஸ்திரத்வா நர்த்தாவஹத்வ ப்ரபத்ஸாத்யநந்ததோஷதுஷ்டமாகையாலும், மோக்ஷசாஸ்[illegible]த்திலே மோக்ஷவிரோதித்வேந நிந்திதமாயிருக்கையாலும் ஆள[illegible]கார் அவற்றைவிட்டுமோக்ஷத்திலும் ஆத்மப்ராப்தி:க்கேந ஸி[illegible] ஸாத்யமாகையாலும் பகவதனுபவத்தைப்பற்ற அல்பமாயிருக்கையாலும், அதையும்விட்டு பகவத்ப்ராப்திக்கு உக்ததோஷங்களின்றி யிருக்குமள வன்றிக்கே, நிரஸ்தாதி சயாஹ்லாத ஸுகபாவைகலக்ஷண என்கிறபடியே நிரதிசய ஸுகரூபமாய் எஷஹ்யேவாநந்தயாதி பரமம்ஸாம்யமுபைதி தம்மையே யொக்கவருள் செய்வர் என்கிறபடியே. ஆச்ருதரை தன்னைப்போலே ஆனந்திப்பிக்கக்கடவனாய், தஸ்யாஹம்ஸுலப: என்று அயத்ந ஸாத்தியமாய், ப்ராப்த புருஷார்த்தமுமா யிருக்கையாலே இதுவேபுருஷார்த்தமென்று அத்யவஸித்து, அந்தபகவத்ப்ராப்தியாகிறதும், ப்ரதானக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேச:, ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவீசநீசௌ, தமீச்வராணாம் பரமம்மஹேச்வரம், தாஸோஹம்வாஸுதேவஸ்ய, தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே, தாஸோஹம்கோஸலேந்த்ரஸ்ய, யஸ்யாத்மாசரீரம்,யஸ்யாக்ஷரம்சரீரம்,அந்த:ப்ரவிஷ்[illegible]ச்சாஸ்தாஜநாநாம் ஸர்வாத்மா, பூ:ப்ராணிநஸ்ஸர்வஏவகுஹாசா[illegible]ய, தாநிஸர்வாணி தத்வபு:, என்று ஜீவபரர்களுக்கு அநந்யார்ஹ சேஷசேஷிபாவேந

ஸம்பத்தத்தைச்சொல்லி, யேநயேநதாதாகச்சதி, ஸோச்னுதேஸ வான்காமான் ஸஹப்ரஹ்மணுவிபச்சிதா, காமயேவைஷ்ணவத்வந்து ஸர்வஜன்ம ஸுகேவலம், அஹம்ஸர்வம்கரிஷ்யாமி, ஒழிவில்காலமெல்லா, மித்யாதிகளிலே ஸ்வரூபானுரூபமான போகத்தைச் சொல்லுகையாலும், பதிவ்ரதைக்குபதி சிச்ரூஷணம்போலே, சேஷ வஸ்துவுக்கு கைங்கர்யமென்று அத்யவஸித்து, இனி "பேஷிஜம்ப கவத்ப்ராப்திః" என்று அவனே ப்ராப்யமென்னுமதும் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி யாகையாலே, ஸ்வேநரூபேணுபி நிஷ்பத்யதேயென்று ஸ்வஸ்வரூபத்தை ப்ராப்யமென்கிறதும் கைங்கர்யத்துக்கு ஆச்ரயமாகையாலே, ஸோத்வநః பாரமாப்னோதிதத்விஷ்ணோ: பரமம்பதமென்று தேசவிசேஷத்தை ப்ராப்யமென்கிறதும் கைங்கர்ய வர்த்தகமாகையாலே, நிஸ்தரந்திமநீஷிணః என்று ஸம்ஸாரநிவ்ருத்தியை புருஷார்த்தமென்கிறதும் கைங்கர்யவிரோதி யாகையாலே, இவை கைங்கர்யோபயோகியல்லாதவன்று, நஹிமேஜீவிதேநார்த்தః என்றும், மணிமாமைகுறைவில மென்றும், உடம்பினுல் குறைவில மென்றும், உயிரினுல் குறைவிலமென்கையாலே அபுருஷார்த்தமென்றும், ததியசேஷத்வத்தையும்புருஷார்த்தமென்கிறதும், பதிவ்ரதைக்கு பதியினுடைய ஆத்மாம்சத்திலும் குணம்சத்திலும் ஸௌந்தர்யவிசிஷ்டமான தேஹாம்சமேப்ராப்யமுமாய், அத்தாலே யாதிவ்ருத்யஹாநியில்லாதாப்போலே, இப்படி ஸகலசாஸ்த்ரதாத்பர்யமானபுருஷார்த்தத்தை நிச்சயித்து, இதுக்குபாயம்பக்தி ப்ரபத்திகளலிரண்டாய், அதில்பக்தியாவது - ப்ரஹ்மவிதாப்நோதிபரம், ச்ரோதவ்யோ மந்தவ்யோநிதித்யாஸிதவ்ய:, நாயமாத்மா ப்ரவசனெனலப்யோ, தஸ்மின்த்ருஷ்டேபராவரே, பக்த்யாத்வநன்யயாசக்ய:, மத்பக்திம் லபதேபராம்என்று வேதநத்யானோபாஸந சப்தவாச்யமாய், பக்திரூபாபன்னமாய், தர்சனஸமானுகாரமான ஜ்ஞாநவிசேஷம் பக்தியாகிறது. அக்னிவித்யாங்கிகையாய் கர்மஜ்ஞாந ஸஹக்ருதையுமாகையாலே அதிக்ருதாதிகாரமாய், விளம்ப்யபலப்ரதமுமாய், ப்ரமாதஸம்பாவனையும் உண்டாகையாலே, அவற்றைவிட்டு, இந்த தோஷமொன்றுமின்றிக்கே, முமுக்ஷுர்வை சரணமஹம்ப்ரபத்யே, ந்யாஸமாஹுர்மனீஷிணோ ப்ரஹ்மாணம் ப்ரஹ்மா, தஸ்மான்

யாஸ்மேஷீரந்தப ஸாமதிரிக்தமாஹு:, தஸ்மாதபிவத்யம் ப்ரபன்
னம் தப்ரதிப்ரயச்சந்தி, ஸப்ராதுச் சரணௌகாடம் நிபீட்ய ரகுநந்
தந:, ஸக்ருதேவப்ரபன்னாய, ஸோஹம்த்வாம் சரணமபாரமப்ரமே
யம், ஸர்வாத்மனுயச்சரணம் சரண்யம்நாராயணம் லோககுரும்ப்ர
பன்ன:, மாமேவயேப்ரபத்யந்தே, தமேவ சரணம்கச்ச, ஸர்வதர்
மான் பரித்யஜ்ய, தாவதார்த்திஸ்ததாவாஞ்சா, என்றித்யாதி ச்ருதி
ஸ்ம்ருதிஸித்தமாய், ஸ—கரமுமாய், அத்யவஸாயாத்மகஜ்ஞாநவி
சேஷமானப்ரபத்தியையே யுபாயமாகநிச்சயித்து, இப்படி ப்ராப்
யப்ராபகங்களை நிஷ்கர்ஷித்து, இவற்றை ஸ்தோத்ர ரூபத்தாலே
ஸர்வேச்வரனை நோக்கி ப்ரார்த்திக்கிறாரென்றுமாம்.

பகவத் ஸ்தோத்ரம்பண்ணப்புககவர் ஆசார்யஸ்துதியிலே
பார்ப்பானென்னென்னில், கர்ணௌஸ்ப்ருஷ்டேகடிஞ்சாலயதி என்
னுமாப்போலே அஸங்கதம்என்னில் - பகவத்விஷயத்தைத் தமக்கு
ஸ்துதிவிஷயமாக்கிக்கொடுத்த உபகாரஸ்ம்ருதியாலும், ஸ்தோத்ர
ம்பண்ணுகைக்கடியான ஜ்ஞானவைசத்யார்த்தமாகவும், அவிக்ன
பரிஸமாப்த்யர்த்தமாகவும் பண்ணுகிறாராகையாலே ஸங்கதம்.

அதில் மானஸமாகவமையாதோவென்னில், இப்ரபந்தத்தை
பதிகரிப்பார்க்கு உபகாரமாகையாலே வாசிகமாக்கினதும்யுக்தம்.
உபகார ஸ்ம்ருதியாலேவந்த ஆசார்யானுவர்த்தனம் ப்ரமாணப்ரஸி
த்தம். ஆசார்யதேவோபவ, நம: ரிஷிப்யோமந்த்ரக்ருத்ப்ய:, ஸஹி
வித்யாதஸ்தம்ஜநயதிதச் ச்ரேஷ்டம்ஜன்ம, மந்த்ரேதத்தேவதாயாஞ்
சததாமந்த்ரப்ரதேகுரௌ. கிஞ்ச, ஒருரத்னத்தை ஒருவன்கொடுத்தா
ல், அதினுடையமஹார்க்கத்தை அறியக்கொடுத்தவனை ஆதரிக்க ப்ர
மாணம்வேண்டுமோ- ஆகையாலிது உபபன்னம்-ஜ்ஞானவைசத்யா
ர்த்தமாக ஆசார்யானுவர்த்தனம் சிஷ்டாசாரப்ராப்தம், அபிவந்த்ய
குரூநாதௌசிஷ்யதீபத்மினீரவீன் இதிமீமாம்ஸகா:- யதாகனத்கனி
த்ரேண இதிமனு:. யஸ்யப்ரஸாதாத்வக்ஷ்யாமி நாராயணகதாமி
மாம்-இதிவைசம்பாயன:-லௌகிகம்வைதிகம்வாபி இதிமனு:-அங்ங
னேயாகில், ஸ்வாசார்யனைவிட்டு அவர்குருக்களைப் பற்றுவானென்
னென்னில், ஆசார்ய ஸ்துதியிலும் ஆசார்யப்ரியமிறே உத்தேச்யம்-ஸ்
வாச்ரயணத்தில் காட்டில் பெரியமுதலியாரை ஆச்ரயிக்குமிடத்தில்
ப்ரீதிமிக்கிருக்கையாலே அதைப்பேசுகிறார், பெரியமுதலியார்.

ச்லோ.—நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞானவைராக்யராசயே-
நாதாயமுநயேகாத பகவத்பக்திஸிந்தவே - க.

ஆழ்வாருக்கு பகவத்ப்ராவண்யமடியாகப்பிறந்த ஜ்ஞானத்தை ஆழ்வார் ப்ரஸாதத்தாலேபெற்று, தம்மளவிலே பர்யவஸிக்கை ய ன்றிக்கே, பின்புள்ளாருக்கும் உபகாரமாம்படி, இத்தர்சனஸ்தாப கரானபடியாலும், மணக்கால்நம்பி, பெரியமுதலியாருடைய அர் த்தம்இது,உம்முடையபேற்றுக்கெல்லாம் அவருடைய திருவடிகளி லே ஸம்பந்தமேஎன்கையாலும் அவரை ஆச்ரயிக்கிறார்.

இதைநினைத்திறேபட்டர்-ப்ரதம மபிகுருன்னுதமீடேஎன்ற தும். வேதகாரணமானப்ரணவம், வேதாத்யந்தங்களிலே யானாப் போலே, யிங்குமாத்யந்தங்களிலே ஆசார்யஸ்துதியாய், நடுவிலே பகவத்ஸ்தோத்ரமாக விருக்கிறது. முதலிட்டு மூன்று ச்லோகத்தா லே பெரியமுதலியாரை நமஸ்கரிக்கிறார்.

முதல்ச்லோகத்தில், ஒருவனைக்கவிபாடப்புக்கால், அவன் ஐச்வ ர்யத்தைச்சொல்லிக் கவிபாடுமாப்போலே, வைஷ்ணவனுக்கு ஐச் வர்யமான ஜ்ஞாநவைராக்யங்களுடைய ப்ரகர்ஷத்தைச்சொல்லி நமஸ்கரிக்கிறார். தனமாயதானே கைக்கூடுமென்று வைஷ்ணவனுக் கு தனம்பக்த்யாதிகளென்று சொல்லிற்றிறே.

அவதாரிகைமுற்றிற்று.

வ்யா.—(நம:), அஹமபிநமம பகவதஏவாஹமஸ்மிஎன்கிறபடி யே, எனக்குரியேனல்லேன், பெரியமுதலியாருக்கு சேஷமென்கி றார். நமோவிஷ்ணவெ என்கிறாப்போலே. (நமோநாதாய) வென்கி றார். உபகாரஸ்ம்ருதியாலே. நமோவிஷ்ணவெஎன்றும் நமஇத்த் யேவவாதிந: என்றும் நமரிஷிப்ய: மந்த்ரக்ருத்ப்ய:, தேஷாம பிநமோநம: என்றும் சொல்லக்கடவதிறே - ஈச்வரமுனிகள் ஸ்ரீரங் கநாதனென்று திருநாமம்சாற்றுகையாலே, நாதனென்று திருநாம மாகிறது-எப்படிப்பட்டவரென்னு மபேக்ஷையிலேசொல்லுகிறது. (அசிந்த்ய) இவருடைய ஜ்ஞாநாதிகள் இன்னாருடையஜ்ஞாநாதிகள் போலே இருக்குமென்று நினைக்கவொண்ணாதென்னுதல், இவ்வள வென்று ஜ்ஞாநாதிகராலும் பரிச்சேதிக்கவொண்ணாதென்கை. (அத் புத) மேல்இத்தாராஹித்யத்தைச் சொல்லுகையாலே, க்ருஹீதாம் சம், அநுஸந்தித்தாருக்கு ஆச்சர்யாவஹமாயிருக்குமென்கை - எ ன்னக்கால் இத்யாதியில், க்ருஹீதாம்சம் இனிதாயிருக்குமென்றதி றே. (அக்லிஷ்ட) வியாஸாதிகளைப்போலே ஸ்வயத்நஸாத்யதபஸ்

ஸாமேலவந்ததஸ்நிக்கே, ததாமிபுத்தியோகம்தம் என்றும் மயர்வறமதி
நல மருளினன் என்றும் சொல்லுகிறபடியே, பகவத்ப்ரஸாதலப்த
மாகையாலே, வருத்தமற்றிருக்கை. (ஜ்ஞாந) ஜ்ஞாநமாவது- சிதசிதீ
ச்வரதத்வங்களை விஷயமாகவுடைத்தாயிருக்கை - அதாவது ஆத்மா ஈ
ச்வரனுக்கு அனன்யார்ஹ சேஷமென்றும், அசித்ஸ்வரூபம் த்யா
ஜ்யமென்றும், ஈச்வரன் உபயோர்நியந்தாவென்றும் அறிகை. ஜ்ஞாந
மென்றால் இவ்விசேஷத்தைக்காட்டுகிறது- தத்ஜ்ஞாநமஜ்ஞாந மதோ
ந்யதுக்தம், வித்யான்யா சில்பநைபுணம் என்று வ்யதிரிக்த விஷ
யஜ்ஞாநம் அனர்த்தாவஹமென்றும், அதிக்ஷுத்ரமென்றும் சொ
ல்லிற்றிறே.

(வைராக்கிய) இவ்விலக்ஷணஜ்ஞானத்தாலே பகவத்வ்யதிரிக்தங்
களில் நிஸ்ப்ருஹராயிருக்கை - வேண்டேன்மனைவாழ்க்கையை. (ரா
சயே). ராசியென்று ஸமூஹம் (ஜ்ஞானராசயே வைராக்யராசயே,)
ஜ்ஞாநவைராக்கியங்க ளொன்றாயிருக்க ராசயே என்பானென்னெ
ன்னில், பகவத்ஸ்வரூபாதிகள் ஜ்ஞாநவிஷயங்களாகையாலே பல. பி
தரம்மாதரம் என்று த்யாஜ்யவிஷயங்களும் பலவாகையாலே சொ
ல்லலாம். லோகத்தில் விலக்ஷணருடைய ஜ்ஞாநவைராக்யங்களெல்
லாம். இவருடைய ஜ்ஞாநவைராக்யங்களிலே அந்தர்ப்பூதமாம்படியி
ருக்கையாலே சொல்லுகிறதென்றுமாம். யத்கிஞ்சித்ஸாதுகுர்வந்தி
யஸ்தத்வேதஸவேத ஸமயைஸ்தது ருக்தஇதி - யத்கிஞ்சித்ஸாத்வனுஷ்டி
தம்கர்ம, யச்சஸர்வசேதனகதம் விஜ்ஞாநம், ததுபயம் யத்ஜ்ஞாந
கர்மாந்தர்கதம், ஸரைக்வஇதி. லோகத்தி லனுஷ்டிதமானகர்மங்களு
ம், ஜ்ஞாநங்களும் யாவனொருத்தனுடைய கர்மஜ்ஞாநங்களிலே அந்
தர்க்கதமாயிருக்கும், அவனேயிவன் ரைக்வனென்று பார்த்துச்
சொல்லுமாப்போலே. (மூனயே) நவிவேதாத்மா நோகாத்ரம் என்
றும், பச்யன்ன பிநத்ருஷ்டவான் என்கிறபடியே, த்யேயவஸ்து
வை ஸர்வதாஸாக்ஷாத்கரித்து, எதுசெய்தால் மறக்கேன்மனமே, எ
ன்னெஞ்சமவனைவிட்டே கிடக்கும். இவர் க்ருஷ்ணனையனுஸந்தித்தி
ருக்க இராஜாவாலும் ஸமாதிபங்கம் பண்ணப்போயிற்றில்லை. (அகாத
பகவத்பக்திஸிந்தவே) பக்தியாவது- ஜ்ஞாநவிசேஷமாயிருக்க, பக்
தியைப் பிரித்துச்சொல்லிற்று, அதினுடைய ப்ராசுர்யஞ் சொல்லு
கைக்காகவும், ப்ராதான்யம் சொல்லுகை தோற்றுகைக்காகவும். பக்தி
யாகிறது- ஸ்நேஹபூர்வமனுத்யானம் பக்தி: என்றும், ஸ்வாமிநிதாஸ

ச்லோகம்.—தஸ்மைநமோமதுஜித்அங்க்ரிஸரோஜ
தத்வஜ்ஞாநாநுராகமஹிமாதிசயாந்தஸீம்நே-
நாதாயநாதமுநயேத்ரபரத்ரசாபிநித்யம்
யதீயசரணௌசரணம் மதீயம் - ௨.

---

யஸ்தேஹமயிஸ்திதி: என்றுஞ் சொல்லுகிறபடியே, அநுபூஷை. பகவத்சப்தத்தாலே பரமபதத்திலிருப்பைச் சொல்லுகிறது. வாஸுதேவோஸிபூர்ண: என்று, ஷாட்குண்யபூர்ணனாயிறே யிருப்பது. (அகாத) அகாதப்ய. அர்த்தாந்தரம்-பரிச்சேதிக்க வொண்ணாதிருக்கை. ஒருவரால் நிலைகொள்ள வொண்ணாதிருக்கை.(ஸிந்தவே)காதல்கடலில மிகப்பெரிதென்றும், ஆசையென்னும் கடலென்னும், ஈச்வரனுக்கும் நிலைகொள்ளவொண்ணாதே, தாமதில்புக்கு அமிழ்ந்தபடியாயிருக்கை. அசிந்தியாத்புதாக்லிஷ்டஜ்ஞாநவைராக்ய ராசயே - முனயே - அகாதபகவத்பக்திஸிந்தவே - நாதாய - நம: - ௧.

வ்யா.—தஸ்மை நமஇதி-முதல்ச்லோகத்தாலே பரத்வவிஷயமான ஜ்ஞாநாதிகளுடைய ப்ரகர்ஷம்சொல்லிற்று. இந்தச்லோகத்தாலே அவதாரவிஷயமான ஜ்ஞாநாதிகளாகையாலே அதினுடைய ப்ரக்ருஷ்டதரத்வம் சொல்லுகிறது. அன்றிக்கே கீழ்ச்சொன்ன ஜ்ஞாநாதிகள் தம்மளவில் பர்யவஸியாதே, என்னளவும்வர வெள்ளங்கோத்த தென்னவுமாம். (தஸ்மைநம:) - நமஸ்தஸ்மை - நமஸ்தஸ்மை - என்றும், நமோநமஸ்தேஸ்து ஸஹஸ்ரக்ருத்வ: என்றும் சொல்லுகிறபடியே இன்னமவர்க்கடியே னென்கிறார். (மதுஜித்) அனிருத்தராய் வந்து அவதரித்து முதல்களையான மதுவை நிரஸித்தாற்போலே பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களைப் போக்குமவனென்கை (அங்க்ரி) அந்த ஸ்வபாவத்திலே குணைர்தாஸ்யமுபாகத: என்று பெரியமுதலியார் தோற்றிருக்கும்படி யையும், அவருடைய அநந்யார்ஹ சேஷத்வமும் சொல்லுகிறது. (ஸரோஜ) ஸம்பந்தமில்லாவிடினும் விடவொண்ணாத போக்யதையைச்சொல்லுகிறது. விகாஸம்,செவ்வி, குளிர்ச்சி, பரிமளம் முதலான வற்றுக்கு தாமரையையொருபடிக்குப்போலியாகச்சொல்லலா யிருக்கை. (தத்வஜ்ஞாந) தத்வஜ்ஞாநமாவது-அவதார விஷயஜ்ஞாநமும், ஆச்ருத பாரதந்த்ர்ய விஷயஜ்ஞாநமும். ஜன்மகர்மசமேதிவ்யம் ஏவம்யோவேத்திதத்வத:,த்யக்த்வா தேஹம் புனர்ஜன்மநைதிமாமேதிஸோர்ஜுந - என்றும் தானே அருளிச்செய்தானிறே. தஸ்யதீரா: பரிஜாநந்தியோநிம், அஹத்வாராவ

ச்லோகம்.—பூயோநமோபரிமிதாச்யுதபக்தி
தத்வஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹசுபைர்வசோபி:-
லோகேவதீர்ணபரமார்த ஸமக்ரபக்தி
யோகாயநாதமுநயேயமிநாம்வராய - ௩.

---

ணம்ஸங்க்யே, யத்விநாபாதம்த்வாஞ்ச சத்ருக்நஞ்சாபிமானத - ப
பவென்மமஸ்வகம்கிஞ்சித் பஸ்மஸாத்குருதாம்சிகீ - என்று அருளி
ச்செய்தானிறே சக்ரவர்த்தி திருமகன். அப்யஹம்ஜீவிதம்ஜஹ்யாம்,
ஆத்மானம்நாதிவர்த்தேதா: - இத்யாதி. ( அநுராக ) - அநுராக
மாவது - இவற்றை எல்லாவற்றையு மநுபவித்தாலல்லது நிற்க்க
வொண்ணாதப்ரேமம் (மஹிமாதிசயாந்தஸீம்நே) ஜ்ஞாநாநுராக
ங்களுடைய மஹத்வத்தின்முடிவே எல்லையாயிருக்குமவர்க்கு. மஹி
மா - மஹத்வம் - மநுஷ்யாநந்தமேதுடங்கி, தேயேசதம் என்கிற
க்ரமத்தாலே, ஈச்வராநந்தத்திற்கு எல்லையா யிருக்குமிருப்புப்போ
லே இவருக்கும் தத்வவிஷயப்ரேமத்துக்குஎல்லையாயிருக்குமிருப்பு.
(நாதாய) அஸ்மந்நாதாய - (நாதமுநயே) இத்தர்சனத்துக்கு நாத
னேஎன்றுமதிருதனையன்றி மற்றிலே னென்றிருக்கும் மஹாத்மாக்
களாலேகொண்டாடப்படுவாராயிற்று. தத்வஹிதங்களை திருவுள்ளத்
திலேகூடுபூரிக்குமவர். தஸ்மைநம: என்றந்வயம். உபகாரஸ்ம்ருதியா
லே அவரை ஆதரித்தாராகில். ஐஹிகாமுஷ்மிகங்களுக்கு வேண்டா
வோவென்று பகவதபிப்ராயமாக, அருளிச்செய்கிறார். (அத்ரபரத்ர
சாபி)ஸம்ஸாரத்திலும், ப்ராப்யமான நித்யவிபூதியிலும். (நித்யம்)
நித்தியாக்நிஹோத்ரம்போலன்றிக்கே, அனவரதமென்கை. (யதீய
சரணௌ) -என்னை இவ்வவஸ்தாபந்நனாக்கின திருவடிகள் (சரணம்)
உபாயோபேயங்க ளிரண்டும்.(மதீயம்) - பெரியமுதலியார் திருவடி
களாகி லெனக்கு இரண்டுமாயிருக்குமென்கை. அதாவது - ஸம்ஸாரத
சையிலே பகவானே உபாயமென்று உபதேசித்து, உபாயாத்யவஸா
யத்துக்கடியான ஸ்வாநுக்ரஹத்தாலே பகவத்ப்ராவண்யத்தைவிளை
த்தும். ப்ராப்யதேசத்திலேசென்றால், நித்யஸூரிகள்கோஷ்டியிலே
ப்ரவேசித்தும், பின்பு நித்யஸூரிகளோபாதி உத்தேச்யமாயிருக்
கையாலும் அப்படி சொல்லுகிறது. அத்ரபரத்ரசாபி நித்யம்யதீய
சரணௌ- மதீயம்-சரணம் - மதுஜித்தங்க்ரிசரோஜதத்வஜ்ஞாநாநுராக
மஹிமாதிசயாந்தஸீம்நேநாதாய-தஸ்மை-நாதமுநயேநம: ௨.

வ்யா.—பூயோநம இதி- த்ருஷார்த்தனுக்கு தண்ணீர் குடிக்கக்குடிக்க பர்யாப்தி பிறவாதாப்போலே, பின்னையு மவர்க்கடியேனென்கிறார். ஆச்ரிதரை ஒருக்காலும் நழுவவிடாத அச்ச்யுத விஷயத்திலே ஜ்ஞாநபக்த்யாதிகளாகையாலே, தம்மளவில் பர்யவஸியாதே,பகவத்விஷயத்துக்கு அபூமியானஸம்ஸாரமெங்கும் வெள்ளமிடும்படியான இவருடைய ஜ்ஞாநபக்திகளுடைய ப்ரக்ருஷ்டதையைச்சொல்லுகிறது. (பூயோநம:) புநச்சநம:, நமோநமஸ்தே - என்கிறபடியே. (அபரிமித) - கிடந்தபாயிலே வெள்ளங்கோத்தாப்போலே இருந்தவிடங்களிலே வந்துகிட்டும்படி எல்லையிறந்திருக்கை. (அச்ச்யுத) - நியந்த்ருத்வ ஸ்வாமித்வ கல்யாணகுணங்களாலே குறைவற்றிருக்கையென்னுதல், ஏகரூபமா யிருக்குமேலென்னுதல், என்றும் ஆச்ரிதார்த்தமாயிருக்குமிருப்பை நழுவவிடாதவனென்னுதல்,ஆர்ந்தபுகழச்சுதனென்றும், நமன்றமர்க் கருநஞ்சினையச்சுதன்றனை யென்கிறபடியே ஆச்ரிதரை தந்தாம்கையிலும் பிறர்கையிலும் காட்டிக்கொடாதவனென்னுதல் - (பக்திதத்வஜ்ஞாநாம்ருதாப்தி ப்ரிவாஹசுபைர்வசோபி:) பக்திதத்வஜ்ஞாநங்களாகிற அம்ருதாப்தியினுடைய பரிவாஹரூபமான சுபமானவசஸ்ஸுக்களாலே. உபாய மீச்வரனுகையாலே, ஜ்ஞாநபக்திகள் போகரூபமாய் அபரிச்சின்னமாயிருக்குமென்கை.பரிவாஹமாவது- அவ்வவரக்ஷணார்த்தமாக அதிகஜலநிர்கமனஸ்ரோதஸ்ஸு. வசஸ்ஸுக்களுக்கு சுபத்வமாவது- அவிஸ்தரமஸந்திக்தம் இத்யாதிகளை யுடைத்தாயிருக்கை. (லோகே) பகவத்பக்திக்குமேட்டுமடையானஸம்ஸாரத்திலே. ஸைஷாபார்க்கவீவாருணீ வித்யாபரமேவ்யோமன் ப்ரதிஷ்டிதா என்றபரமபதத்தில் பரிமாறக்கடவபக்தியை, நான்முகனுர் பெற்ற நாட்டுளே நற்பாலுக்குய்த்தன னென்கிறபடியே ஸம்ஸாரத்திலே நடையாடும்படி பண்ணினபடி. (அவதீர்ண) ஈச்வராவதாரம்போலே யிறே ஸ்வயம்ப்ரயோஜனமான பக்த்யவதாரம். (பரமார்த்த) பரம ப்ரயோஜனரூபமாயிருக்கை. (ஸமக்ர) அதனில் பெரிய வென்னும்படி குறைவற்றிருக்கை. (பக்தியோகாய) பக்தியையுடையரான. உத்தமானபக்திதத்வஜ்ஞாநங் களிரண்டையுப் [illegible] சொல்லிற்று, இரண்டுமொருநீரானபடியாலே. (யமினும்வராய [illegible]) - முடியானேயில் சொல்லுகிறபடியே, அவனையல்லதறியாத [illegible] ணங்களையுடையரா யிருப்பார்க்குத் தலைவரானவர்க்கு. வாயவனை [illegible] துவாழ்த்தாது என்றிருக்குமவர்களுக்கு வரணீயராயிருக்கும [illegible] றமாம். அபரிமிதாச்

ச்லோகம்.—தத்வேநயச்சிதசிதீச்வர தத்ஸ்வபாவ
போகாபவர்கததுபாய கதீருதார: -
ஸந்தர்சயந்நிரமிமீதபுராண ரத்னம்
தஸ்மைநமோமுனிவராய பராசராய - ச.

---

யுத பக்திதத்வஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹசுபைர்வசோபிः - லோ
கேவதீர்ண பரமார்த்த ஸமக்ரபக்தி யோகாய யமிஜும்வராய நாத
முனயே பூயோநமः- ௩.

வ்யா.—தத்வேநேதி - பெரியமுதலியார் ஜ்ஞாநத்துக்கு லோ
கபரிக்ரஹமாத்ர மன்றிக்கே, வேதவிதக்ரேஸர பராசராநுமதியா
லே ப்ராமாணிகத்வ முண்டென்று இவ்வர்த்தத்தினுடைய ப்ராமா
ணிகத்வம் சொல்லுகிறது. கிஞ்ச இவர்க்கும்,ஸ்ரீபராசரபகவா னுக்கு
ம், ஸ்வபாவைக்யமுண்டு. க்ருஷ்ணப்ராவண்ணியமும்,லோகத்துக்கு
ப் பண்ணின ஔதார்யமும், இருவர்க்குமுண்டு. அத்தாலும் அவரை
நமஸ்கரிக்கிறார். (தத்வேந) ஜ்ஞாதவ்யார்த்தங்களை யுள்ளபடியே கா
ட்டுகை. (ய:) ஸோஹாவாசவ்யாஸः பாராசர்ய: என்கிற ப்ரமாணப்ர
ஸித்தியை ப்ரகாசிப்பிக்கிறது. ( சித் ) ஜ்ஞாதா அத்ரபராசர:. ஆத்
மாசுத்தோக்ஷரச்சாந்தः நிர்க்குண: ப்ரக்ருதே: பர:. ப்ரவ்ருத்யபச
யௌநாஸ்ய ஏகஸ்யாகிலஜந்துஷு இத்யாதி.யிதில் நிர்க்குணத்வமா
வது-ஸத்வாதிகுணராஹித்யம். ஏகஸ்யாகில ஜந்துஷு-தேவதிர்யங்
மனுஷ்யாக்ய ஸர்வப்ராணிஷு. ஏகஸ்ய-ஜ்ஞாநைகாகாரதயாஸம இ
த்யர்த்த:. நிர்த்தோஷம் ஹிஸமம்ப்ரஹ்ம, பண்டிதாஸ்ஸமதர்சின:
இதிபகவதைவோக்தம் ( அசித் ) அஸம்ஜ்ஞாவத்தான வசேதனம்.
விகாரஜனனீமஜ்ஞா மித்யுபநிஷத். தத்ராபிபராசர: த்ரிகுணந்தத்ஜக
த்யோநி:அநாதிப்ரபவாவ்யயம்.அக்ஷய்யமித்யாதி.(ஈச்வர)உபயோர்
நியந்தாவான ஸ்வாமி. தத்ராபிபராசர:.பரமாத்மாச ஸர்வேஷா மா
தார: பரமேச்வர:, விஷ்ணுநாமாஸவேதேஷு வேதாந்தேஷுசகீ
யதே. பர: பராணும்பரம: பரமாத்மாத்ம ஸம்ஸ்தித:. ரூபவர்ணாதி
நிர்தேசவிசேஷண விவர்ஜித:. ஸர்வத்ரா ஸௌஸமஸ்தஞ்ச வஸத்ய
த்ரேதிவையத:. ததஸ்ஸவா[illegible]தேவேதி வித்வத்பி: பரிபட்யதே இ
த்யாதி. (தத்ஸ்வபாவ)தே[illegible]ஸ்வபாவ:. தத்ரசஸ:. ப்ரதானஞ்சபு
மான் ச்சைவஸர்வபூதா[illegible]தயா. விஷ்ணுசக்த்யாமஹாபுத்தேவ்ரு
தௌ ஸம்ச்ரயதர்மிண[illegible]த்யாதி. (போக) ப்ரஹ்மாதிபிபீலிகா
ந்தமான பத்தசேத[illegible]நுக்கு கர்மாநுகுணமாக தாரதம்யேண

அனுபாவ்யமான சப்தாதிகள். (அபவர்க்க) சப்தாதிகளுடைய அல்பாஸ்திரத்வாதி தோஷதர்சனத்தாலே ப்ரீதரானசேதனருக்கு துஃக நிவ்ருத்திரூபமான ஆத்மப்ராப்தியும், ஸு-கைகதானமான பகவத்ப்ராப்தியும். தத்ராபிஸ- யோகிநாம ம்ருதம்ஸ்தானம் ஸ்வாத்மஸந்தோஷகாரிணம். ததஸ்யத்ரிவிதஸ்யாபி து:க்கஜாதஸ்யஇத்யாரப்ய, நிரஸ்தாதிசயாஹ்லாத ஸு-கபாவைகலக்ஷண-பேஷஜம்பகவத் ப்ராப்திஃ ஏகாந்தாத்யந்தி கீமேதேத்யாதி. (ததுபாயசதீ:) போகமோக்ஷங்களுடைய ஸாதனபேதங்களை. நித்யநைமித்திக காம்யகர்மானுஷ்டானம்போகஸ்ய. ஸாங்கானுஷ்டித கர்மஸாத்யஜ்ஞான யோகாதி ஆத்மப்ராப்தே:. ஜ்ஞாநகர்மானுக்ருஹீதபக்தி: பகவத்ப்ராப்தே:. (உதார:) ஸம்ஸாரிகள்பக்கல் அர்த்தித்வமாதல், ப்ரயோஜனமாதல் நினையாதே, இவர்கள் அனர்த்தபரிஹாரமே ப்ரயோஜனமாக வுபகரித்தல் லது நிற்கமாட்டாதமேகம்போல வுபகரித்தவர். (ஸந்தர்சயன்) ஸம்சயவிபர்யய ரஹிதமாக ப்ரத்யக்ஷியாநின்றுகொண்டு. (நிரமிமீத) அந்தாதிமேலிட் டறிவித்தே னாழ்பொருளை என்கிறபடியே, துரவகாஹமான வேதார்த்தத்தை அல்பக்ரந்தத்தாலே பண்ணினுனென்கை. (புராணரத்னம்) புராணமாவது - ஸர்கச்சப்ரதி ஸர்க்கச்சேத்யாரப்ய,புராணம் பஞ்சலக்ஷண மென்கிறபடியே, பஞ்சலக்ஷணோபேதமான க்ரந்தஜாதம்.புராபிநவம் புராணம்என்றுமாம், அதாவது-ஸ்வரஸத்தை யென்று மொக்க ஒருவரால் அழிக்கவொண்ணுதிருக்கை. (ரத்னம்) அர்த்தப்ரகாசகமாயிருக்கையும், ஸங்க்ரஹமாயிருக்கையும், ஆபத்ரக்ஷகமா யிருக்கையும், இந்தபுராணுதிகாரிக்கு லோகபரிக்ரஹம் ஸித்திக்கையும். (முனிவராய) தனக்குவரங்கொடுத்த வஸிஷ்டபுலஸ்த்யர்களுக்கு முத்ரிதாமுத்ரித ப்ரதிமுத்ரிதராய், அத்தாலே அவர்கள்படியையுடையவ னென்னுதல், முனீநாம் வரணீயாய என்கிறபடியே, அவர்களுக்கு ஆதரணீயனென்னுதல். (பராசராய) பரராகிருர் - பாஹ்யகுத்ருஷ்டிகள், அவரை ப்ரமாணசரங்களாலே ஹிம்ஸித்து,வைதிகமர்யாதையை ஸ்தாபித்தானென்னுதல், இந்த்ரியஜயத்தாலே ரஜஸ்தமஸ்ஸு-க்களை ஜயித்தானென்னுதல். ய:-உதார:- ஜிதஜிதீச்வர தத்ஸ்வபாவபோகாப வர்கததுபாயகதீ:-தத்வேந-ஸந்தர்சயன்-புராணரத்னம்-நிரமிமீத, முனிவராய-தஸ்மை - பராசராய - நம: - ௮.

ச்லோ.—மாதாபிதாயுவதயஸ் தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேந மதன்வயானாம்-
ஆத்யஸ்யந: குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா - ௫.

---

வ்யா.—மாதேதி - இந்தஜ்ஞாநம், அதிக்ருதாதி காரமாய்ப்போகாமே ஸர்வாதிகாரமாம்படி, த்ராவிடமான ப்ரஹ்மஸம்ஹிதையை, மயர்வறமதிநலமருளினனென்கிறபக்தியாலேவாஸிதமாக்கி, மரங்களு மிரங்கும்வகையென்கிற தம்முடைய, ஆகர்ஷகமான ஈரச்சொல்லாலே அருளிச்செய்கையாலும், பெரியமுதலியாருக்கு இந்தஜ்ஞாநத்துக்குத்பாதகம்—ஆழ்வார்திருவடிகளாகையாலும், இவர்திருவடிகளிலேவிழுகிறார். எத்திறமென்றும், நெய்யுண்வார்த்தையுளன்னைகோல்கொள்ளவென்றும், எல்லாம்கண்ணனென்னும் பெரியமுதலியாரையும், ஸ்ரீபராசரபகவானையும்போலே, க்ருஷ்ணகுணவித்தராயிருக்கும்படியையும் நினைத்து, ஆழ்வார்திருவடிகளிலே சரணம்புகுகிறார் - (மாதா) உத்பத்திக்குமுன்னேவரங்கிடந்து பெறுகைக்குவருந்தி பத்துமாஸம் கர்பதாரணம்பண்ணி, ப்ரஸவவேதனையைஅனுபவித்து, அசுத்திகளையும்மதியாதே, பால்யதசையிலாதரித்து, பக்வனானாலும் இவன்பருஷபாஷணம்பண்ணப்பொறுத்து, அகலவிசையாதே, அவன்ப்ரியத்தையேவேண்டியிருக்கும் மாதாவைப்போலே உபகாரகனாயிருக்கை. (பிதா) அவள்பாத்ரமாத்ரமென்னும்படி உத்பாதகனாய், என்றுமொக்கஹிதபரனான பிதாவும். (யுவதய:) இருவரையும் மறந்துவிரும்பும் யுவதிகளைப்போலே நெஞ்சுக்கினியராயிருக்கை. (தநயா:) அவனுடைய யௌவநத்தையழியமாறிப்பெற்றவனாய், பக்வதசையில் ரக்ஷகனாய், ஆமுஷ்மிகத்தில் நிரயநிஸ்தாரகனான புத்ரனைப்போலேயிருக்கை. (விபூதி:) விபவமில்லாதபோது இவையெல்லாம் அஸத்ஸமமாயிருக்கையாலே இவற்றைநன்றாக்கும் ஐச்வர்யம்போலே உத்தேச்யமாயிருக்குமவர். (ஸர்வம்) அனுக்தமான ஸர்வபோகங்களுமாயிருக்கை. (யதேவ) அவதாரணத்தாலே சேலேய்க்கண்ணியரென்றிருக்கும் ஆழ்வார்நினைவின்றியிருக்கை. (நியமேன) என்றுமொக்க அவருக்குப்ரியமென்றுபோமதொழிய ப்ராமாதிகமாகவும் புறம்புபோவதன்றிக்கேயிருக்கை. (மதன்வயானாம்) வித்யாஜன்மனாவா என்று உபயஸந்தானஜாதருக்கும். (ஆத்யஸ்ய) வைதிகஸந்தானத்துக்கு ப்ரதமாசார்யராயிருக்கை. (ந:

ச்லோ.—யன்மூர்த்நிமேச்ருதிசிரஸ்ஸு ச பாதியஸ்மின்
னஸ்மன்மனோரதபதஸ் ஸகலஸ்ஸமேதி -
ஸ்தோஷ்யாமிநஃகுலதனம் குலதைவதந்தத்
பாதாரவிந்தமரவிந்த விலோசனஸ்ய - ௫.

---

குலபதேஃ) ஸ்த்ரீக்கு பர்த்ருகுலம்போலே கோத்ரரிஷிகளும் அவரேயென்கை. (வகுளாபிராமம்) திருமகிழ்மாலையாலே அலங்க்ருதமாயுள்ளத்தை. மகிழலங்காரமான திருவடிகள். இத்தாலே திருவடிகளில் பரிமளத்தாலே வந்தபோக்யதையைச்சொல்லுகிறது. நல்லடிமேலணி நாறுதுழாயை வ்யாவர்த்திக்கிறது. ( ஸ்ரீமத் ) ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே நித்யஸம்யுக்தமா யிருக்கை - அந்தரிக்ஷகதச்ரீமான், ஸ துநாகவர ச்ரீமான், லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பன்னஃ என்றபகவத்ப்ரத்யாஸக்தியை ஐச்வர்யமாகச்சொல்லக்கடவதிறே. என்னுடைய ஸம்பந்தத்துக்கடியான ஐச்வர்யத்தையுடையரென்றுமாம். (ததங்க்ரியுகளம்) அதுவென்னுமித்தனையொழிய, பேசிமுடிக்கவொண்ணாதென்கை. (யுகளம்) சேர்த்தியில்வந்த அழகையுடைத்தாயிருக்கை. (ப்ரணமாமிமூர்த்னா) ஆழ்வாருடையதிருவடிகளை நினைத்தவாறே, நம என்று நிற்கமாட்டாதே, அவர்திருவடிகளிலே தலைசேர்க்கிறார். ஒருவருக்கு சேஷிகளிருவராம்படியிருக்கை யெங்ஙனேயென்னில், க்ரதுசேஷித்வம்யாகத்துக்கும், புரோடாசத்துக்கும்உண்டானாற்போலே, ஈச்வரன்ப்ரதானசேஷியாய், ததீயர்த்வாரசேஷிகளா யிடத்தில் விரோதமில்லை. அதவா—நிருபாதிகசேஷியவன், தத்ஸம்பந்தமடியாகவந்ததாகையாலே பாகவதசேஷித்வம்ஸோபாதிகமென்றுமாம். முதல்மூன்றுச்லோகத்தாலே, பெரியமுதலியாருடைய ஜ்ஞாநபக்த்யாதிக்யம் சொன்னார், நாலாம்ச்லோகத்தாலே, இவ்வர்த்தம் த்ரைவித்யவ்ருத்தானுமதமென்கிறார், அஞ்சாம்ச்லோகத்தாலே, இவருக்கு இந்தஜ்ஞாநம், ஆழ்வாராலேவந்ததென்கிறார். மதன்வயானாம்யதேவநியமே
நமாதாபிதாயுவதயஸ் தநயாவிபூதிஸ்ஸர்வம்ஆத்யஸ்யநஃ குலபதேர்
வகுளாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் - மூர்த்னாப்ரணமாமி - ௬.

வ்யா.—யன்மூர்த்நிஇதி. அறியாதனவறிவித்தவத்தா நீ செய்தனவென்று, உபகாரத்தில் ப்ரதமனாயிருக்குமிறே. வைகுந்தனாகப்புகழ வென்கிறபடியே, தம்முடையஸ்துதி, ஈச்வரனுக்கு அபிமதமாகையாலும், இதுதான் ஆசார்யர்களுக்கு ப்ரியமாகையாலும், ஸ்தோத்ரத்தில் மேல்சொல்லப் புகுகிற வுபாயோபேயங்களை ஸங்க்ரஹித்துக்கொண்டு உபக்ரமித்தபடியே, பகவத்ஸ்தோத்ரத்திலே இழிகிறார்.

(மேன்மூர்த்னியித்யாதி) தம்முடைய நிஹீநதாதிசயத்தையும், ஸௌந்தர்யாதிகளிலேதோற்று, அத்தாலேவந்த சேஷித்வத்தையும், அந்தகாரத்தில்தீபம்போலே தம்முடைய திருமுடியிலேவந்தபின்பு, திருவடிகள் மிகவும் விளங்கினபடியையும் சொல்லுகிறது. இத்தாலவனுடைய வுபாயபாவத்துக் கேகாந்தமான ஸௌலப்யாதிகளையும், இத்தலையில் விஷயீகாரம் தன்பேறாக நினைத்திருக்குமென்றும் சொல்லுகிறது. தலைக்கணியாயென்று சேஷபூதர் ப்ரார்த்திக்குமத்தைப் பெற்றேனென்கிறார். சேஷியாகையாலே ஸர்வவிஷயங்களிலு மவனிருக்கும்படி யிது, க்ருதஜ்ஞராகையாலே பேசுகிறார். (ச்ருதிசிரஸ்ஸுசபாதி) ச்ருதி சிரஸ்ஸுக்களிலும் விளங்காநின்றது. இத்தால், ப்ராப்யத்வமும், ஸர்வாதிகாரத்வமும், ஸர்வமங்களாகாரத்வமும், அதிதுர்லபத்வமும் சொல்லுகிறது. சகாரத்தாலே, வேதாந்தங்களிலும் தம்தலையிலுமொக்க திருவடிகளைத் தரமிடாதேவைத்தபடியாலே, தம்பக்கல் அவனுக்குண்டான ஆதராதிசயஞ்சொல்லுகிறார். சசப்தம் ஜனனமரணத்திலேயாய், தம்முடைய தலையிலே அன்வயித்த ஸௌலப்யமே திருவடிகளுக்கு ஸ்வரூபமென்றதாகவுமாம். திருப்பாற்கடலே யென்றலையே என்னுமாப்போலே. (யஸ்மின்னஸ்மன்மனோரதபதஸ்ஸகலஸ்ஸமேதி) பிதாத்வம்மாதாத்வ மித்யாதிகளான வென்னுடைய ஐஹிகாமுஷ்மிக ஸகலமனோரதங்களும் அழகியதாகயாதொன்றிலே சேருகிறது. (ஸ்தோஷ்யாமி) இப்படிப்ராப்யமுமாய், விலக்ஷணமுமாய், உபகாரகமுமான திருவடிகளிலே வாசிகமான வடிமைசெய்கிறேன். (நஃகுலதனம்) தனமாவது-ஆபத்ரக்ஷகமுமாய், நித்யபோக்யமுமாயிருக்குமது. குலதனமென்கையாலே அயத்னஸித்தமுமாய், ஸ்வதஃ ப்ராப்தமுமாயிருக்கை. (குலதைவதம்) இத்தனத்தைத் தருமதாய் ஆச்ரயணீயமாயிருக்குமது. இத்தால், ஸ்தோத்ரப்ரதிபாத்யமான ப்ராப்ய ப்ராபகங்களைச்சொல்லுகிறது. (தத்பாதாரவிந்தம்) உக்தஸ்வபாவமான திருவடித்தாமரைகளை. (அரவிந்த விலோசனஸ்ய) ஜிதந்தேபுண்டரீகாக்ஷஎன்று ருசிஜனகமுமாய், தன்பால் பணிந்தவென்பால் எம்பிரான் தடங்கண்களென்று வத்ஸலமுமாய், தாமரைக்கண்ணனை விண்ணோர்பரவுந் தலைமகனையென்று ஸூரிபோக்யமுமான திருக்கண்களை யுடையவனுடைய. யன்மூர்த்னி மேச்ருதிசிரஸ்ஸுசபாதியஸ்மின் அஸ்மன்மனோரத பதஸ்ஸகலஸ்ஸமேதி - நஃ குலதனம் குலதைவதம் அரவிந்த விலோசனஸ்ய - தத்பாதாரவிந்தம் - ஸ்தோஷ்யாமி-௯.

ச்லோ.—தத்வேநயஸ்ய மஹிமார்ணவசீகராணுச்
சக்யோநமாதுமபி சர்வபிதாமஹாத்யை:-
கர்தும்ததீயமஹிம ஸ்துதிமுத்யதாய
மஹ்யம்நமோஸ்துகவயே நிரபத்ரபாய- எ.

---

வ்யா.—தத்வேநேதி. விதிசிவஸநகாதிகள் கரைபற்றிலே நின்று அழுந்துகிற விஷயத்தைப் பரிச்சேதித்துப் புகழவிழிந்தேனென்று தம்மைக்ஷேபித்து, யுத்தத்திலே உத்யுக்தனான அர்ஜுனன், விஸ்ருஜ்யஸசரம் சாபம்என்று நிவ்ருத்தனானாப்போலே, ஸ்தோத்ரத்தில் நின்றும் நிவ்ருத்தராகிறார். (தத்வேந) ஈச்வரனுடைய ஸ்வரூபரூபாதிகளிருந்தபடியே. (யஸ்ய) யதாரத்னநிஜலதேரித்யாதிகளிலே அனந்தகுணகனாக ப்ரஸித்தனானவனுடைய. (மஹிமார்ணவசீகராணு:) குணார்ணவத்தினுடைய சீகராணுவானது - திவலையில் ஸ்பர்சவேத்யமானது-அத்யல்பமானது. (மாதுன்னசக்ய:) மனஸ்ஸால்பரிச்சேதிக்கவும் சக்யமன்று ஆராலே யென்னும் அபேக்ஷையிலே சொல்லுகிறது (சர்வபிதாமஹாத்யைரபி) ஈச்வராத் ஜ்ஞானமன்விச்சேத் என்று ஜ்ஞானாதிகனாகவும், ஸர்வ ஸம்ஹர்தா வென்றும் சொல்லுகிற ருத்ரனாலும், அவனை யோதிவித்தவனுமாய், ஜகத்ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவாலும், ஆதிசப்தத்தாலே ப்ரஹ்மபாவனையான ஸநகாதிகளையும், ஸர்வருக்கும் ஹிதானுசாஸனம் பண்ணுகிற வேதத்தையும் நினைக்கிறது. மேலே ஸதாஸ்துவந்த:வேதா: என்றும், விதிசிவஸநகாத்யை ரென்றுஞ் சொல்லுகிறபடியாலே. (ததீயமஹிமஸ்துதிம் கர்துமுத்யதாய) அவனுடைய பெருமையையுள்ளளவும் சொல்லிவிடுகையன்றிக்கே இல்லாததையுஞ்சொல்ல வுத்யுக்தனுகை.(மஹ்யன்னமோஸ்து) இப்படி ஸாஹஸிகனானபடியாலே ஸ்துத்யவிஷயத்தைவிட்டு, எனக்கு நமஸ்காரம். (கவயே) ஸர்வவர்ணனமுகராய். (நிரபத்ரபாய) நிர்லஜ்ஜனா யிருக்கிறவனுக்கு. நாப்புகழ்கை யிவனுக்கு நிறக்கேடாமென்று லஜ்ஜியாதொழிகை. யஸ்ய மஹிமார்ணவசீகராணு: - சர்வபிதாமஹாத்யைரபி - தத்வேந- மாதுன்னசக்ய:, ததீயமஹிமஸ்துதிம் - கர்தும் - உத்யதாய - நிரபத்ரபாய-கவயே - மஹ்யம்நமோஸ்து - எ.

ச்லோ.—யத்வாச்ரமாவதியதா மதிவாப்யசக்தஸ்
தௌம்யேவமேவகலுதேபி ஸதாஸ்துவந்த:-
வேதாச்சதுர்முகமுகாச்ச மஹார்ணவாந்த:
கோமஜ்ஜதோரணுகுலா சலயோர்விசேஷ:- அ

ச்லோகம.—கிஞ்சைஷசக்த்யதிசயேந நதேனுகம்ப்ய
ஸ்தோதாபிதுஸ்துதிக்ருதேநபரிச்ரமேண-
தத்ரச்ரமஸ்துஸுலபோம மமந்தபுத்தேரித்யு
த்யமோயமுசிதோ மமசாப்ஜநேத்ர-௯.

---

வ்யா.—யத்வேதி. இஷுக்ஷயான்னிவர்தந்தே, காணுமளவு
ஞ்செல்லுங் கீர்தியாய் என்று அளவுடையாரும் தந்தாம் ஜ்ஞாந
சக்த்யாதிகளளவும் புகுழ்ந்தார்களத்தனை, உமக்கும் அவ்வளவுபுகிழ்
கைக்குவிரோதமில்லை. ஸாஜிஹ்வாயாஹரிம்ஸ்தௌதி,வாய்ஸ்துதிக்
க்கவன்றேகண்டது. ஸ்தவ்யஸ்தவப்ரிய: என்கிறபடியே ஸ்தோத்
ரம் நமக்கு ப்ரியமன்றேவென்று, யுத்தான்னிவ்ருத்தனான அர்ஜுன
னை, கரிஷ்யேவசனந்தவ என்னப்பண்ணினால்போலே, ஈச்வரன்தா
னேமூட்டஸமாஹிதராகிறார்-(யத்வா)பூர்வபக்ஷநிவ்ருத்தி:. முன்பல்
லோமென்றவிடம் அர்தம்அன்றென்கிறார். (ச்ரமாவதியதாமதிவா)இ
ளைப்பெல்லையாகவாதல்ஜ்ஞாந மெல்லையாகவாதல்என்னுதல் - ஜ்ஞா
நசக்த்யாதிகளளவேஸ்தோத்ரம் பண்ணலாவதென்கை. (அசக்தோபி
ஸ்தௌமி) ஸர்வப்ரகாரத்தாலும் அசக்தனேயாகிலும் ஸ்துதிக்கிறே
ன். (ஸ்தாஸ்துவந்த: வேதாச்சதுர்முகமுகாச்சஏவமேவகலுதேபி) த்
யாஜ்யோபாதேயங்களைப் பிரிக்கைக்கும், த்யாஜ்யத்தைவிட்டு உபா
தேயத்திலே அவகாஹிக்கைக்கும் அடியானஜ்ஞாநசக்த்யாதிகளால் அ
திகரானவர்களும். (ஸ்தாஸ்துவந்த:வேதா:)ஸர்வகாலஸம்யோகத்தை
யுடைத்தானவேதங்களும். (சதுர்முகமுகாச்ச) த்விபரார்தகாலாவதி
கரானப்ரஹ்மருத்ரர்களும் - அதிகாராவஸானத்தளவும் ஸ்துதிக்கி
றஸனகாதிகளும். (ஏவமேவகலு) ஜ்ஞாநசக்த்யாதிகளளவேயிறே. ய
தோவாசோநிவர்தந்தே அப்ராப்யமனஸாஸஹ, யன்னயம்பகவா
ன்ப்ரஹ்மாஜாநாதிபுருஷோத்தமம், மாமலரான்வார்சடையின்வல்
லரேயல்லரேவாழ்த்து, பேசுவா ரெவ்வளவுபேசுவர் அவ்வளவே,
வல்லதோர்வண்ணம், நக்ராஹ்ய: கேநசித்க்வசித். இங்கனேயாகிலும்
உமக்கும் அவர்க்கும்வாசியுண்டேயென்னில், வேதங்களுக்கும், சது
ர்முகாதிகளுக்கும் வாசியுண்டாயிருக்கச்செய்தே, அவனையுள்ளபடி
யே பேசமாட்டாமையொத்தாற்போலே, எனக்கும்அவர்களுக்கும்
வாசியுண்டானாலும், உள்ளபடிபேசமாட்டாமையிலே வாசியில்லை.
எதுபோலேயென்னில், (மஹார்ணவாந்தர்மஜ்ஜதோரணுகுலாசல
யோ: கோவிசேஷ: ) ஸர்ஷபமஹீதரங்களுக்கு நெடுவாசிப்பட
வைஷம்யமுண்டானாலும், பெருங்கடலிலே புக்கமிழ்ந்து மளவில்
விசேஷமில்லையிறே, அதுபோலேயிறே - அ.

வ்யா.—கிஞ்சேதி. ப்ரஹ்மாதிகளில் காட்டில் எனக்குஸ்தோ
த்ரத்திலிழிகைக்கு அதிகஹேது உண்டென்கிறார். பரக்கப்புகழ்கை -
ஈச்வரானுக் ரஹஹேதுவன்றிக்கே ஸ்துதிக்ருதமான பரிச்ரமம் அ
னுக்ரஹஹேதுவாம்படி சீலவானாகையாலே, மந்தபுத்தியான வெ
னுக்கும், அந்தச்ரமம் ஸ-லபமாகையாலே, அவர்களில் காட்டில்
நான் ஸ்தோத்ராதிகாரியென்கிறார். (கிஞ்ச) கீழ்ச்சொன்ன ஸாம்ய
மொழியஸ்தோத்ரத்திலே யவர்களில்க்காட்டில் எனக்கு அதிகாரமு
ண்டென்கைக்கு ஒருஹேதுஉண்டென்கிறார். (ஏஷஸ்தோதா) பகவ
தாபிமுக்யத்தாலே ஸம்ஸாரிகளில் காட்டில் வ்யாவ்ருத்தனாய், வாய்
படைத்தப்ரயோஜநமிதுவென்று, பகவத்ஸதோத்ரத்திலே அதிகரி
த்தவன். (சக்யதிசயே நநகேனுகம்ப்ய:) நம்மைஸ்தோத்ரம்பண்ன
ண சக்தனென்று உனக்கு அனுக்ராஹ்யனாகிறேனல்லேன். (தே) ய
தோவாசோநிவர்த்தந்தே என்றும், தத்விப்ராஸோபிபன்யவ: என்று
ம், வேதங்களும் நித்யஸூரிகளும் புகழ்ந்தெல்லை காணமாட்டாத
மஹிமையை யுடைய வுனக்குப் பரக்கஸ்தோத்ரம்பண்ணுகை தே
ட்டமன்றே யென்னுதல், ஸம்ஸாரிகள் ஆபிமுக்யம் பண்ணுகை
தேட்டமான சீலவானாகையாலே, இவன்பண்ணும் ஸ்தோத்ரம் மி
கையான வுனக்கென்னுதல். (அபிது) மற்றப்படியென்னுதல், பின்
னையெங்ஙனேயென்று ஸானுநயப்ரச்னமாதல் (ஸ்துதிக்ருதேநபரி
ச்ரமேண) உன்னை ஸ்துதிக்கையிலே அத்யாதரத்தைப்பண்ணி, அ
துக்கீடான சக்தியில்லாமையாலே, புகிழவுமாட்டாதே, தவிரவுமா
ட்டாதே படுமிளைப்பாலேயிறே நீ இரங்குவது. (தத்ர) அர்த்தமிப்
படியாய் நின்றவிடத்தில். (ச்ரமஸ்துஸ-லபோமம) எனக்கு விசே
ஷித்த ச்ரமமானது குறைவறவுண்டென்றுமாம். (து) அவதாரண
மாய், எனக்கே குறைவற்ற ச்ரமமுள்ளதென்றுமாம் (மந்தபுத்தே:)
என்று ச்ரமஹேதுவைச் சொல்லுகிறது. அல்பபுத்தியென்கை. (இதி)
இப்படியென்னுதல், ஆகையாலென்று ஹேதுவாகச் சொல்லுதல்.
(அயமுத்யம:)என்றுகொண்டுண்டான இந்தஉத்யமம்(உசிதோமமச)
சசப்தமவ்தாரணமாய் எனக்கேஉசிதமென்னுதல், ஸமுச்சயமாய்,
எனக்குமுசிதமென்று கீழ்ச்லோகத்தோடே கூட்டுதல். (அப்ஜநேத்ர)
அவலோகநதாநேந பூயோமாம் என்றும், உன்தாமரைக்கண்களால்
நோக்காயென்றுஞ் சொல்லுகிறபடியே, அவிக்நேந ஸ்தோத்ரத்தை
த் தலைக்கட்டும்படி யழகியதிருக்கண்களாலே நோக்கியருளவேணு

ச்லோ.—நாவேக்ஷிஷ்யதிததோபுவநாந்யமூநி
நாலம்ப்ரபோபவிதுமேவகுத:ப்ரவ்ருத்தி: -
ஏவம்நிஸர்க்கஸுஹ்ருதித்வயிஸர்வஜந்தோ:
ஸ்வாமிந்நசித்ரமிதமாச்ரிதவத்ஸலத்வம் - க0.

---

மென்னுதல், ஸ்தோத்ரத்தில் நிலைநின்றபடியைக்கண்டு, செந்தாமரைக்கண்ணொநீம் மறப்பறவென்னுள்ளே மன்னினானென்கிறபடியே ப்ரீதியாலே திருக்கண்கள் குளிர்ந்தபடியைச்சொல்லுதல் - கூ.

வ்யா.—நாலேக்ஷஸஇதி. இப்படிஸ்தோத்ராக்ஷேபஸமாதானத்தைப்பண்ணி, ஈச்வரனுடைய சரண்யதைக்குறுப்பான பகவத்பரத்வத்தை, மேலஞ்சுச்லோகத்தாலே அருளிச்செய்கிறார். இதில், முதல்ச்லோகத்தாலே, ஸத்ப்ரஹ்மாதிஸாமான்யவாசி சப்தங்களாலே ஜகத்காரணதயாப்ரதிபாதிக்கப்படுகிறான் நாராயணனென்று, கதிசாமான்யந்யாயத்தாலே காரணவாக்யவிஷயமான பரத்வத்தை அருளிச்செய்கிறார். ஸ்தோத்ரம்பண்ண உபக்ரமித்தவாறே, வாத்ஸல்யஜன்யமான விசேஷகடாக்ஷத்தைப் பண்ணினானென்கிறவிது - ப்ரளயகாலத்திலே பசித்கல்பரான சேதனரை தயமானமனாவாய்க்கொண்டு விசேஷகடாக்ஷத்தைப் பண்ணி யுண்டாக்கி, அந்தஜந்துக்களுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஹேதுவாய், உபகாரகனானவுனக்கு ஸ்ருஷ்டமானஜந்துக்கள் ஆபிமுக்யம்பண்ண முகங்கொடுத்தாயென்கிற விது ஆச்சர்யமோவென்கிறாரென்றுமாம். (நாவெக்ஷிஷ்யதி) ததைக்ஷதபஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி என்று அஸித்கல்பரானசேதநரைக்கடாக்ஷித்திலையாகில், அநாதிகாலம் பண்ணிப்போந்த அபராதங்களைப்பாராதே, அவற்றினுடைய துர்க்கதியைப்பார்த்து க்ருபாபரதந்த்ரனாயிறே அப்போதேகடாக்ஷித்தது. அல்லது உன்னைக்கடாக்ஷித்திலையே யென்பாரில்லையே. (தத:) பஹுஸ்யாம் என்கிற ஸங்கல்பத்துக்குப்பின்பு புவனஸ்ருஷ்டிக்கு முன்புண்டானதாரத்தைசொல்லுகிறது. (அமூனிபுவநாநிபவிதுமேவநாலம்) போகமோக்ஷங்களை ஸாதித்துக்கொள்ளுகைக்கேகாந்தமான சதுர்தசபுவனங்களானவை யுண்டாகவேமாட்டாது. வ்யதிரேகநிர்த்தேசம், அர்த்தஸ்தைர்யத்துக்காக-கோஹ்யேவாந்யாத்க: ப்ராண்யாத், நததஸ்திவிநாயத்ஸ்யாத் மயாபூதஞ்சராசரம், என்னக்கடவதிறே. (குத: ப்ரவ்ருத்தி:) உன்ஸங்கல்பமொழிய வுண்டாகமாட்டாத இவை ப்ரவ்ருத்திப்பதெத்தாலே. ஸகலோத்பத்தியும், ப்ரவ்ருத்திநிவ்ருத்தியும்,

ச்லோ.—ஸ்வாபாவிகாநவதிகாதிசயே சித்ருத்வம்
நாராயணத்வயிநம் ம்ருஷ்யதிவைதிகஃக: -
ப்ரஹ்மாசிவச்சதமகஃ பரமஸ்வராடி
த்யேதேபியஸ்யமஹிமார்ணவ விப்ருஷஸ்தே-கக.

உன்னுடைய கடாக்ஷபலமன்றேவென்கை. (ப்ரபோ) ஜகத்காரணத் வப்ரயுக்தமான ஐச்வர்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது. (ஸர்வஜந்தோரே வந்திஸர்க்கஸ-ஹ்ருதித்வயி) நித்யவிபூதியுண்டாயிருக்க, இவற்றை யிழக்கையாலே, ஏகாகீநரமேத - என்னும்படி தனிமைப்பாடாய், ப்ரஹ்மருத்ராதி ஸ்தாவராந்தமான ஜந்துஜாதத்துக்குக் காணகளே பரங்களைக்கொடுத்துக் குறைதீர்த்தாயென்னும்படி அகாரணஸ-ஹ்ருத்தான உன்பக்கல். (ஸ்வாமின்) இவற்றையுண்டாக்குகிற விது உன் பேறாகவேண்டிற்று, இவற்றேறுண்டான குடல்துடக்கிறே. ஸ்வமுத் திச்ய-உபாதத்தேஎன்றிறே அபியுக்தர்வார்த்தை. ஸ்வவ்யதிரிக்தஸக லசேதநாசேதனங்களும் உனக்கு அனன்யார்ஹசேஷமான ஸ்வாமி த்வத்தையுடையவனே. (இதமாச்ரிதவத்ஸலத்வம்நசித்ரம்) ஸக லவாங்மனஸா கோசரமான த்வத்விஷயஸ்தோத்ரத்துக்கு யோக்ய னும்படி யென்பக்கலுண்டான வத்ஸலத்வம், உனக்காச்சர்யமோ. கிமத்ரசித்ரமித்யாதி. ஜகத்காரணத்வத்தாலே ஸர்வோத்க்ருஷ்டனெ ன்றும், காரணந்துத்யேயஃ என்கையாலே ஸர்வஸமாச்ரயணீயனெ ன்றும், ஏஷஹ்யேவாநந்தயாதி என்கையாலே ப்ராப்யனென்றும், ஸ்ருஷ்ட்யாதிகளை தன்பேறாகப்பண்ணுகையாலே ஸர்வஸ்வாமியெ ன்றும், தாம் ஸ்தோத்ரத்திலே மூளும்படி முகங்காட்டுகையாலே ஆச்ரிதவத்ஸலத்வமும்சொல்லித்தாயிற்று - கO.

வ்யா.—(ஸ்வாபாவிகாநவதிகாதிசயேசித்ருத்வம்) இத்தால் பரத்வலக்ஷணம் சொல்லுகிறது.

ஸ்வாபாவிகேதி. கீழ்கதிஸாமான்யந்யாயத்தாலே, நாராயண னே ஸர்வஸ்மாத்பரனென்றது. இதில், விசேஷவாசியான சிவசம்ப் வாதிவாக்யங்களாலும் ப்ரதிபாதிக்கப்படுகிறான் - நாராயணனேயெ ன்று ஸர்வவேதாந்த வ்யாக்யாநமாய், அனன்யபரமான நாராயணா னுவாக ஸித்தமான பகவத்பரத்வத்தை அருளிச்செய்கிறார். (ஸ்வா பாவிகசப்தத்தாலே, கர்மோபாதிகமாய், அத்தாலே அநித்யமாய் துஃக

கமிச்ரமான ப்ரஹ்மாதிகள் ஐச்வர்யத்தை வ்யாவர்த்திக்கிறது-அநவதிகாதிசயசப்தத்தாலே,நித்யரையும்முக்தரையும் வ்யாவர்த்திக்கிறது. ஸஸ்வராட்பவதி என்றும், ஸத்யகாமః ஸத்யஸங்கல்பః என்றும், நித்யமுக்தவிஷயமான ஐச்வர்யங்களும் பகவதாயத்தமாய் ஸாவதிகங்களுமாயிருக்கையாலே. ஈசித்ருத்வம் என்கிற அஸாதாரண ஸ்வரூபநிர்த்தேசத்தாலே,நிர்விசேஷசின்மாத்ரம் வஸ்துவென்றபௌத்தகதிகளான வேதாந்திகளைவ்யாவர்த்திக்கிறது.(நாராயண)ஸப்ரஹ்மாதி ஸாமான்யவாசி சப்தங்களையும்,விசேஷவாசியான சிவசம்ப்வாதிசப்தங்களையும் நாராயணன்பக்கலிலே வ்யவஸ்தாபிக்கிற நாராயணனுவாகம்,சொல்லுகிறவிவ்வர்த்தத்தில் ப்ரமாணமென்றுப்ரத்யபிஜ்ஞைபண்ணப்படுகிறது. (த்வயி) ஸர்வவேதாந்தங்களிலும் ஸர்வாதிகனாகப்ரதிபாதிக்கப்படுகிறவனாய், இவ்வாத்மாவுக்குவகுத்தவனான உன்பக்கலிலே - (நம்ருஷ்யதி) உக்தமான ஐச்வர்யத்தைப்பொறுதேயொழிகிறவன். (வைதிகஃக:)அப்ராஹ்மணஇத்யர்த்தஃ. யோவிஷ்ணும் ஸததம்த்வேஷ்டி, விஷ்ணுபக்திவிஹீநோயஃ ஸர்வசாஸ்ரார்த்தவேத்யபி.ப்ராஹ்மண்யம்தஸ்யநபவேத் தஸயோத்பத்திர்நிரூப்யதாம்,இத்யாதி,ஹிரண்யகர்பஸ்ஸமவர்த்ததாக்ரேபூதஸ்யஜாதஃபதிரேகஆஸீத் நகிரிந்தரத்வதுத்தரஃ, ஏகஎவருத்ரோநத்விதீயாய்தஸ்தே இத்யாதிகளிலே ப்ரஹ்மருத்ராதிகளுக்கு ஸர்வேச்வரத்வம் ஓதாநிற்க, சிவசம்ப்வாதிசப்தம் நாராயணனே ப்ரதிபாதிக்கிறதென்னென்று,இப்ரமாணங்களளவில் அபர்யவஸித்தவன் வைதிகனல்லனென்று, க்ஷேபித்தபடியெங்கனேயென்னில்,ஸப்ரஹ்மாஸசிவஸ்ஸேந்த்ரஃ- இத்யாதிகளிலே பரிஹரித்ததென்கிறது உத்தரார்த்தம். ப்ரஹ்மருத்ரர்களோடே ஸம்ப்ரதிபன்னக்ஷேத்ரஜ்ஞரான இந்த்ரனையும், பாரதந்த்ர்யமேஸ்வரூபமான முக்தாத்மஸ்வரூபத்தையும் ஸமபிவ்யாஹரிக்கையாலே, அவர்களுடைய அனீச்வரத்வம் ஸம்ப்ரதிபன்னமென்கிறது. (ஏதேபி)இச்லோகத்திலே ஈச்வரதயாப்ரஸித்தரான இவர்களும் சேஷபூதராகஸம்ப்ரதிபன்னரான இவர்களும். (யஸ்ய)நாராயணபராவேதாஃஎன்று ஸர்வவேதாந்தப்ரஸித்தியைநினைக்கிறது. (மஹிமார்ணவவிப்ருஷஸ்தே) ஸர்வேச்வர மஹிமையாகிற கடலிலே ஒருபிந்துமாத்ரமென்று நாராயணனுவாகந்தானே பரிஹரியாநின்றதென்கிறார். யஸ்யதேஎன்று ச்ருதிப்ரஸித்தியையும், தமக்கு இவ்வர்த்தத்திலுண்டான ஸாக்ஷாத்காரத்தையும் அருளிச்செய்கிறார்-கக.

ச்லோ.—கச்ரீச்ரிய:பரமஸத்வஸமாச்ரய:க:
க:புண்டரீகநயந:புருஷோத்தம:க: -
கஸ்யாயுதாயுதசதைககலாம்சகாம்சே
விச்வம்விசித்ரசிதசித்ப்ரவிபாகவ்ருத்தம் - கஉ.

வ்யா.—கஸ்ரீஸ்ரிய:. இதில்,விப்ரதிபத்திக்ஷமங்க ளன்றியிலே,தனித்தனியே பூர்ணமாய் வஸ்துஸாமர்த்யாபர நாமமானலிங்கங்களிலேபரத்வத்தை அருளிச்செய்கிறார். (கஸ்ரீஸ்ரிய:) ஈச்வரவ்யதிரிக்த ஸகலசேதநாசேதனரும், தந்தாமுடைய ஸ்வரூபஸ்தித்யாதிகளுக்காகப் பற்றவேண்டும்படியான மேன்மையுடைத்தானபிராட்டியும், தன்னுடைய ஸ்வரூபஸ்தித்யாதிகளுக்காகப் பற்றவேண்டும்படியான மேன்மையை யுடையார் உன்னையொழிய ஆர். கிம்க்ஷேபே. ஆர்த்தமாக வில்லையென்றபடி. ஈச்வரீம் ஸர்வபூதாநாம், அஸ்யேசாநாஜகதோ விஷ்ணுபத்னீ, திருவுக்கும் திருவாகிய செல்வனென்னக்கடவதிறே. ( பரமஸத்வஸமாச்ரய:க: ) பரமசப்தத்தாலே ரஜஸ்தமஸ் ஸங்கங்களையும், அத்தோடு ஸமமிவ்யா ஹ்ருதமான ஸத்வத்தையும் வ்யாவர்த்திக்கிறது. சுத்தஸத்வத்துக்காச்ரயமான விக்ரஹாதிகளையுடையவனுர்-மஹான்ப்ரபுர்வைபுருஷ:ஸத்வஸ்யைஷப்ரவர்த்தக:,ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாதிதி. (க:புண்டரீகனயந:) ஸ்வானுபவாநந்தத்ருப்தியாலும், ஆச்ரிதார்த்தநீர்மைகளுக்கு ப்ரகாசகமாயும் ஸர்வேச்வரத்வஸூசகமான திருக்கண்களையுடையவனுர். தஸ்யயதா-புண்டரீகமேவமக்ஷிணீ - மஹாவராஹஸ்புடபத்மலோசந:, ஜிதந்தேபுண்டரீகாக்ஷ, தாயாயளிக்கின்றதண்டாமரைக்கண்ணு.(புருஷோத்தம:க:) உன்னையொழியபுருஷாணாமுத்க்ருஷ்டதமராயிருக்கிறாார். யஸ்மாத்க்ஷரமதீதோஹமித்யாரப்ய, அதோஸ்மிலோகேவேதேசப்ரதித: புருஷோத்தம: என்று ஆப்தரானதேவரீரே அருளிச்செய்திலீரோ.(கஸ்யாயுதேத்யாதி விசித்ரசிதசித்ப்ரவிபாகவ்ருத்தம் விச்வம்கஸ்யாயுதாயுதசதைககலாம்சகாம்சே)சிதசித்விபாகத்தாலும்வர்த்திக்கிற இந்தஜகத்விசித்ரமாய்க்கொண்டு, ஆருடையஸங்கல்பசதஸஹஸ்ராயுதைகதேசத்தில்வர்த்திக்கிறது.விசித்ரமான அசித்தானது- அத்யந்தம்பின்னமான ஆகாசாதிகள். சேதனவைசித்ர்யமாகிறதுகர்மத்தால்வந்த சதுர்விதசரீரங்களும்,தத்போக்யாதிகளும்.அம்சமென்று காலோபாதிக்கும் அல்பார்த்தத்திலே. பாதோஸ்யவிச்வாபூதாநி,யஸ்யாயுதாயுதாம்சாம்சே,மேரோரிவாணுர்யஸ்யைதத், இதம்க்ருத்ஸ்நம்ஏகாம்சேநஸ்திதோ ஜகதித்யாதி - கஉ.

ச்லோ.—வேதாபஹாரகுருபாதகதைத்யபீடா
த்யாபத்விமோசனமஹிஷ்டபலப்ரதானை: -
கோந்ய:ப்ரஜாபசுபதீ பரிபாதிகஸ்ய
பாதோதகேநஸசிவஸ் ஸ்வசிரோத்ருதேந-கரு.

வ்யா.—வேதாபஹாரேதி. இதிஹாஸபுராண ப்ரக்ரியையாலே ப்ரஹ்மருத்ராதிகளுடைய க்ஷேத்ரஜ்ஞத்வத்தையும், பகவத்பாரத் வத்தையும் அருளிச்செய்கிறார். (வேதாபஹார) யோவைவேதாம்ச் சஎன்று ப்ரஹமாவுக்குவேதசக்ஷுஸ்ஸைக்கொடுக்க,அது அஸுரர்க ளாலே அபஹ்ருதமாக,ப்ரஹ்மாவேதத்தையிழந்து துஃக்காந்தர்நிமக் னனானவளவிலே,விரோதிகளையழியச்செய்துமீட்டுக்கொடுத்தவுபகா ரத்தைச்சொல்லுகிறது. ததோஹ்ருதேஷுவேதேஷு ப்ரஹ்மாணங்க ச்மலோவிசத்-ததோவசனமீசானம் ப்ரஹ்மாவேதைர்விநாக்ருத:- ப்ரஹ்மா. வேதாமேபரமம்சக்ஷு: வேதாமேபரமம்தனம். வேதா மேபரமம்தா மவேதாமேப்ர ஹ்மசோத்தமம் - ததோவேதாஹ்ரு தாஸ்ஸர்வேதானவாப்யாம் பலார்திதா:-அந்தகாரா இமேஜாதாலோ காவேதைர்விவர்ஜிதா:.வேதாச்ருதேஹி கிம்குர்யாம் லோகான்வை ஸ்ரஷ்டுமுத்யத:. அஹோபதமஹத்துஃக்கம் வேதநாசநஜம்மமப் ராப்தம்துனோதி ஹ்ருதயம்மாந்துசோகாயந்த்ரயத் - ஜக்ராஹவே தாநகிலான் ரஸாதலகதான்ஹரி:- ப்ராதாச்சப்ரஹ்மணேராஜன்ததஸ் வாம்ப்ரக்ருதிம்யயௌ - ததஸ்தயோர்வதேநாசு வேதாபஹாரணே நச - சோகாபனயநம்சக்ரே ப்ரஹ்மண புருஷோத்தம: - இத்யாதி. (குருபாதக) ருத்ரன் லோககுருவும் பிதாவுமாயிருக்கிற ப்ரஹ்மா வை துர்மானமேஹேதுவாக தலையையறுத்து பாதகியான பாதகத் தையும்போக்கித், தலையறுப்புண்ட ப்ரஹ்மாவையும் ஜீவிக்கும்படி பண்ணி ரக்ஷித்தபடி. ஸ்ரீமாத்ஸ்யே தேவீம்ப்ரதிருத்ர:- தத:க்ரோத பரீதேந ஸம்ரக்தநயநேநச. வாமாங்குஷ்டநகாக்ரேணசின்னம்தஸ் யசிரோமயா. ப்ரஹ்மா - யஸ்மாதனபராதஸ்ய சிரச்சின்னம் த்வ யாமம - தஸ்மாத்சாபஸமாவிஷ்ட: கபாலீத்வம்பவிஷ்யஸி. ப்ரஹ் மஹாகுபிதோபூத்வாசரந்தீர்தானிபூதலே. ததோஹம்கதவான்தேவி ஹிமவந்தம்சிலோச்சயம் - தத்ரநாராயணச்ச்ரீமான் மயாபிக்ஷாம் ப்ரயாசித:. ததஸ்தேநஸ்வகம்பார்ச்வம் நகாக்ரேணவிதாரிதம். மஹ தீஸ்ரவதிதாரா தஸ்யரக்தஸ்யநிஸ்ஸ்ருதா - விஷ்ணுப்ரஸாதாத்ஸுச் ரோணி கபாலந்தத்ஸஹஸ்ரதா - ஸ்புடிதம்பஹுதாயாதம்ஸ்வப்

ச்லோ.—கஸ்யோதரே ஹரவிரிஞ்சிமுக꞉ப்ரபஞ்ச꞉
கோ ரக்ஷதீமமஜநிஷ்ட சகஸ்ய நாபே꞉ -
க்ராந்த்வா நிகீர்ய புனருத்கிரதி த்வதந்ய꞉
க꞉ கேந வைஷபரவானிதி சக்ய சங்க꞉ - கச.

---

நலப்தந்த நம்யதா இத்யாதி. (தைத்யபீடாத்யாபத்விமோசன) ஹி
ரண்யராவணாதிகளென்ன, த்ரிபுரத்திலே அஸுரர்களென்ன, ஆதி
சப்தத்தாலே துர்வாஸச்சாபாதிகளை நினைக்கிறது, இவர்களாலே தே
வதைகளுக்கு வருமாபத்தைப்போக்கி. (மஹிஷ்டபலப்ரதானை꞉)
க்ஷேத்ரஜ்ஞத்வேந ஸம்ப்ரதிபன்னரான அவர்களுக்கு ஸ்வஸமாரா
தனத்தாலே லோகமடங்க ஈச்வரனென்று கொண்டாடும்படியா
ன பதங்களைக்கொடுத்தபடியாலே. யுககோடிஸஹஸ்ரேஷு விஷ்ணு
மாராத்ய பத்மபூ꞉ புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம்ப்ராப்தவானிதிசுச்
ரும - ப்ரஹ்மாதயஸ்ஸுராஸ்ஸர்வே விஷ்ணுமாராத்ய தே புரா -
ஸ்வம் ஸ்வம் பதமனுப்ராப்தா꞉ கேசவஸ்ய ப்ரஸாதத꞉ - ஏவமேஷாம்
ஸுராணாஞ்சாஸுராணாஞ்சாபி ஸர்வச꞉-பயாபயங்கர꞉ க்ருஷ்ண꞉ ஸர்
வலோகேச்வர꞉ ப்ரபு꞉ - (கோன்ய இத்யாதி) ப்ரஜாபசுபதிகளைதந்தா
மால் வந்த ஆபத்துக்களோடு பிறரால்வந்த ஆபத்துக்களோடுவாசி
யறஸாகல்யேந ரக்ஷிக்கிறான் மற்றெவன் (கஸ்ய பாதோதகேநேத்யா
தி) ஆருடைய திருவடிகளினின்றும் விழுந்தஜலத்தை ஜடையிலே தரிக்
கையாலே அந்தருத்ரன் சிவனுயிற்று-சுத்தனுயிற்று. அவன் அசுத்தியை
விளைத்துக்கொள்ளவும், அவனை சுத்தனுக்கும்பரமபாவனனுமொ
ழியவேறு ஆர்தான். த்ரவீபூதஸ்ததா தர்மோ ஹரிபக்த்யா மஹாமு
னே. க்ருஹீத்வா தர்மபானீயம் பாதம் நாதஸ்ய துஷ்டயே-க்ஷாளிதம்
பரயா பக்த்யா பாத்யார்க்யாதிபிரர்சிதம். ததம்பு பதிதம் த்ருஷ்ட்வா த
தார சிரஸா ஹர꞉-பாவனார்த்தம் ஜடாமத்யே யோக்யோஸ்மீத்யவதா
ரணாத்- வர்ஷாயுதான்யதபஹூ-ன் நமுமோசத தா ஹர꞉ சதுர்முகனி
த்யாதி நலந்திகழ்சடையான்முடிக்கொன்றைமலரும் நாரணன்பா
தத்துழாயும் கலந்திழிபுனல் - கரு.

வ்யா.—கஸ்யோதரே. ப்ரமாணானுகூலமானதர் கஞ்யந்யா
யத்தாலே உத்தமான பரத்வத்தை நிகமிக்கிறார். (கஸ்யோதரே ஹ
ரவிரிஞ்சிமுக꞉ப்ரபஞ்ச꞉) ப்ரஹ்மருத்ரமுகமான ஸகலபதார்த்தங்க
ளும் மஹாப்ரளயத்திலே, ஆருடைய பக்கலிலே லயித்திருக்கிறது.
ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்-என்கிறபடியே த் விபரார்தகாலம் நா

மரூபங்களையிழந்து,தம-ஏகீபவதி என்கிறபடியே,ஸர்வேச்வரன் பக்
கலிலே கிடக்கிறபடி. ப்ரஹ்மாதிஷுப்ரலீநேஷு நஷ்டேலோ
கேசராசரே - ஆபூதஸம்ப்லவேப்ராப்தே ப்ரலீநேப்ரக்ருதௌம
ஹான் - ஏகஸ்திஷ்டதிவிச்வாத்மா ஸதுநாராயண:ப்ரபு: - இத்யாதி.
ஸம்ஹாராதிகளிலே கர்மீபவிக்குமிடத்தில் ப்ரஹ்மாதிகளோடு பிபீ
லிகாதிகளோடு வாசியில்லையென்கை. (கோரக்ஷதி) ஹரவிரிஞ்சி
முகமான ப்ரபஞ்சத்தை ரக்ஷிக்கிறார் ஆர். நஹிபாலநஸாமர்
த்யம் ருதேஸர்வேச்வரம்ஹரிம் - நஸம்பதாம்ஸமாஹாரே விபதா
ம்விநிவர்த்தநே. (அஜநிஷ்டசகஸ்யநாபே:) மஹாப்ரளயத்திலே அ
விபக்தமாய்கிடக்கும் ப்ரபஞ்சம்யாருடைய குக்ஷியினின்றும் உத்
பன்னமாயிற்று. மஹாபாரதேமார்க்கண்டேய ஸமாக்யாநே.ஸ்ருஜ
தஸ்தஸ்யதேவஸ்ய பத்மம்ஸூர்யஸமப்ரபம் நாப்யாம்விநிஸ்ஸ்ரு
தந்தஸ்ய தத்ரோத்பன்ன: பிதாமஹ:. ஸுபர்ண வைகுண்டஸம்வா
தே- யத்தத்பத்மமபூத்பூர்வம்தத்ரப்ரஹ்மாவ்யஜாயத- ப்ரஹ்மணச்
சாபிஸம்பூதச்சிவ இத்யவதார்யதாம். சிவாத்ஸ்கந்தஸ் ஸம்பூவஏதத்
ஸ்ருஷ்டிசதுஷ்டயம் இத்யாதி. (க்ராந்த்வா) ப்ரஹ்மாதிஸ்தாவராந்த
மான எல்லார்தலைகளிலும் வைத்தவனார். திருவடியைத்தலையிலே வை
த்தவனோ, திருவடியின்கீழே துகையுண்டவனோ ஈச்வரனென்கிறார்.
ஸங்கைவஸ்ஸுராணாமித்யாதி. (நிகீர்யபுனருத்கிரதி) அவாந்தரப்ரளய
விஷயம். (த்வதன்ய:க:) இப்படி ஸர்வப்ரகாரரக்ஷகர் உன்னையொழி
யமற்றார். (கேநவைஷ்பரவாநிதிசக்யசங்க:) இதராலே பரதந்த்ர
மென்றும் சக்யசங்கமாயிருக்கிறதோ. ஸந்திக்தேகலுந்யாய:ப்ரவர்த
தே. வேறேசில்லரை ஸம்சயிக்கைக்கு ஸம்பாவனையேயில்லையென்கை.
ஒருவன்ஜனகன் ஒருவன்ஜந்யனாய், ஒருவன்சேஷியாய் ஒருவன்சேஷ
னாய், ஒருவன்ஸ்ரிய:பதியாய் ஒருவன் உமாபதியாய், ஒருவன் புண்டரீ
காக்ஷனாய் ஒருவன்விரூபாக்ஷனாய், ஒருவன்கருடவாஹனனாய் ஒருவ
ன்வ்ருஷபவாஹனனாய், ஒருவன்பாசகியாய் ஒருவன் சோதகனாய்,
ஒருவன்புருஷோத்தமனாய் ஒருவன்புருஷனாய்,ஒருவன்சிரஸ்தித பா
தபங்கஜனாய் ஒருவன் பாதபாம்ஸுமாத்ரமாய், ஒருவன்ஸூரித்
ருச்யனாய் ஒருவன் வேதாளத்ருச்யனாய், இப்படி தம:ப்ரகாசங்கள்
போலே,ருத்ரனுக்கும் ஸர்வேச்வரனுக்கும் நெடுவாசியுண்டாகையா
லே, ருத்ரனுக்கு அஸ்மதாதிகளோபாதி க்ஷேத்ரஜ்ஞதையாலே ஈச்வ
ரத்வ சங்கையில்லை. ப்ரஹ்மாவுக்கும் ஸமான ந்யாயத்தாலே ஈச்
வரத்வ சங்கையில்லை யென்றதாயிற்று - கச.

ச்லோ.—த்வாம்சீலரூபசரிதை: பரமப்ரக்ருஷ்டஸத்வேந
ஸாத்விகதயாப்ரபலைச்சசாஸ்த்ரை:-
ப்ரக்யாததைவபரமார்த்தவிதாம்மதைச்சநைவா
ஸுரப்ரக்ருதய:ப்ரபவந்திபோத்தும் - கரு.

---

வ்யா.—த்வாம்சீலேதி. நாவேக்ஷஸேயில், வேதாந்தப்ரதமபா தோக்த்த காரணத்வம்சொல்லுகிறது. ஸ்வாபாவிகத்தில், குணோபஸம்ஹாரபாதார்த்தம் சொல்லுகிறது. கஸ்ரீஸ்ரீயில், த்ரிபாதத்தில் அர்த்தம்சொல்லுகிறது. வேதாபஹாரத்தில், உபப்ருஹணமான அர்த்தம்சொல்லுகிறது. கஸ்யோதரத்தில், ப்ரமாணுனுக்ருஹீததர்கஸித்தபரத்வம்சொல்லுகிறது. இனிஇதில், இப்படித்ரடப்ரமாணஸித்தமாயிருக்க,ஆஸுரீம்யோநிமாபன்னு:என்கிறபடியே ஆஸுரப்ரக்ருதிகள் அவனைஇழப்பதேயென்று, அவர்கள் இழவுக்கின்னுதாகிறூர். அதவா, யாருமோர்நிலைமையனென வறிவரிய வெம்பெருமான் என்று துஷ்ப்ரக்ருதிகள் கண்படாதொழியப்பெறுவதே இவ்விலக்ஷணவிஷயமென்றுமாம். ( த்வாம் ) ஸர்வாதிகனுய் இவ்வாத்மாவுக்கு வகுத்தவுன்னை. ( சீல ) மஹதோமந்தை:. நாவேக்ஷஸே என்கிற ச்லோகத்தில் சொல்லுகிற ஸ்வபாவம். அதாகிறது-ஸர்வாதிகனுயிருந்துவைத்து, பஹுஸ்யாம் என்கிறபடியே இவற்றி னிழவுபேறுதன்னதாய்,அபிமானியுந்தானேயாயிருக்கை. (ரூப) க:புண்டரீகநயந: என்கிறவடிவு. ஹிரண்மய: புருஷோத்ருச்யதே - தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ - நீலதோயதமத்யஸ்தா, நபூதஸங்கஸம்ஸ்தாநோ தேஹோஸ்யபரமாத்மன:, நதஸ்யப்ராக்ருதாமூர்த்தி: மாம்ஸமஜ்ஜாஸ்திஸம்பவா இத்யாதி. (சரிதை:) க்ராந்த்வாநிகீர்யபுனருத்கிரதிஎன்றும்,வேதாபஹாரகுருபாதகவென்றும் சொல்லுகிற அதிமானுஷசேஷ்டிதங்களாலும். (பரமப்ரக்ருஷ்டஸத்வேந) பரமஸத்வஸமாச்ரய:க: என்று சுத்தஸத்வமயமான விபூதியோகத்தாலும், க்ஷயந்தமஸ்யரஜஸ:பராகே.தம ஸ:பரஸ்தாத், ஸ்வஸத்தாதாரகம் ஸத்வம்மிச்ரஸத்வாத் விலக்ஷணம் இத்யாதி. (ஸாத்விகதயா ப்ரபலைச்சசாஸ்த்ரை:) வேதத்தில் ஸாத்விகருக்கு ஹிதானுசாஸனம்பண்ணும் ஜ்ஞாநபாகத்தாலும், அக்நேச்சிவஸ்யமாஹாத்ம்யம் இத்யாரப்ய, ஸாத்விகேஷ்வதகல்பேஷு மாஹாத்ம்யமதிகம்ஹரே:. என்று ஸ்ரீமாத்ஸ்யபுராணத்திலே ஸத்வோத்ரிக்தனுன ப்ரஹ்மாவின் வாக்யமாகையாலே, ப்ரபலமான சாஸ்த்ரங்களாலும், (ப்ரக்யாத

ச்லோ.—உல்லங்கிதத்ரிவிதஸீமஸமாதிசாயி
ஸம்பாவனந்தவபரிப்ரடிமஸ்வபாவம் -
மாயாபலேநபவதாபிநிகூஹ்யமானம்
பச்யந்திகேசிதநிசம்த்வதநந்யபாவா: - கசு.

---

தைவபரமார்த்தவிதாம்மதைச்ச) ப்ரக்யாதமானதைவத்தினுடைய யதார்த்தவித்துக்களுடைய மதங்களாலும், ஸ்ருஷ்டிவாக்யம்,நாராயணனுவாகம், ஸுபாலோபநிஷத், அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளிலே ஸர்வாதிகனுக ப்ரஸித்தனுயிருக்கை. ஏவம்விசிஷ்டம் (த்வாம்ஆஸுரப்ரக்ருதய: போத்துமேவநப்ரபவந்தி) ஆஸுரீம்யோனிமாபன்னு: இத்யாதி - கரு.

வ்யா.—உல்லங்கிதேத்யாதி. மஹாத்மாநவஸ்துமாமித்யாதிகளில் சொல்லுகிறபடியே, உன்னைப்பெறும் ஸத்ப்ரக்ருதிகள் காணப்பெறுவதேயென்றும், யாருமோர்நிலைமையனெனவறிவெளியவெம்பெருமானென்று அது தன்பேறென்றிருக்கிருர்.(உல்லங்கிதேத்யாதி)த்ரிவிதபரிச்சேதரஹிதமாய், ஸமாதிகஸம்பாவனையுங் கடந்துள்ளவுன்னுடைய ப்ரபுத்வத்தை. விபுத்வாத்தேசபரிச்சேதரஹித:, நித்யத்வாத் காலபரிச்சேதரஹித:, ஸர்வப்ர காரித்வேந ப்ருதக்ஸ்தியோக்யவஸ்த்வந்தராபாவாத் வஸ்துபரிச்சேதரஹித:, ஸத்ருக்வஸ்த்வந்தராபாவாத் துலயாப்ரஸ்தாநாவா பரிச்சேதரஹித: இதிவா. அதஏவஸமாதிகதரித்ர:.( மாயாபலேந ) பகவத்ஸ்வரூபத்தை மறைக்கும் ப்ரக்ருதிபலத்தாலே என்னுதல், திவ்யவிக்ரஹத்தை இதரஸஜாதீயமாக்கும் ஆச்சர்யசக்தியோகத்தாலே யென்னுதல். (பவதாபிநிகூஹ்யமானம்) ஆத்மானம் மானுஷம்மன்யே, அஹம்வோபாந்தவோஜாத: என்றும், ஆட்பார்த்துழிதருமுன்னாலே மறைக்கப்பட்டதேயாகிலும். (பச்யந்திகேசிதநிசம் த்வதநந்யபாவா:) ஸத்ப்ரக்ருதிகளாயிருப்பார் சிலமஹாத்மாக்கள் ஸர்வகாலமுள்ளபடி காணுநின்ருர்கள். ( த்வதனன்யபாவா: ) உன்னையொழிய வேறுநினைவில்லாதவர்களென்னுதல். உன்னையொழிய உபாயாந்தர மறியாதவர்களென்னுதல். இப்படிகளாலே ஜ்ஞாநத்துக்கு உன்னையொழிய விஷயாந்தரமில்லாதவர்கள் என்னுதல் - கசு.

ச்லோ.—யதண்டமண்டாந்தரகோசரஞ்சய
த்தசோத்தராண்யாவரணாநியாநிச-
குணா:ப்ரதாநம்புருஷ:பரம்பதம்
பராத்பரம்ப்ரஹ்மசதேவிபூதய: - கஎ.

வ்யா.—யதண்டமிதி. கீழ்ப்ரதிபாதித்த ஸர்வேச்வரத்வத்துக்கு ப்ர
திஸம்பந்திதயா அபேக்ஷிதமான ஈசிதவ்யஜாதத்தை ப்ரபஞ்சீகரிக்கி
றார். (யதண்டம்) சதுர்தசபுவனாத்மகமானவண்டம் ஒன்றாக. அண்
டாநாந்து ஸஹஸ்ராணாம் இத்யாதிகளில்படியே அண்டஸமூகம்
யாதொன்று. (அண்டாந்தரகோசரஞ்சயத்) அண்டாதிபத்ரிலோகே
ச்வர திக்பால நரபதிப்ரமுகமாய், ஸ்தாவரஜங்கமாத்மகமான அண்
டாந்தர்வர்திஸமூஹம்யாதொன்று. (தசோத்தராணி) மேன்மேலும்
தசகுணிதமான வாரிவஹ்நி அநிலாகாசங்களும், பூதாதிகளும், மஹா
னும், கார்யோன்முகமான ப்ரக்ருத்யம்சமான ஆவரணங்கள்யிவை
சில. (குணா:) அது சேதநரைபந்திப்பது குணத்வாராவாகையாலே,
பந்தகாரணமான ஸத்வாதிகள். (ப்ரதானம்) அவிக்ருதப்ரக்ருதி ப்ர
தேசம். குணா:ப்ரதானமென்று.குணகுணிகளை பிரித்துப்பேசுகிறது,
குணங்களையே ஜகத்காரணமாகச்சொன்ன ஸாங்க்யமதம் அவைதிக
மென்கைக்காக. (புருஷ:) பத்தாத்மஸமஷ்டி: அண்டாந்தரகோசர
மென்று வ்யஷ்டியைச் சொல்லுகையாலே இதுஸமஷ்டிவிஷயம்.
(பரம்பதம்) கார்யகாரண உபயாவஸ்தப்ரக்ருத்யாச்ரயாத் க்ஷே
த்ரஜ்ஞாத் ஆனந்தாத்பரம்பதம், ஹிரண்மயேபரேலோகே இத்யா
ரப்ய, ஜ்யோதிஷாம்ஜ்யோதி ஸ்தத்யதாத் மவிதோவிது:, பரமேவ்
யோமன், ஸோச்னுதே, த்ரிபாதஸ்யாம்ருதம்திவி, யத்ரபூர்வேஸாத்
யாஸ்ஸந்திதேவா:, அத்யர்காநலதிப்தம்தத் ஸ்தாநம்விஷ்ணோர் ம
ஹாத்மந:, ஸ்வயைவப்ரபயாராஜன் துஷ்ப்ரேக்ஷம் தேவதான
வை:, தத்ரகத்வாபுனர்நேமம் லோகமாயாந்திபாரதேத்யாதி பிரு
க்தாத்ரிபாத்விபூதி:.(பராத்பரம்)ப்ரஹ்மாதிகளில்பரர்முக்தர், அவர்
களில் பரர்நித்யஸித்தர். (ப்ரஹ்மச) சுத்தஸத்வமயமாய், பரஞ்ஜ்
யோதிர்மயமாய் ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதி கல்யாணகுண
பேதமாய்,ப்ருஹத்வப்ருஹணத்வகுணயோகத்தாலே ப்ரஹ்மசப்த
வாச்யமான திவ்யவிக்ரஹம். ஸபரஸ்ஸர்வசக்தீநாம் ப்ரஹ்மணஸ்
ஸமநந்தரம், மூர்த்தம்ப்ரஹ்ம, சாந்தானந்தபஹாவிபூதி பரமம்
யத் ப்ரஹ்மரூபம்ஹரே: மூர்த்தம்ப்ரஹ்மததோபி யதட்ரியதரம்.
ரூபம்யதத் யத்புதமித்யாதி. (தேவிபூதய:) விபூதிசரீரசப்தங்கள்
பர்யாய மாகையாலே, சரீரதயாசேஷிங்கள். விபூதயோஹரேரே
தா: ஜகதஸ்ஸ்ருஷ்டிஹேதவ:. யாநிமூர்த்தான்ய மூர்த்தாநியான்
யத்ரான்யத்ரவாக்வசித். ஸந்திவைவஸ்துஜாதாநி தாநிஸர்வாணி தத்
வபு:. தத்ஸர்வம் வைஹரேஸ்தனுரித்யாதிபி: விபூதிசரீரசப்தயோ:
பர்யாத்வம்சாஸ்த்ரேஷு—ப்ரஸித்தம்—கஎ.

ச்லோ.—வசீவதாந்யோகுணவாந்ருஜுச்சுசி:
ம்ருதுர்தயாளுர்மதுரஸ்திரஸ்ஸம:-
க்ருதீக்ருதஜ்ஞஸ்த்வமஸிஸ்வபாவத:
ஸமஸ்தகல்யாணகுணாம்ருதோததி:—கஅ.

---

வ்யா.—வசீத்யாதி. கீழ் சரண்யனுடைய வுத்கர்ஷம் சொல்லி, இதில் உபயவிபூதிநாதனை நம்மால்கிட்டலாமோவென்று கூசாதபடி, ஆச்ரிதருக்கு இழியுந்துறையான கல்யாணகுணங்களிலே பன்னிரண்டுகுணங்களை அருளிச்செய்கிறார். அதவா, கீழ்ஸர்வேச்வரத்வம் சொல்லிற்றாய், இனிசொல்ல ப்ராப்தமான ஸமஸ்தகல்யாணகுணத்மகதையை யருளிச்செய்கிறாரென்றுமாம். (வசீ) கீழ்ச்சொன்ன ஈசிதவ்யதையை தன்வசத்திலே நடத்திவர்திக்குமென்கை. இத்தாலும் ஸ்வதந்த்ரனீபக்கலிலே குணக்கிடந்தாவது பெருவினையனுமென்னுமிடம் சொல்லுகிறது. ஸர்வஸ்யவசீஸர்வஸ்யேசாந:, ஜகத்வசேவர்த்ததேதம். அதவா, தன்னுடைய திருவடிகளிலே ஆனுகூல்யமுடையார்வசத்திலே தாழநிற்குமென்றுமாம். இமௌஸ்மமுனிசார்தூல கிம்கரௌஸ்முபஸ்திதௌ - ஆஜ்ஞாபயதேஷ்டம்வைசாஸனம்கரவாவகிம். ஆஜ்ஞாபயமஹாபாஹோ ப்ரூஹியத்தேவிவக்ஷிதம் - ஸ்வயமேவஹரிர்வவ்ரேவிப்ரபாதாவநேஜநம். அநந்யாதீனத்வமித்யாதி. ஆச்ரிதபரதந்த்ரனாயிருக்குமிருப்பு பிரர்க்காகவென்றால், நியாமகரில்லாமையாலே ஸ்வதந்த்ரகார்யமாயிருக்கும். (வதாந்ய:) இப்படி ஆச்ரிதபரதந்த்ரனாய்ச் செய்யுங்கார்யமேதென்னில், தன்னையும் தன்னுடைமையையும் அவர்களுக்குக் கொடுக்கும் ஔதார்யத்தைச் சொல்லுகிறது. ப்ரியவாக்தான சீலச்சவதாந்ய: பரிகீர்தித:,யஆத்மதாபலதா:, ஸர்வாநாதிநோத்ருஷ்ட்வா ஸமேத்யப்ரதிநந்த்யச. உதாராஸ்ஸர்வஏவைதே,நதேருபம்.(குணவான்)தன்னையும்தன்னுடைமையையும் அவர்களுக்குக்கொடுக்குமிடத்தில்,அவர்கள், தன்னையும் தங்கள் சிறுமையையும்பார்த்து பிரகாலியாமே, அவர்க்ளளவாகத் தன்னை அமைக்கும்சீலம்-மஹதோமந்தை:. குணப்ரகரணமாகையாலே குணவானென்கிறது. குணஸாமான்யத்தைச் சொல்லுகிறதன்று, குணவிசேஷத்தைச்சொல்லுகிறது. குண்யதஇதிகுணமென்கிறபடியே, அனுஸந்தாதாவுக்கு எப்போதுமொக்கவிட வொண்ணாமையாலே சீலத்தை குணசப்தத்தாலேசொல்லுகிறது. ஸாலசப்தம் வ்ருக்ஷஸாமான்யவாசியாயிருக்கிறவிது, வ்ருக்ஷவிசேஷத்தைக் காட்

டுகிருப்போலே. அஜாயமாநஃ, கோந்வஸ்மின்ஸாம்ப்ரதம் லோகேகுணவானென்று தொடங்கி, இக்ஷ்வாகுவம்சப்ரபவஃ, பஹுவகுணத்தரஃ, ஸஹிதேவைருதீர்ணவ்யஎன்கிறபடியே, சிலகார்யம் அவதார்யமென்கை. (ருஜுஃ) இப்படி தன்னை அமைத்துக்கொண்டு பொருந்தும்போது, அவர்கள் நாநாருசிகளாகையாலே, மேட்டிலே விரகாலே நீர்ஏத்துமாப்போலே, அவர்கள்செவ்வைக்கேடே செவ்வையாம்படி செவ்வியனாகை. ஆர்ஜவமாவது-ஆச்ரிதவிஷயத்தில் மனோவாக்காயங்களால் ஏகரூபனாகை. யஜ்ஜாதீயொயாத்ருசோயத் ஸ்வபாவஸ்தஜ்ஜாதீயஸ்தாத்ருசஸ்தத்ஸ்வபாவஃதத்வைததாஸ்துகதமோயமஹோஸ்வபாவோ யாவான்யதாவி தகுணோபஜதேபவந்தம். தாவான் ஸ்ததாவிதகுணஸ்ததநீநவ்ருத்திஃ ஸம்ச்லிஷ்யஸித்வமிஹதேநஸமானதர்மாஃ. (சுசிஃ) இப்படி உபசரிக்குமிடத்தில், ஒருப்ரயோஜனத்தைக்கணிசியாதே, வெறும்புறத்தில் உபகரிக்கும்பாவசுத்தியைச் சொல்லுகிறது. யோர்தேசுசிஸ்ஸஹிசுசிஃ.நித்யஸம்ஸாரியைஸ்வஸம்பந்தமேஹேதுவாக நித்யஸூரிகளோடொருகோவையாக்க வல்ல பாவனத்வத்தைச் சொல்லுகிறதென்றுமாம். பாவநஸ்ஸர்வலோகாநாம்த்வமேவரகுநந்தன.கர்மகாண்டே,பக்திரஷ்டவிதாஹ்யேஷாயஸ்மின் ம்லேச்சேபிவர்ததே. ஸவிப்ரேந்த்ரொமுனிச்ரீமான் ஸயதிஸ்ஸசபண்டிதஃ- மயாபூஜ்யஸ்ஸதாசாஸௌ மத்பக்தச்வபசோபியஃ தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம்ஸசபூஜ்யோ யதாஹ்யஹம்.(ம்ருதுஃ) ஸம்ச்லேஷித்தி லிப்படியிருக்கிறவன், இவர்கள்விச்லேஷத்தில் ஆற்றமாட்டானென்கிறது.ஆத்மகுணப்ரகரணமாகையாலெ, மானஸதௌர்பல்யத்தைச்சொல்லுகிறது. நைவதம்சான்மசகான், நஜீவேயம்க்ஷணமபி, அவகாஹ்யார்ணவம்ஸ்வப்ஸ்யே. (தயாளுஃ) ஆச்ரிதவிஷயதுக்கத்தில் அஸஹனாயிருக்கை. தயை - பரதுக்காஸஹத்வம். ஸஏகாகீநரமேத, வ்யஸநேஷுமனுஷ்யாணாம். இது ஸர்வஸாதாரணமானால், ஆச்ரிதவிஷயத்தில்க்ருபை அவாங்மனஸகோசரமிறே. ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்தமிதி. ஸ்த்ரீப்ரணஷ்டேதிகாருண்யாத். ஸதன்னிபதிதமித்யாதி.(மதுரஃ) நிர்தயனானாலும் விடவொண்ணாத ஸ்வாரஸ்யத்தைச்சொல்லுகிறது. நாநாவிதருசிகளானஜந்துக்களுக்கு அவ்வவர்நிலைகளிலேயினியனாயிருக்கை. ரஸோவைஸஃ,ஏஷஹ்யேவாநந்தயாதி, ரஸக்ஹ்யேவாயம்லப்த்வாநந்தீபவதி இத்யாதயஃ. (ஸ்திரஃ) இப்படி ஸர்வரஸிகனாயிருக்கிறவன்பக்கலிலே,அல்பா

ச்லோ.—உபர்யுபர்யப்ஜபுவோபிபூருஷான்
ப்ரகல்ப்யதேயேசதமித்யனுக்ரமாத் -
கிரஸ்த்வதேகைககுணாவதீப்ஸயா
ஸதாஸ்திதாநோத்யமதோதிசேரதே - கஅ.

---

னுகூல்யம்பண்ணினாருக்குதனக்கந்தரங்கரானார்விரோதிகளானாலும் அவர்களால்அப்ரகம்ப்யனாயிருக்கை.நத்யஜேயம்கதஞ்சன, அபயம் ஸர்வபூதேப்ய:, என்னடியாரதுசெய்யார்.(ஸ்திர:) ஆச்ரிதருடையப்ராதிகூல்யங்களாலும் அவிக்ருதனாயிருக்குமென்றுமாம்.(ஸம:) ஆச்ரயிக்குமிடத்தில், ஜ்ஞாநவ்ருத்தாதிகளில்குறைந்திருந்தார்களேயாகிலும், ஆச்ரணீயத்வேஸமனாகை. ஸமோஹம்ஸர்வபூதேஷு,௩மெடுப்புமிலீசன்,கொள்கைகொளாமையிலாதான். (க்ருதீ)கர்துமுத்யுக்தவான். இப்படி ஆச்ரயித்தால,அவருடைய கர்த்தவ்யாம்சமெல்லாம், தனக்கேஅனுஷ்டேயமென்றிருக்கும். ஆதிகர்மணிக்த:. அதவா, ஆச்ரிதர்தன்னைலபித்தால்,இழந்தவர்கள் பெற்றாராயிருக்குமதன்றிக்கே, தன்பேறாயிருக்கை.அபிஷிச்யச-தவசார்த்த:ப்ரகல்பதே. (க்ருதஜ்ஞ:) இப்படி தான்அவர்களுக்கு எல்லாவுபகாரங்களைப்பண்ணினாலும், அவர்கள்,அடியில்பண்ணின அல்பானுகூல்யத்தைக்குவாலாக நினைத்திருக்கும். அவர்கள்பண்ணும்அபகாரமும்அறியான்.அவிஜ்ஞாதாஸஹஸ்ராம்சு:. தான்பண்ணினவுபகாரமுமறியான். ருணம்ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயான்னாபஸர்ப்பதி என்றிருக்குமவன்.அவர்கள் திறத்தில்தான்செய்யப்பெறாதகுறையை நினைத்திருக்குமென்றுமாம். சிரஸாயாசத:. (த்வமஸி) ஆச்ரயத்தில் நலங்கள் குணம்பெறாதபடியிருக்குமென்னுதல், இக்குணங்களும் தன்னைப்பற்றி நிறம்பெறும்படி ஸ்ப்ருஹணீயமா யிருக்குமென்னுதல். (ஸ்வபாவத:) இக்குணங்கள்ஆவித்யகமன்றென்னுதல்,ஆவித்யகம் அவித்யாகல்பிதம்.ஔபாதிகமென்னலாகாதபடி நைஸர்க்கிகமென்கிறது. (ஸமஸ்தகல்யாணகுணாம்ருதோததி:) எல்லாகுணங்களும் கல்யாணமாய், நிரதிசயபோக்யங்களுமாய்,அனுபவிக்கவிழிந்தார்க்கு கரைகாணவொண்ணாமைக்கு ஒரு கடலென்னுமத்தனையென்கிறார். மதிக்ஷயான்னிவர்த்தந்தே நகோவிந்தகுணக்ஷயாத்-கஅ.

வ்யா.—உபர்யுபரி. இக்குணங்களுக்கு ஸங்க்யையில்லாதவோபாதி, ஒரோகுணங்களுக்கு அவதியில்லை யென்கிறார். (அப்ஜபுவ: உபர்யுபரிதேயே சதமித்யனுக்ரமாத் பூருஷான்ப்ரகல்ப்ய) திருவாபிக

ச்லோ.—த்வதாச்ரிதாநாம் ஜகதுத்பவஸ்திதி
ப்ரணாசஸம்ஸாரவிமோசனாதய: -
பவந்திலீலாவிதயச்சவைதிகாஸ்
த்வதீயகம்பீரமனோனுஸாரிண: ௨௦.

மலத்திலே அவ்யவதாநேந பிறந்து, அவனோடேயோதின சதுர்மு கனுக்குமேலே, அவனைமனுஷ்யர் கோடியிலேநிறுத்தி, தேயேசதக் ரமத்தாலே மனுஷ்ய கந்தர்வாதி ப்ரஹ்மாந்தமாக அநந்தாவதிஸி த்த்யர்த்தமாக ப்ரஹ்மாக்களைக்கற்பித்து. (ஏகைககுணாவதீப்ஸயாஸ தாஸ்திதாகிர:) ஆனந்தகுணமொன்றையும் எல்லைகாண்கையிலேஇச் சையாலே உத்யோகித்து, ஸர்வகாலமும் ஸ்திதைகளான வைதிககிர் களானவை. ஏகைகவென்கையாலே, ஜ்ஞாநாநந்தாவஹமானயுவத் வாதிகளை நினைக்கிறது. ஸதாஸ்திதாவேதகிர:, என்று, நித்யத்வாபௌ ருஷேயத்வங்களை சொல்லிற்றாகவுமாம். வேதாக்ஷரராசியென்னாதே, வேதகிர்க்கள் என்கிறது - வேதசப்தேப்யஏவாதௌ என்கிற படியா லே, லௌகிகசப்தங்களும் வைதிகசப்தங்களாகையாலே சொல்லுகி றது. அவை அந்தகுணங்களைக்கண்டபடியென்னெனில். (நோத்ய மதோதிசேரதே) உத்யோகதசையானவிதொழிய, மேல்கால்வாங்கிற் றினவில்லை. ஸைஷாநந்தஸ்யமீ மாக்ஸாபவதீத்யாரப்ய, ஸஏகோப்ர ஹ்மண ஆநந்தஇதி. யுவாஸ்யாத். ஸ்வரூபகுணங்களுக்கு முபலக்ஷ ணமாதல், யுவத்வத்தால்வந்ததேஜஸ்ஸைச் சொல்லுதல். அத்யாயகஇ திஜ்ஞாநம், ஆசிஷ்டஇதி சக்தி:, த்ரடிஷ்ட இதிவீர்யம், பலிஷ்டஇதி பலம், தஸ்யேயமிதி ஐச்வர்யம், தைர்யுக்ததாதவயு வத்வமுகைர்கு ணௌகை: இத்யாதய: - ௧௯.

வ்யா.—த்வதாச்ரிதானுமிதி. கீழ்சொன்ன குணங்களுக்கு போக்தாவான ஆச்ரிதர் பெருமையை அருளிச்செய்கிறார். அஸ மின்னஸ்ய சதத்யோகம்சாஸ்தி, என்றிவனாலேவந்த பெருமையை யுடையவர்களளவு இதுவானால், அவன்பெருமை பரிச்சேதிக்கவொ ண்ணாதென்னுமிடம் கிம்புனர்ந்யாயஸித்தமன்றோவென்கிறாரென் றுமாம். (த்வதாச்ரிதாநாம்) ப்ரஹ்மருத்ராதீநாம் ஸநகாதீநாஞ்ச.தே வரைதாரநின்றாச்ரயிக்கிற ப்ரஹ்மாதிகள், ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹார ங்களை உபதேசக்ரமத்தாலே பெற்று, ஸம்ஸாரவிமோசனத்தையும் பண்ண சக்தரானபின்பு, அனன்யப்ரயோஜனராய் ஆச்ரயிக்கும்அவ ர்களவற்றைச் செய்யப்பார்த்தால், லீலையாகாநின்றது. முக்தர்தே

ச்லோ.—நமோநமோவாங்மனஸாதிபூமயே
நமோநமோவாங்மனஸைகபூமயே-
நமோநமோனந்தமஹாவிபூதயே
நமோநமோநந்ததயைகஸிந்தவே-உக.

---

வரோடே லீலாரஸம் அனுபவிக்கும்போது ஸங்கல்பத்தாலே ஜ்ஞாத்யாதிகளைஸ்ருடித்திறே அனுபவிப்பது. ஸங்கல்பாதேவநச்ச்ருதே:, ஸங்கல்பாதேவாஸ்ய பிதரஸ்ஸமுத்திஷ்டந்தி. ஜகத்ஸ்ருஷ்ட்யாதியில் ப்ராப்தியில்லாமைபோக்கி, சக்தியில்லாமையாலே தவிருகிறாரல்லர். ஆதிசப்தத்தாலே, அனேகசரீராந்த:ப்ரவேசநியமனங்களைநினைக்கிறது. ஜகத்வ்யாபாரவர்ஜம். போகமாத்ரஸாம்யலிங்காச்ச. அதவா, (ஜகதுத்பவஸ்திதி ப்ரணசஸம்ஸார விமோசனதய:லீலா: த்வதாச்ரிதானும்பவந்தி) முமுக்ஷுஸிஸ்ருக்ஷயாவிறே ஸ்ருஷ்ட்யாதிகள். நிரதிசயபோக்யதையே ஸ்வரூபமாயிருக்க, ஸம்ஸாரவிமோசக ரென்கிறது, ஆச்ரிதார்த்தமாகவிறே. ஆதிசப்தத்தாலே ததர்த்தமான அனேக அவதாரங்கள், திருக்குரவையிலே அநேகவிக்ரஹபரிக்ரஹாதிகள். (விதயச்சவைதிகா:)இதம்குரு இதம்மாகார்ஷீ: என்றுஸ்வதந்த்ரமான வைதிகவிதிகளும்.(த்வதீயகம்பீரமனோனுஸாரிண:)அனன்யப்ரயோஜனராய் ஆச்ரயித்தவர்களுடைய கம்பீரமானமனஸ்ஸை பின்செல்லாநின்றன. மனஸ்ஸுக்கு கம்பீரத்வமாவது - க்ஷுத்ரமான ஐச்வர்யாதிகளில் கால்தாழாதே, அனன்யப்ரயோஜனமாகை. ப்ரஹ்மவாதிநோவதந்தி, ஸஹோவாசவ்யாஸ: பாராசர்ய:, யேதத்ரப்ராஹ்மணாஸ்ஸம்மர்சின: இத்யாரப்ய, யதாதேதத்ரவர்தேரன் ததாதத்ர வர்தேகா:, நினைதோறும் செல்லுந்தோறும் நெஞ்சிடிந்துகும் என்று பகவத்விஷயத்தில் இவ்வளவு அவகாஹியாதார்க்கு, நிதித்யாஸிதவ்ய:, விஜ்ஞாயப்ரஜ்ஞாம்குர்வீத, ஆத்மாநம்த்யாயீத என்று விதிக்கிறதிறே. த்வதீயமான கம்பீரமனஸ்ஸை அனுஸரியாநின்றனவென்றுமாம். ச்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா - உ௦.

வ்யா.—நமோநம இதி. இதுக்கு ஸர்வேச்வரனுடையஸ்வரூபத்தால் வந்த உத்கர்ஷத்துக்கும், உபயவிபூதியோகத்தால்வந்த ஐச்வர்யத்துக்கும், குணோத்கர்ஷத்தால்வந்த நீர்மைகளும் தோற்று,ஜிதந்தெஎன்னும் ச்வேதத்வீபவாஸிகளைப்போலேயும்,நம:புரஸ்தாததப்ருஷ்டதஸ்தே என்றவர்ஜுநனைப்போலேயும், யாருமோர்நிலைமையனென்ற ஆழ்வாரைப்போலேயும், சரண்யனுடையபெருமையை அனு

ச்லோ.—நதர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ
நபக்திமாம் ஸ்த்வச்சரணாரவிந்தே -
அகிஞ்சநோநந்யகதிச்சரண்ய
த்வத்பாதமூலம் சரணம்ப்ரபத்யே - உஉ.

---

ஸந்திக்கிறார். இதுக்குமுன்பு ப்ராப்யஸ்வரூபம்சொல்லிற்றாய், இதில், ப்ராப்தாவின் ஸ்வருபம்சொல்லுகிற தென்றுமாம். கீழ்சரண்யஸ்வரூபம் சொல்லிற்றாய், மேல்சொல்லப் படுகிற சரணாகதியை இதில்ப்ரஸ்தாபிக்கிறாரென்றுமாம். வாங்மனஸாதிபூமயே நமோநம: எத்தனையேனும்ஜ்ஞாநாதிகரும் ஸ்வயத்நத்தால் அறியப்புக்கால், அவர்களுக்குவாங்மனஸ்ஸுக்களுக்கு அபூமியாயிருக்கிறவுனக்கு. யதோவிசோநிவர்த்தந்தே, யன்னயம்பகவான் ப்ரஹ்மாஜாநாதிபுருஷோத்தமம்.நம: என்றுஅஹங்காரமில்லாத ஸ்வரூபத்தைச்சொல்லுகிறது. அநாத்மன்யாத்மபுத்தி:, அஹமபிநமம - இத்யாரப்ய, இத்யேவம்மமதாம்யேஜயந்தி அதோநமஇதி. த்வ்யக்ஷரஸ்துபவேனம்ருத்யு: த்ரயக்ஷரம்ப்ரஹ்மண:பதம் இத்யாதி. நமச்சப்தம்-பர்யாயமாகையாலே சரணாகதியை ப்ரஸ்தாபிக்கிறதாகவுமாம். வீப்ஸையாலே அந்தஸ்வபாவத்துக்குத் தோற்று அருளிச்செய்கிறார். ஸக்ருத்தேநம:, த்விஸ்தேநம:, இத்யாரப்ய,ஸஹஸ்ரக்ருத்வஸ்தேநம:, அபரிமிதக்ருத்வஸ்தேநம:, இத்யாதி.(வாங்மனஸைகபூமயேநமோநம:)நீகாட்டக்காண் பாருடையவாங்மனஸ்ஸுக்களுக்கு நிலமாயிருக்கிற வுனக்கு, பவந்தி பாவாபூதாநாம் மத்தஏவப்ருதக்விதா: இத்யாதி. (அநந்தமஹாவிபூதயே) அபரிச்சேத்யோபய மஹாவிபூதிகனாயிருக்கிறவுனக்கு. வாங்மனஸ்ஸுக்களுக்கு அபூமியாகைக்கடி - அபரிச்சேத்யமஹாவிபூதிகனாயிருக்கை. உன்னை வாங்மன மனஸ்ஸுக்களுக்கு ஏகபூமியாம்படி பண்ணும் அபரிச்சேத்யதைக்கு ஒருஸிந்துவாயிருக்கிறவுனக்கு. யதிசக்ரோஷிகச்சத்வம் என்று ஸர்வசக்தியை ஓரிடைச்சி பரிச்சேதிக்கலாம்படியி றேக்ருபைனுடைய நிரவதிகத்வம் - உக.

வ்யா.—நதர்மநிஷ்டோஸ்மி.தம் முடைய அதிகாரத்தைச்சொல்லிக்கொண்டு, ப்ரஸ்துதமானப்ர பத்தியை ப்ரயோகிக்கிறார். கீழ்சொன்ன வுபேயானுகூலமான உபாயத்தை அனுஷ்டிக்கி தென்னுமாம். கீழ்த்வாம்சில, உல்லங்கித,என்கிறவிடத்திலே துஷ் க்ருதிகளுன் பெருமையை அறியார்கள்; ஸத்ப்ரக்ருதிகள் அறிவார்களென்றார். நமோநம: என்கிறச்லோகத்தில், ஸ்வரூபத்தை பாதந்த்ர

மாக வுணர்ந்தவனுக்கே இவ்விஷயம் ப்ராப்யமாவது; ஸ்வதந்தரனு
க்கு ப்ராப்யம றென்கிறது. ஆச்ரயிக்குமிடத்தில், ஸ்வசக்திகொண்
டாச்ரயிக்கும் விஷயமன்று; தன்னுடைய ஆகிஞ்சன்யத்தை முன்
னிட்டுக்கொண்டு ஆச்ரயிக்கும் விஷயமென்கிறார். (நதர்மநிஷ்டோ
ஸ்மி) தார்மிகனாக வென்கிறேனல்லேன், நாஸ்திகனென்கிறேனல்லே
ன், தர்மத்தில் நிஷ்டையுடையேனல்லேன். சிலர்தார்மிக னென்று
நினைக்கைக்கும்,நானுமெனக்கு நன்மையுண்டென்று ப்ரமிக்கைக்கு
ம், தானே சில ப்ரவர்த்தியாநின்றானாகில் தானே செய்திடுகவென்று
நீகைவிடுகைக்கும் வேண்டுவதுண்டித்தனை. உன்திருவடிகளை ப்ராபிக்
கைக்கு ஹேதுவாகவேண்டும் படியான ப்ரவ்ருத்தியில் நிஷ்டையில்
லை யென்கை. (நசாத்மவேதீ) ஆத்மதர்சனம்பண்ணிப் போருமவர்
களைப்போலே, சொல்லிநிர்ப்பந்தித்திலே னல்லேன். கர்மயோகா
னுஷ்டானத்தாலே க்ஷீணபாபனானவனுக்கு ஆத்மயாதாத்ம்யதர்ச
னமாயிருக்க, அதில்லை யென்றபோதே, தத்ஸாத்யமான ஜ்ஞாநமி
ல்லாமை அர்த்தஸித்தமாயிருக்க, ஜ்ஞாநமில்லை யென்கிறது-பஹூ
நாம் ஜன்மநாமந்தே ஜ்ஞாநவானென்று, ஜன்மாந்தரஸம்ஸ்காரத்
தாலே ஜ்ஞாநம் பிறக்கலாமிறே என்னில், அதுவுமில்லையென்கிறார்.
(த்வச்சரணாரவிந்தே நபக்திமான்) இவ்வாத்மாவுக்கு நாதனாயிருந்து
ள்ளவுன்னுடைய நிரதிசயபோக்யமான திருவடிகளில் அனவரதபக்
தியையுடையேனல்லேன். கர்மஜ்ஞாநங்களை அங்கமாகவுடைத்தா
ன பக்தியங்கந்தா. னில்லையென்றபோதே, இதுவுமில்லை யன்றோ
வென்னில், பூர்வோக்தப்ரகாரத்திலே ஜன்மாந்தரஸம்ஸ்காரமுதவி
உண்டாகலாமிறே என்னில், அதுவுமில்லை யென்கை. குளித்துமூன்ற
னலை, நேற்றநோன்பு, கறவைகள் பின்சென்று என்றும். (அகிஞ்ச
ந:) என்று அனுதாபமென்ன, இவையுண்டாகைக் குறுப்பான ஆத்ம
குணமென்ன, அதிகாரிசக்திவாஞ்சாதிக ளென்ன இவற்றையுடையே
னல்லேன். (அனன்யகதி:)இப்படி நம்மைக்கிட்டுகைக்குக்கை முதலி
ல்லையாகில், புறம்பேரக்ஷகராயிருப்பார் பக்கலிலே போனாலோவெ
ன்னில், புறம்பொருபுகலில்லை யென்னுதல். உன்னைவிட்டொன்று
மாற்ற கிற்கின்றிலேன் என்கிறபடியே, உன்னையொழியச்செல்லா
தென்னுதல். (சரண்ய) தம்பக்கல் முதலில்லாதார்க்கு சரணவரணா
ஹனிறே. (த்வத்பாதமூலம்) தேவர் திருவடிகளை மூலமென்றது-
ஸௌலப்யாதி குணங்களையும், இதராவயங்களையு மொழிய திருவடி

ச்லோ.—நநிந்திதம்கர்மத தஸ்திலோகே
ஸஹஸ்ரசோயன்னமயாவ்யதாயி -
ஸோஹம்விபாகாவஸரேமுகுந்த
க்ரந்தாமிஸம்பரத்யகதிஸ்தவாக்ரே - உரு.

---

த்தாமரைகளை நினைக்கிறது. (சரணம்ப்ரபத்யே) விரோதிநிவ்ருத்தி பூர்வகமான கைங்கர்யஸித்திக்கு உபாயமாக அத்யவஸிக்கிறேன். உபாயேக்ருஹரக்ஷித்ரோ:. அஹிர்புத்ன்யஸம்ஹிதையிலே, இது னுடையஸ்வரூபம் சொல்லுகிறது. அஹமஸ்ம்யபராதாநாம் ஆலய:. ச்வேதாச்வதரே, யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம். இந்தச்லோகத்தால் அதிகாரிஸ்வரூபமும், சரணாகதிப்ரயோகமும் சொல்லிற்றுயிற்று - உஉ.

வ்யா.—நநிந்திதம். அனுகூலங்களில்லையென்று வெறுக்கவேண்டா, உண்டானயோக்யதையும் அழிக்கவற்றான நிஷித்தானுஷ்டானங்களில்லையாகில், நன்மைகளையுண்டாக்கி, புருஷார்த்தத்தையும் தருகிறோமென்று - பகவதபிப்ராயமாக, ப்ரதிகூலங்களாலே பூர்ணனென்கிறார். (ஸஹஸ்ரசோயம் நமயாவ்யதாயி - நிந்திதம்கர்மத ஸ்லோகேநாஸ்தி) ஆயிரம்மடங்கு என்னால் பண்ணப்படாதது யாதொருநிந்திதகர்மமுண்டு - அதிபாதகமஹாபாதகாதிகள், அது சாஸ்த்ரத்திலில்லை. அனுஷ்டாதாக்கள் பக்கலில்லாத நிஷித்தங்களும் சாஸ்த்ரத்திலே காணலாமிறே. (ஸோஹம்) நிஷித்தங்களை அனுஷ்டித்து ப்ராயச்சித்தங்களிலும் இழியாதே தப்புச்செய்தோமென்கிற அனுதாபமுமின்றிக்கேஇருக்கிற நான். (விபாகாவஸரே) அவை பக்வமாய், அனுபவத்தையொழிய போக்கிடமில்லாதவவஸ்தையில். (முகுந்த) முக்திபூமிப்ரத. இத்துர்தசையை ப்ராப்தனானவனுக்கும் தேவரையே உஜ்ஜீவனஹேதுவென்று மித்தையேபுத்திபண்ணி. துராசாரோபி ஸர்வாசீக்ருதக்நோநாஸ்திக:,தோஷோயத்யபிதஸ்யஸ்யாத், வதார்ஹமபிகாகுத்ஸ்த: க்ருபயாபர்யபாலயத், தஸ்மாதபிவத்யம் ப்ரபன்னம் நப்ரதிப்ரயச்சந்தி.அஹிர்புத்ன்யஸம்ஹிதாயாம், அனேனைவப்ரபன்னஸ்ய பகவந்தம்ஸநாதநம் தஸ்யாநுபந்தா:பாப்மாந: ஸர்வேநச்யந்திதத்க்ஷணாத். க்ருதாந்யநேநஸர்வாணி தபாம்ஸிதபதாம்வர. ஸர்வேதீர்த்தாஸ்ஸர்வயஜ்ஞா: ஸர்வதாநாநிதத்க்ஷணாத். க்ருதான்யேதேநமோக்ஷச்சதஸ்யஹஸ்தேநஸம்சய:.(அகதி:) தேவரீருடைய நீர்மையேயன்றியே, என்னுடைய கதிசூன்யனசுயே

ச்லோ.—நிமஜ்ஜதோநந்தபவார்ணவாந்த
ச்சிராயமேகூலமிவாஸிலப்தঃ -
த்வயாபிலப்தம்பகவன்னிதாநீ
மனுத்தமம்பாத்ரமிதம்தயாயாঃ - ௨௪.

---

ஹேதுவாக. (ஸம்பரதிக்ரந்தாமி) தேவருக்குபப்ரிஹரிக்கவொண்ணாதசையிலே, தேவர்பக்கல் குணஹாநியை சம்ஸிக்கும்படி வாதநானுஷ்டானம்பண்ணி பலம்பெறுதாரைப்போலே கூப்பிடாநின்றேன். (தவாக்ரே) ஹ்ரீரேஷாஹிமமாதுலாஎன்கிற தேவர்திருமுன்பே - ௨௫.

வ்யா.—நிமஜ்ஜதঃ. உம்முடைய பூர்வவ்ருத்தியிதுவாயிருக்கக்ரந்தாமியென்று நங்குற்றம்போலே கூப்பிடுவதெத்தாலேயென்ன, ஸம்ஸாரார்ணவத்திலே அழிந்துகிறவெனக்கு,நிர்ஹேதுகக்ருபையாலே உன்வாசியையறிவித்தாய். கூசம்செய்யாதுகொண்டாய், என்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ என்கிற ப்ராங் ந்யாயத்தாலே உன்திருவடிகளை ப்ராபிக்கைக்கும் அந்த க்ருபையே ஹேதுவென்று, தயைகரக்ஷ்யத்வத்தாலே கூப்பிடுகிறேனென்கிறார். என்க்கு தேவரை லபிக்கைபெருப்பேறுனல்போலேயிறே, தேவருடையக்ருபைக்கு மென்னுடையலாபமென்கிறார். (அனந்தபவார்ணவாந்தர்நிமஜ்ஜதঃ) (அனந்த) த்ரிவிதபரிச்சேத ரஹிதঃ. என்னுடைய ஸம்ஸாரத்தை பரிச்சேதிக்கிலும்,தேவருடைய ப்ரபாவத்தைபரிச்சேதிக்கவொண்ணாதென்கை. பவார்ணவவிசேஷணமாய், கரைகாணவொண்ணாதஸம்ஸாரார்ணவத்திலே,ஆவாரார்துணையென்றலை நீர்க்கடலுளழுந்தும் என்கிறபடியே, அழுந்துகிறவெனக்குஎன்னவுமாம். ஸநகாதிகளைப்போலே கண்பற்றிலேயிருந்தேனே. (சிராய) அனாதிகாலமெல்லாம் அழுந்துகிறவெனக்கு. அழுந்துகையொழிய பரிஹாரம்பார்க்கவறியாதவெனக்கு. (கூலமிவலப்தோஸி) உன்பேரருளாலிக்கரையேறியென்னும்படியே, அழுந்துகிறவிடத்திலே கரைகாட்டினால்போல லப்தனாகாநின்றாய். (த்வயாபிலப்தம்) தேவராலும் லபிக்கப்பட்டது. எனக்கு தேவர்பெருப்பேறுனல்போலேயிறே, எதிர்சூழல்புக்குத் திரிந்த தேவர்க்கு மிவ்வஸ்து. (பகவன்) ஜ்ஞாநாதிகுணபரிபூர்ணரான தேவருடைய பேறென்னுமிடம் நானேசொல்லவேண்டுமோவென்கை. (இதாநீம்) தேவரும், நன்மையற்றுவிடவேண்டும்படியான தூர்தசையிலே. (அனுத்தமம்பாத்ரம்) உத்தமோத்தமமா

ச்லோ.—அபூதபூர்வம் மமபாவிகிம்வா
ஸர்வம் ஸஹேமேஸஹஜம் ஹிதுஃகம் -
கிந்துத்வதக்ரேசரணாகதாநாம்
பராபவோநாதநதேநுரூபஃ - ௨௫.

---

னபாத்ரம். (இதம்) ரக்ஷகாபேக்ஷைக்கு, இனி யில்லையென்னுமிவ்வ ஸ்து. (தயாயாஃ) ரக்ஷ்யவிஷயமுண்டாகில்தான் உண்டாம் தேவரீ தயைக்கு - ௨௪.

வ்யா.—அபூதபூர்வமிதி. நம்பக்கல் ந்யஸ்தபரராயிருக்கிற வுமக்கு, தத்தஸ்யஸ்த்ருசம்பவேத் என்கிறபடியே கண்டிருக்கை ஸ்வரூபமாயிருக்க, இங்கனே நிர்பந்திக்கக்கடவீரோ வென்ன, என்னுடைய அனர்த்தத்தைப் பரிஹரிக்கச்சொல்லுகிறேனல்லேன், ஆச்ரிதருக்கு விஷயங்களால்வரும் பரிபவம், ரக்ஷகரானதேவருக்கு தேஜோஹாநியென்று,அத்தைப்பரிஹரிக்கச்சொல்லுகிறேனென்கிறார். (மமஅபூதபூர்வம்மமபாவிகிம்வா)நரககர்ப்பவாஸ ஜனனமரணக்லேசாதிகளே யாத்ரையாய்ப்போந்த வெனக்கு, முன்பு அநுபூதமன்றிக்கே,இனி அநுபாவ்யமாயிருப்பதொரு துஃகமுண்டோ.கிம்க்ஷேபே. (ஸர்வம்ஸஹே) ஆதிவ்யாதிகள்,பரபரிபவம்,சீதோஷ்ணாதிகள்,தத்விச்லேஷஜநிததுஃகம், இவற்றை இவர் ஸஹிக்கவல்லவராய்ச் சொல்லுகிறாரல்லர். ஆத்மாநித்யன்,காலம்அநாதி.இவற்றைப்பொறுத்துஉள்க்கொதிபோலே நசியாதேகிடந்த ஆச்சர்யத்தைக்கண்டு சொல்லுகிறார். (மேஸஹஜம்ஹிதுஃகம்) அநாதிகாலம் கர்மமேநிரூபமாகப்போந்த வெனக்கு, அதின்பலமான துஃகமும் ஸஹஜமன்றோ. (கிந்து) பொறுக்கவொண்ணாதொன்றுண்டு. (த்வதக்ரே) ஸர்வசேஷியாய், ஸர்வத்ரஸன்னிஹிதரான தேவர்முன்பே. (சரணாகதாநாம்பராபவஃ) உன்பக்கல் ந்யஸ்தபரராயிருக்கு மவர்களுக்கு, சப்தாதிவிஷய ப்ராவண்யத்தால்வந்த எளிவரவு. பாவியேனைப்பலநீகாட்டிப் படுப்பாயோ, கிறிசெய்தென்னைப் புறத்திட்டின்னங்கெடுப்பாயோ என்று, விஷயஸன்னிதியே துடங்கி, எளிவரவாயிறே, அனன்யப்ரயோஜனரிருப்பது. பஹுவசனத்தாலே சொல்லுகிறது, ஒருத்தனுடைய எளிவரவு, ஸஜாதீயர்க்காக வந்ததென்கை. எங்ஙனந்தேறுவருமர் என்கிறபடியே, உனக்குக் கைபுகுந்தவர்களும், உன்னுடைய ரக்ஷணத்தில் அதிசங்கைபண்ணுவார்களென்கை. (நாத) இது தனனரசு நாடாகில், தேவருக்கு வருவதுண்டோ. உடைமை நோவுபடுவது-

ச்லோ.—நிராஸகஸ்யாபிநதாவதுத்ஸஹே
மஹேசஹார்தும் தவபாதபங்கஜம் -
ருஷாநிரஸ்தோபிசிசுஸ்தநந்தயோ
நஜாதுமாதுச்சரணௌஜிஹாஸதி - ௨௬.

---

உடையவனுக்கு எளிவரவன்றே. (தேநாநுரூபஃ) ஸர்வபாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி என்ற தேவருக்கு அநுரூபமன்று. அது தனக்க
ஸஹ்யமென்கை - ௨௫.

வ்யா.—நிராஸகஸ்யாபி.தேவருடையரக்ஷணபாவத்தால்வந்ததே
ஜோஹாநியையும்பாராதே, என்னைக்கைவிடுமென்றும், நான்விடப்
பார்க்கிறிலேனென்றும், தம்முடைய அகதிகத்வத்தாலே தம்முடைய
மஹாவிச்வாஸத்தை ஆவிஷ்கரிக்கிறார். ( நிராஸகஸ்யாபி ) ரக்ஷகத்வ
ம்ஸ்வரூபமாயிருக்கிறதேவர், நிராஸகராக ப்ரஸங்கமில்லை, இப்படி
ப்பட்டதேவர் நிஷ்கருணராய் நிராஸகரானாலும். (தவபாதபங்கஜம்
தாவத்தாதும் நோத்ஸஹே) ரக்ஷகமுமாய், ப்ராப்தமுமாய், போக்
க்யமுமான திருவடிகளை, முந்தரமுன்னம்விட்டு ஜீவிக்க ச்ரத்தைப
ண்ணுகிறிலேன். கண்டாரிகழ்வெனவேகாதலன்றான் செய்திடினும்
கொண்டானையல்லாலறியாக்குலமகள்போலென்று, தேவர்ரக்ஷகரன்
றியிலேயொழிந்தாலும், புறம்புபோக்கில்லையென்கை. (மஹேச) த
மீச்வராணாம் பரமம்மஹேச்வரம் என்றும், ஈச்வரஸ்ஸர்வபூதாநாம்
என்றுஞ்சொல்லுகிறபடியே, நிருபாதிகநிர்வாஹகனானவனே. ஸம்
ஸாரத்தில் பந்தங்களைப்போலே, கர்மோபாதிகமாய், புறம்பேபோ
ய் உஜ்ஜீவிக்கிறேனோ. ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாமென்றும், ஸர்வே
ஷாமேவலோகாநாம் பிதாமாதாசமாதவஃ என்றும், நிருபாதிகமான
பரிவும் ஸம்பந்தமும் புறம்பேயுண்டாய், தேவரைவிட்டுப்போய்
உஜ்ஜீவிக்கவோ. (ஸ்தநந்தயச்சிசுஃ ருஷாநிரஸ்தோபி) ஸ்தந்யமேதா
ரகமான சிசுவானது, ஜநநியாலேக்ரோதமடியாக விடப்பட்டாலும்.
ஸ்வரக்ஷணத்திலே சக்தியின்றிக்கே, ததேகரக்ஷ்யமான தசையைச்
சொல்லுகிறது. இவ்வாத்மவஸ்து, ஈச்வரைகரக்ஷ்யமாய், நித்யஸ்தந
ந்தயமாயிறே யிருப்பது. “அரிசினத்தா லீன்றதாயகற்றிடினும் ம
ற்றவள் தன்னருள் நினைந்தேயழுங்குழவி” ஈன்றதாயென்றும், அரி
சினமென்றும், விருத்ததர்மம், ஏகாச்ரயத்தில் ஸம்பவியாதென்கை.
பிதாவுக்கு ஹிதார்த்தமாக க்ரோதம்ஸம்பவித்தாலும், மாத்ருவிஷ
யத்தில் ஸம்பாவனையில்லையிறே. (ஜாது) க்ருத்தையானபோதோடு,

ச்லோ.—தவாம்ருதஸ்யந்தினிபாதபங்கஜெ
நிவேசிதாத்மாகதமன்மதிச்சதி -
ஸ்திதேரவிந்தேமகரந்தநிர்ப்பரே
மதுவ்ரதோநேக்ஷுரசம்ஹிவீக்ஷதே - உஎ.

---

ஆதரித்தபோதோடு வாசியற. (மாதுச்சரணௌஜிஹாஸதி) கையாலே தள்ளுகையுன்றிக்கே, காலாலேதள்ளிலும், அந்தகாலேகட்டிக்கொள்ளுமத்தனையொழிய, புறம்புபோகப்பாராதாப்போலே-உசு.

வ்யா.—தவாம்ருதஸ்யந்தினி. என்னுடைய அநந்யகதித்வத்தாலே விடமாட்டாதவளவேயோ, தேவர்போக்யதையிலே அழிந்தின மனஸ்ஸூம்வேறொன்றில் போகமாட்டாதென்கிறார். (தவாம்ருதஸ்யந்தினிபாதபங்கஜே) ப்ராப்தமுமாய்,போக்யமுமான தேவர்திருவடிகளிலே. விஷ்ணோ:பதேபரமேமத்வஉத்ஸ:,ஸொவைஸ:,தேனேமலருந் திருப்பாதமென்று, ச்ருதிஸித்தமிறேபோக்யதை. (நிவேசிதாத்மா)தேவருடையநிர்ஹேதுகமான ப்ரஸாதத்தாலே நிவேசிக்கப்பட்ட மனஸ்ஸானது. அபோக்யமுமாய், அப்ராப்தமுமான ஹேயவிஷயங்களிலே பழகிப்போந்த மனஸ்ஸூ, ஸஹரிபோக்யமான தேவர் திருவடிகளிலே அவகாஹிக்கும்போது, தேவர் ப்ரஸாதமே வேண்டாவோ. (கதமன்யதிச்சதி) மய்யாஸக்தமனா: என்கிறபடியே தேவர் திருவடிகளிலே ஸக்தமான மனஸ்ஸூ, தத்வ்யதிரிக்தவிஷயங்களில் ச்ரத்தைபண்ணும்படி யெங்கனே. உன்வாசியையும் அறிந்து வைத்து, சைதன்ய ப்ரஸரத்வாரமான இது,விஷயாந்தரங்களை விரும்பும்படியெங்கனே. (அரவிந்தேமகரந்தநிர்ப்பரேஸ்திதேஸதி) ஸூகஸ்பரசமாய், மதுவாலேபூர்ணமான, செந்தாமரையானது போக்தாக்களைக்குறித்து அவஸரப்ரதீக்ஷமாயிருக்க. (மதுவ்ரத:) மதுவேஜீவனமான பதார்த்தமென்னுதல், மதுஸம்ருத்தமா யிருக்கிறவிடத்திலே பருகக்கடவோமென்கிற ஸங்கல்பத்தையுடைய பதார்த்தமென்னுதல். ( இக்ஷுரகம்நவீக்ஷதே ) கிட்டுகையே அரிதாய், கிட்டினால் நாக்கு நனைக்கப்போராதேயிருக்கிற முள்ளிப்பூவிலேசென்று பணியாதொழிகையன்றிக்கே,கடாக்ஷிப்பதும்செய்யாது. (ஹி)இது உபதேசிக்க வேண்டுமோதேவருக்கு, ஸம்ப்ரதிபன்னமன்றோ. எங்குப்போயுங் கேனுன்னிணையடியே யடையல்லால் என்னிராதோ-உஎ.

ச்லோ.—த்வதங்கிரிமுத்திச்யகதாபிகேநசி
த்யதாததாவாபிஸக்ருத்க்ருதோஞ்ஜலிஃ
ததைவமுஷ்ணாத்யசுபாந்யசேஷத
ச்சுபாநிபுஷ்ணாதிநஜாதுஹீயதே - உஅ.

---

வ்யா.—த்வதங்கிரிம். த்வத்பாதமூலம் சரணம்பரபத்யே என்று நீர்பண்ணின ப்ரபத்தி யொன்று மமையுமோவிரோதி நிவ்ருத்திக்கு மபிமதஸித்திக்குமென்ன, மநோவாக்காயங்கள் மூன்றாலும் பண்ணின ப்ரபத்தியெல்லாம் வேண்டுமோ, பத்தாஞ்ஜலிபுடம் தீனம் யாசந்தம் சரணாகதம் என்கிற காயிகமான அஞ்ஜலியொன்றுமே அமையாதோவென்கிறாரிதில். (த்வதங்கிரிம்) நிருபாதிக சேஷியான வுன்னுடைய நிரதிசயபோக்யமுமாய், ஸர்வஸுலபமுமான திருவடிகளை. இத்தால், ப்ராப்யமுமாய், ப்ராப்கமுமாய், ப்ராப்தமுமா யிருக்கிறபடியைச் சொல்லுகிறது. (கதாபி) இச்சைபிறந்தபோது காலமென்கை. இத்தால்வஸந்த க்ரீஷ்மாதி சுக்லக்ருஷ்ணபக்ஷபூர்வாஹ்ணபராஹ்ணாதி காலநியதியையுடைய ஜ்யோதிஷ்டோமாதிகளில் இதுக்குண்டான வ்யாவ்ருத்தி. (கேநசித்) இத்தால்,த்ரைவர்ணிகத்வ,க்ருஹமேதித்வ, க்ருஷ்ணகேசத்வ, வேதவேதாங்கவித்யாதிகாரிநியமமுடைய கர்மங்களில் வ்யாவ்ருத்தி. ஆகையால் ஸர்வாதிகாரமென்கை. (யதாததா) ப்ரகாரநியதியில்லையென்கிறது. இத்தால் சாஸ்தரங்களில், ப்ரகாரவிசேஷ நியமமுண்டான கர்மங்களில் வ்யாவர்த்தி. (வாஅபி) என்று விகல்பஸமுச்சயஸூசகமான அவ்யயங்கள். இரண்டாலும், ஒன்றிலே நியதமான கர்மங்களில் இதுக்குண்டான வ்யாவர்த்திசொல்லுகிறது. ( ஸக்ருத்க்ருதஃ ) என்று, யாவத்ஜீவாதிகாரமான நித்யகர்மவ்யாவர்த்தி சொல்லுகிறது. ( அஞ்ஜலிஃ) ஜாயாதிஸஹகாரிஸாபேக்ஷமான அச்வமேதாதிகளில் காட்டில் இதுக்குண்டான ஸுகரத்வம் சொல்லுகிறது. (ததைவ) தேசாந்தரே, காலாந்தரே, தேஹாந்தரெ, பலப்ரதமானகர்மங்களில் வ்யாவர்த்தி சொல்லுகிறது. ( அசுபாந்யசேஷதஃ ) ஸர்வபாபங்களும் மறுவலிடாதபடிபோகை. ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி. இத்தால் ஒருபாபத்துக்கு ஒருப்ராயச்சித்தமான த்வாதசவார்ஷிக ஸம்வத்ஸர சாந்த்ராயணக்ருச் ச்ராதிகளில்வ்யாவருத்தி. ( முஷ்ணாதி ) முஷஸ்தேயே. வஞ்சித்து முற்றம்தவிர்ந்த, சும்மெனாதேகைவிட்டோடி என்றுபோனப்ரகாரம் தெரியாதொழிகை. ( சுபானிபுஷ்ணாதி ) வி

ச்லோ.—உதீர்ணஸம்ஸாரதவாசுசுக்ஷணிம்
க்ஷணேநநிர்வாப்யபராஞ்சநிர்வ்ருதிம் -
ப்ரயச்சதித்வச்சரணாருணாம்புஜ
த்வயானுராகாம்ருதஸிந்துசீகரः - ௨௯.

---

ரோதியைப்போக்கி விடுமளவன்றிக்கே, அபிமதங்களாலே பூர்ணமாக்கும். பஹுவசனத்தாலே, பரபக்தி, பரஜ்ஞாந, பரமபக்தி, தேசவிசேஷப்ராப்தி, பகவல்லாப, ப்ராப்திபலமானகைங்கர்யம்,இவற்றைச்சொல்லுகிறது. இத்தால் ஸ்வர்காதிகளான ஒரோபலங்களிலே நியதமானகர்மங்களில் வ்யாவ்ருத்தி. ( நஜாதுஹீயதே ) இத்தனையுங்கொடுத்தாலும், தான்குறையாதிருக்கை. இத்தால், பலப்ரதானத்தளவிலே க்ஷீணசக்திகமானகர்மங்களில் வ்யாவ்ர்த்தி. அஞ்ஜலிः பரமாமுத்ராக்ஷி ப்ரம்தேவ ப்ரஸாதினீ, ஸ-ஸ்-கம் கர்த்துமவ்யயம் க்ரியாரூபமானவஞ்சலி. குறையாதிருக்கை யாவதென்னென்னில், அனன்யப்ரயோஜனராய்க்கொண்டு பண்ணினவஞ்ஜலியாகையாலே, ப்ரஸன்னனான விச்வரன், எல்லாம் செய்தாலும், ஒன்றும் செய்யாதானாயிருக்கையாலே, ருணம்ப்ரவ்ருத்த மிவமேஹ்ருதயான்னாபஸர்ப்பதி. உன்னடியார்க்கென் செய்வேனென்றே யிருத்திநீ என்னக்கடவதிறே - ௨௮.

வ்யா.—உதீர்ணேத்யாதி. ஆயாஸாத்மகமான அஞ்ஜலிதான் வேண்டுமோ, சிந்திப்பேயமையு மென்கிறபடியே, மானஸமாக வமையாதோ விரோதிநிவ்ருத்தி பூர்வகமான பரமபதத்தைத் தரவென்கிறார். இத்தால்,தீனமென்கிறமானஸப்ரபத்தியைச்சொல்லுகிறது. நதர்மநிஷ்டோஸ்மி என்கிறவிது-வாசிகப்ரபத்தியாய்,த்வதங்க்ரிமுத்திச்ய என்றது காயிகப்ரபத்தியாய்,இதில் மானஸமான ப்ரபத்தியென்னவுமாம். அதவா,த்வதங்க்ரிம், உதீர்ண, என்கிறச்லோகத்வயத்தாலே, ப்ரபத்திபலமான பரபக்தியைச்சொல்லுகிற தென்னவுமாம். (உதீர்ணஸம்ஸாரதவாசுசுக்ஷணிம்) கிளர்ந்தெரிகிறஸம்ஸாரமான காட்டில் அக்னியை அவிக்கவொண்ணாதாப்போலே, அவித்யாதிகளுக்கிலக்காமித்தனையொழிய,பரிஹரிக்க வொண்ணாதென்கை. ஆத்மாஅதாஹ்யமென்கிறது, லௌகிகாக்னியிலிறே. ஸம்ஸாரியை, அஸன்னேவ என்கிறபடியே, தக்தபடம்போலே யாக்குமிறே. (க்ஷணேநநிர்வாப்ய ) அதஸோபயம்கதः என்கிறபடியே, அப்போதேஅவித்து. ததைவ்முஷ்ணாதி, க்ஷணேநநிர்வாப்ய என்றும் சொல்லுகையாலே,

ச்லோ.—விலாஸவிக்ராந்த பராவராலயம்
நமஸ்யதார்த்தி க்ஷபணேக்ருதக்ஷணம் -
தனம்மதீயந்தவ பாதபங்கஜம்
கதானுஸாக்ஷாத் கரவாணிசக்ஷுஷா - ௩௧.

---

அவ்வதிகாரிக்கு பலத்துக்கு விளம்பமில்லை யென்கிருர். யதேஷிகா தூலமக்நௌப்ரோதம் ப்ரதூயேத என்கிறபடியே, இவன் பட்ட நோவை, இவன் விரோதிவர்க்கத்தோடு போக்கு மீச்வரனென்கை. (பராஞ்சநிர்வ்ருதிம்ப்ரயச்சதி) ஒருதேசவிசேஷத்திலே, ஆநந்த நிர்ப்பரனுயிருக்குமிருப்பைத் தாராநிற்கும், நிரஞ்ஜநঃ பரமம்ஸாம்ய முபைதி, மமஸாதர்ம்யமாகதாঃ, ஸஸ்வராட்பவதி, என்னும் ஸுகமிறே. ( த்வச்சரணருணும்புஜேத்யாதி ) ப்ராப்தனுய், ஸுலபனுன உன்னுடைய நிரதிசயபோக்யமான திருவடிகளில் அனுராகமாகிற அம்ருதஸாகரத்திலே, யொருதிவலே. அருணபதத்தாலேபரபாக ரஸம் சொல்லுகிறது. அம்புஜசப்தத்தாலே,மென்மை,குளிர்ச்சி, நாற்றங்களால் வந்தரஸம். ( த்வயம் ) அந்யோந்யஸத்ருசமான சேர்த்தியழகால்வந்த ஸாரஸ்யம். இத்தால், அனுராகஜனகமான திருவடிகளென்கை. (அனுராக) திருவடிகளில் அத்யவஸாயாத்மகமான ருசி யென்னுதல். ப்ரபத்திபலமாய் கைங்கர்யோபகரணமான பக்தி யென்னுதல். ப்ரீதிகாரிதமிறே - கைங்கர்யம். ( அம்ருத ) ஸ்மர்த்தவ்யவிஷயஸாரஸ்யத்தாலே ஸ்வயம் ப்ரயோஜனமாயிருக்கை யன்றியே, பத்யமாயிருக்கை. ( ஸிந்துசீகரঃ ) அதனில்பெரியவென்னவா வென்கிறபடியே, விஷயானுரூபமான ப்ரேமமெல்லாம் வேண்டா அபிமதஸித்திக் கென்கை - உ௯.

வ்யா.—விலாஸேதி. இப்படிவிளம்ப ஹேதுவில்லாத ஸித்தோபாயத்தை பரிக்ரஹித்தவராகையாலே, க்ரமப்ராப்தி பற்ருதே, த்வரைப்ப்ரேரிக்க, கூவிக்கொள்ளுங்கால மின்னம்குறுகாதோ வென்கிருர். ப்ரபத்திபலமான பரபக்தியாலே, கனைகழல்காண்பதென்று கொல்கண்களென்றும்,காணக்கருதுமென்கண்ணே யென்றும்.சொல்லுகிறபடியே, கண்ணுலே காண்பதென்று என்கிருர் என்றுமாம். (விலாஸேத்யாதி) லீலையாக ஆக்ரமிக்கப்பட்ட உத்க்ருஷ்டரானதேவதைகளுடைய இருப்புக்களையும், மரணதர்மாக்களான மனுஷ்யாதிகளுடைய இருப்புக்களையும்,உடைத்தாயுள்ளத்தை,விமுகருடையதலையிலே அநாயாஸேந சென்றிருந்த திருவடிகளுக்கு, ருசியையுடை

ச்லோ.—கதாபுனச்சங்கரதாங்ககல்பக
த்வஜாரவிந்தாங்குசவஜ்ரலாஞ்சனம் -
த்ரிவிக்ரமத்வச்சரணம் புஜத்வயம்
மதீயமூர்த்தானமலங்கரிஷ்யதி - ௩௧

---

யார்தலையிலே இருக்கைப்பணியுண்டோ. (விக்ராந்த) அன்யபராராணுர்பக்கலிலேயோ மேல்விழலாவது, அனன்யப்ரயோஜனர்பக்கலிலே மேல்விழலாகாதோ. (பராவராலயம்) வஸிஷ்டசண்டாள விபாகமின்றிக்கே, தூளிதானம்பண்ணின திருவடிகள், அத்தையொழியச் செல்லாத வெனக்குஅரிதாவதே. ஸங்கைஸ்ஸுராணுமென்கிற கர்மபாவனுநிஷ்டரும், தவஞ்செய்து நான்முகனேபெற்றுனென்கிறபடியே உபயபாவனுநிஷ்டரும், பெற்றபேறு எனக்குஅரிதாவதே. (நமஸ்யதார்த்திக்ஷபணே க்ருதக்ஷணம்) ப்ராஸங்கிகமாகப் பிறந்தஅபதானம்கிடக்ககிடீர், திருவடிகளிலேதலைசாய்த்தாருடைய ஆர்த்திகளைப்போக்குகையிலே க்ருதாவஸரமாயுள்ளத்தை. ஆச்ரித ரக்ஷணத்திலே அவஸரப்ரதீக்ஷமான திருவடிகளைக் காண்கைக்கு, கதானுஸாக்ஷாத்கரவாணிசக்ஷுஷா என்று கூப்பிடவேண்டுவதே. (தனம்மதீயம்) வைத்தமாநிதி, என்கிறபடியே எனக்குப்ராப்யமுமாய், ப்ராபகமுமாயுள்ளத்தை. (தவபாதபங்கஜம்) ஸர்வஸுலபமுமாய்,ஆச்ரிதவத்ஸலமுமாய்,நிரதிசயபோக்யமுமான திருவடிகளை. (கதானுஸாக்ஷாத்கரவாணி ) த்ரைவிக்ரமாபதான தூளிதானத்திலும் காணப்பெறுத நான், என்று நான் காணவிருக்கிறேன். விஷயங்களிலே மண்டிகிடக்கிற ஸம்ஸாரிகள் நடுவேயிருக்கிற வுமக்கு, நம்மையொழியச்செல்லாதபடி புகிரநிறுத்தினோமாகில், ஒன்றும் செய்யாதாரைப் போலே கூப்பிடுகிறதென்னென்ன; கண்ணாலேகண்டு விடாய்தீரவிருக்கிற வெனக்கு, ஸம்ஸாரிகளில்காட்டில் ஒருவ்யாவ்ருத்திபண்ணித்தரவமையுமோ. (சக்ஷுஷா) ஒருதேசவிசேஷத்திலே ஸதாதர்சனம் பண்ணப்பெறுதே, காணவிடாய்த்த வெனக்கு, கண்ணாலேகாணவேணும் - ௩௰.

வ்யா.—கதாபுனঃ. இதில், கண்ணாலே காணுமளவும் பொராது, படிக்களவாக நிமிர்த்த நின்பாத பங்கயமே தலைக்கணியாய், என்றும், கோலமாமென் சென்னிக்குன்கமல மன்னகுரைகழலெ என்றும், சொல்லுகிறபடியே, உன்திருவடிகளாலே யென் தலையை அலங்கரிக்கவேண்டுமென்கிறர். (கதாபுனঃ) திருவடிகளிலுண்டானப்

ச்லோ.—விராஜமாநோஜ்வல பீதவாஸஸம்
ஸ்மிதாதஸீஸூநஸமாமலச்சவிம் -
நிமக்நநாபிந்தனுமத்யமுன்னதம்
விசாலவக்ஷஸ்தலசோபிலக்ஷணம் - ருஉ.

ராப்தியையும், ஸௌலப்யத்தையும், போக்யதையையும், அனுஸந்தித்து, அத்தால் வந்தத்வரையாலும், விளம்ப ஹேதுவில்லாத உபாயத்தை பரிக்ரஹித்தவராகையாலும், பின்னையெப்போதுசெய்வதென்கிறார். (சங்கரதாங்கேத்யாதி) ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யஸூசகமாய், என்தலைக்கு ஆபரணமான சங்கசக்க்ராதி லக்ஷணங்களாலே லிகிதமா யுள்ளத்தை. அவனுக்கு ஐச்வர்யஸூசகமுமாய், ஆகர்ஷகமுமாய், திருவடிகளோட்டை ஸம்பந்தத்தாலே இவர்தலைக்கு சேஷித்வலக்ஷணமுமாய், ஆபரணமுமாயிறே யிருப்பது. பாதவிலச்சினைவைத்தான், என்னக்கடவதிறே. (த்ரிவிக்க்ரம) குணாகுண நிருபணம் பண்ணாதே, திருவடிகளில் வைலக்ஷண்யமும் பாராதே, எல்லார்தலையிலும் வைக்குமவனல்லையோ. (த்வக்சரணௌ புஜத்வயம்) இப்படி ப்ராப்தனுமாய், ஸுலபனுமான உன்னுடைய நிரதிசய போக்யமான திருவடிகள். (மதீயமூர்த்தானம்) நரகஹேதுவானபதார்த்தங்களின் கால்காணப்ரார்த்தித்துபபோந்தவென்றலையையென்னுதல், இதுக்கு ப்ராப்தனுய்ப்போந்த வென்தலையை யென்னுதல். பதிவ்ரதைக்குமங்களஸூத்ரம்போலேயிறே,சேஷிபூதனுக்குத் திருவடிகள். மேமூர்த்னிபாதி என்று, தன்தலையிலே நீர்மைக்குடலாக ஸ்வஸம்பந்தம த்தலைக்கேற்றமாகச்சொன்னார். இங்கு, தத்ஸம்பந்தமே இத்தலைக்கு ஏற்றமென்கிறார் ஸ்வசேஷித்வஸித்திக்காக - ருக.

வ்யா.—விராஜமான. இந்தச்லோகம்முதலாக, பவந்தமென்கிறச்லோகத்தளவும், பர்வக்ரமத்தாலே, அவயவாபரணாயுதமஹிஷீபரிஜனபரிச்சேதங்களோட்டைச் சேர்த்தியழகை அனுபவித்து, அனுபவஜனித ப்ரீதிகாரிதமான கைங்கர்யத்தாலே உன்னையுகப்பிப்பதெப்போதென்கிறார். இத்தால், தம்முடைய ப்ராப்யத்தை அருளிச்செய்கிறார். வைகுண்டேதுபரே லோகேஸ்ரியாஸார்தம் ஜகத்பதி: - ஆஸ்தேவிஷ்ணுர சிந்த்யாத்மா பக்தைர்ப்பாகவதைஸ்ஸஹ என்றிறே வஸ்து இருப்பது. (விராஜமான) திருவடிகளைத்தலையிலே வைக்கவமையுமோவென்ன, அவ்வளவுபோராதென்று, ஸாமான்யசோபையை அனுபவிக்கிறார். (விராஜமான) திருநிறத்துக்கு பராபாகம

ச்லோ.—சகாஸதம் ஜ்யாகிணகர்கசைச்சுபை
ச்சதுர்பிராஜாநு விளம்பிபிர்ப்புஜை: -
ப்ரியாவதம் ஸோத்பலகர்ணபூஷண
ச்லதாளகாபந்தவிமர்த்தசம்ஸிபி: - ரு௫.

---

னவழகு. (உஜ்வல) மஹாரஜதம்வாஸ: என்கிற ஸ்வரூபத்தாலே வந்த
ஔஜ்வல்யம். உடையார்ந்தவாடையென்று, திருவரைபூத்தாப்போ
லேஇருக்கிறவழகு. (பீதவாஸஸம்) பீதகவாடையுடையா னென்று,
அழகேயன்றிக்கே,ஐச்வர்யஸூசகமுமாயிருக்கை. (ஸ்மிதாதஸீ)அல
ருகிறபோதே செவ்வியை யுடைத்தான காயாம்பூப்போலே யிரு
க்கை; அதஸீபுஷ்பஸங்காசம்; காயாம்பூமலர்ப்பிறங்கலன்னமாலை
யென்று, அபியுக்தர் ஆழங்கால் படும் நிலமிறே. (நிமக்நநாபிம்) ஆவ
ர்த்தஇவகங்காயா: என்கிறபடியே, ஸௌந்தர்யவெள்ளஞ் சுழித்தாற்
போலே இருக்கிற திருநாபியையுடையவன். நந்தன் மதலைக்கு நன்
றுமழகிய வுந்தியென்னக் கடவதிறே. ( தனுமத்யம் ) சிற்றிடையும்
வடிவும் என்றும், துடிசேரிடையுமென்று மென்னக்கடவதிறே. (உன்
னதம்) இவ்வடிவாலும், உடையாலும், அழகாலும், ஸர்வாதிகனாயி
ருக்கிற விருப்புத்தோற்றும்படி யிருக்கை. (விசாலேத்யாதி) விஸ்தீ
ருதமான திருமார்பிலெவிளங்காநிற்பதாந, ஸ்ரீவத்ஸசிஹ்நமுடை
யவனை - ரு௪.

வ்யா.—சகாஸதம். திருத்தோள்களில் சௌர்யவீர்யாதிகளை
யும், அழகையுமனுபவிக்கிறார். ( ஜ்யாகிணகர்க்கசை: ) தழும் பிருந்
தசார்ங்கநாண்தோய்ந்தவாமங்கை, யென்கிறபடியே, ஸ்ரீசார்ங்கத்தி
ல் நாணித்தழும் பெல்லா வற்றிர்க்குமுண்டாகையாலே ஸவ்யஸாசி
யென்கை. ஆச்ரிதவிரோதிகளை அழியச்செய்து, தழும்பையுடைத்
தான திருத்தோள்கள். வீரத்தழும்பு, வீரபுஜங்களுக்கு அழகிறே.
( சுபை: ) சுபேநமநஸாத்யாத மென்னுமாப்போலே, ஆச்ரிதஸம்
ருத்தியே ப்ரயோஜனமாக வெறும் பறத்திலே உபகரிக்கும் தோள்
களென்னுதல், ஆச்ரிதர்க்கு ப்ராப்யமான தோள்களென்னுதல். (ச
துர்பி:) கல்பகதருபணைத்தாப் போலே ஆச்ரிதரக்ஷணமேவிளை நீரா
கப் பணைத்தபடி. ( ஆஜானுவிளம்பிபி: ) ஆஜானுபாஹுவாயிருக்
கையிறே - புருஷோத்தமலக்ஷணம். ( ப்ரியாவதம்ஸேத்யாதி ) ஆச்
ரிதரக்ஷணமே யாத்ரையாயிருக்கும்படி சொல்லிற்றுக்கீழ் ; அது
வேபச்சையாக பிராட்டியணைக்கும்படி சொல்லுகிறதிங்கு. பிரா

ச்லோ.—உதக்ரபீனும்ஸ விளம்பிகுண்டலா
லகாவலீபந்துரகம்புகந்தரம் -
முகஸ்ரீயான்யக்க்ருதபூர்ணநிர்மலா
ம்ருதாம்சுபிம்பாம்புருஹோஜ்வலஸ்ரீயம் – ருச.

ட்டிதிருச்செவி மலரான உத்பலமென்ன, கர்ணபூஷண மென்ன, ஸ்பர்சத்தாலே தத்காலத்தில் கிஞ்சிதாகுஞ் சிதமான திருக்குழல்கற்றை யென்ன, இவற்றினுடைய ஸம்மர்தத்தைக் கோட்சொல்லும வையாய், அவற்றாலே விளங்காநின்றுள்ளவனே. ஸீதயா சோபிதம் புராஎன்கிறபடியே, வீரபுஜத்தையிறே வீரபத்னியணைவது. அல்லாதபோது, ஸஜாதியையான ஸ்த்ரீயை அணைத்த வோபாதியிறே. ப்ரணய சிஹ்நங்களும், ரக்ஷணசிஹ்னங்களுமிறே, திருத்தோள்களுக்கு மாங்கள்யம். ( சகாஸதம் ) இப்படிப்பட்டதோள்களிறே, நாராயண ப்ரணயியானவனுக்கு ஔஜ்வலயஹேதுக்கள் - ருரு.

வ்யா.—உதக்ரேத்யாதி. திருத்தோள்களுக்கு அனந்தரமான திருக்கழுத்தையும், ததனந்தரமான திருமுகத்தில் ஸாமான்யசோபையையும் அனுபவிக்கிறார். ஓங்கி,த்தசைந்திருந்துள்ளஅம்ஸத்திலே வரத்தாழ்ந்த திருக்குண்டலங்க ளென்ன,அவ்வளவு வரத்தாழ்ந்த திருக்குழல்களென்ன, இவற்றாலே ஸுந்தரமாய், வடிவுதான் ரேகாத்ரயாங்கிதமா யிருந்துள்ள திருக்கழுத்தையுடையவனே. ( பந்துரம் ) ஸுந்தரம். ரேகாத்ரயாங்கிதாக்ரீவாகம் புக்ரீவேதிகத்யதே. மின்னு மணிமகரக் குண்டலங்கள் வில்வீசஎன்றும், மகரஞ்சேர்குழையிருபாடி லங்கியாட என்றும், சொல்லுகிறபடியே, திருக்கழுத்துக்கு பரபாகமான வொளியையுடைத்தாய், இரண்டாதித்யர்கள் ஆபரணவேஷித்தாலே அலங்கரிக்கிறாப்போலே யிருக்கை. கொள்கின்ற கோளிருளை இத்யாதிப்படியே, திருக்குழலாலே யலங்க்ருதமா யிருக்கிறபடி. ( முகச்ரியெத்யாதி ) அத்திருக்குழலிலழகு திருமுகத்திலே மூட்ட, அந்த அழகை அனுபவிக்கிறார். தன்னுடைய ஜ்யோதிஸ்ஸாலே பூர்ணசந்த்ரனுடைய ஒளியையும், அப்போத லர்ந்த தாமரைப்பூவிலழகையும். தோற்பிக்கும் திருமுகத்தையுடைய வுன்னை. (முகஸ்ரீயா-) முககாந்த்யா. ( ந்யக்க்ருத ) அவன், ஸம்பூர்ண கலைகளாலும் பூர்ணமான பௌர்ணமாவாஸ்யையில் சந்த்ரமண்டலமாய், மறுகழத்தின வளவிலே யாயிற்று, ஸத்ருசமாயிருப்பது. எத்தனையேலும் என்மகன்முகம் நேரொவ்வாய் என்று,அதுதன்னைத்தாழ

ச்லோ:—ப்ரபுத்தமுக்தாம் புஜசாருலோசனம்
ஸவிப்ரமப்ரூலத முஜ்வலாதரம் -
சுசிஸ்மிதம் கோமலகண்ட முன்னஸம்
லலாடபர்யந்த விலம்பிதாலகம் - ௩௫.

விட்டவிடத்திலே யாயிற்று ஒவ்வாதொழிவது. தேஜஸ்ஸேயன்றியே, ஸௌகுமார்யத்துக்கும்,விகாஸிசாரதாம் போஜமவச்யாய ஜலோக்ஷிதம். செவ்விக்கும் பரிமளத்துக்கும் தாமரைப்பூவும் ஸத்ருசமன்று. தம்பரிபூயஸ்திதம் என்னக்கடவதிறே - ௩௪.

வ்யா.—ப்ரபுத்தேத்யாதி. கோளிழைத்தாமரை யென்கிறபடியே, திருமுகத்தில் அவயவஸௌந்தர்யத்தினுடைய சேர்த்தியை யனுபவிக்கிறார். (ப்ரபுத்த) ஆச்ரிதஸம்ச்லேஷத்தாலே விகஸிதமாயிருக்கை. (முக்த) கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப்பூப்போலே அங்கணிரண்டுங் கொண்டென்கிறபடியே, அலரத்துடங்கினவளவாயிருக்குமென்னுதல், பேதுறுமுகஞ்செய்தென்னும்படிக்கு, ஆச்ரிதரோட்டைக்கலவியால்வந்த ஆனந்தாதிசயத்தில் விக்ருதியைச்சொல்லுதல். ( அம்புஜசாருலோசனம் ) இப்படிப்பட்ட தாமரைத்ருஷ்டாந்தமாகப்போராமையாலே,தார்ஷ்டாந்திகந்தன்னையே சொல்லுகிறது. தத்புண்டரீகநயநம் விஷ்ணோர்த்ரக்ஷ்யாம்யஹம்முகம் என்று, ஆச்ரிதர் ஆசைப்படுமதிறே. (ஸவிப்ரமப்ரூலதம்) மன்னியசீர்மதனன்கருப்புச்சிலைகொல் என்கிறபடியே, ஆச்ரிதர்பக்கல் ஆதரமெல்லாம்தோற்றும்படி.நெறித்திருக்கும்புருவத்தையுடையவுன்னை. தன்கைச்சார்ங்கமதுவேபோலென்று, த்ருஷ்டாந்திக்கும்படியிறே. (உஜ்வலாதரம்) வாலியதோர்கனிகொலென்றும், கொலந்திரள்பவளக்கொழுந்துண்டங்கொல் என்றும், நீலநெடுமுகில்போல் திருமேனியம்மான் தொண்டைவாயென்றும் சொல்லுகிறபடியே, மிக்கவழகையுடைய திருவதரத்தையுடைய வுன்னை. (சுசிஸ்மிதம்) பவளச்செந்துவர்வாயினிடை கோமளவல்லிமுளைப்போல் சிலபல்லிலக என்றும், என்னுவியடுமணிமுத்தங்கொலென்றும் சொல்லுகிற திருமுறுவலையுடையவுன்னை. (கோமளகண்டம்) அனுபவிப்பார்க்கு ஆகர்ஷகமாய், ஸுகுமாரமானகண்டஸ்தலத்தையுடைய வுன்னை. (உன்னஸம்) மாட்டுயர்கற்பகத்தின்வல்லியோ கொழுந்தோ என்கிறபடியே நாஸாலதையையுடைய வுன்னை. (லலாடபர்யந்தவிளம்பிதாளகம்) முன்னமுகத்தணியார் மொய்குழல்களென்றும்,சுருண்டிருண்டகுழ

ச்லோ.—ஸ்புரத்கிரீடாங் கதஹாரகண்டிகா
மணீந்த்ரகாஞ்சீகுண நூபுராதிபி: -
ரதாங்கசங்கா ஸிகதாதனுர்வரா
ர்லஸத்துளஸ்யா வநமாலயோஜ்வலம் - ருகூ.

ல்தாழ்ந்தமுகத்தானென்றும் சொல்லுகிற திருநெற்றியி னெல்லையி லேவர அலையெறிகிற திருக்குழலையுடைய வுன்னை. பின்பு அம்ஸவி ளம்பியாய், முன்பு லலாடபர்யந்தமாயிருக்கிறபடி - ருடு.

வ்யா.—ஸ்புரதிதி. ஆபரணாயுதாதிகளுடைய சேர்த்தியழகை அநுபவிக்கிறார். (ஸ்புரத்கிரீட) உபயவிபூதிநாதத்வமாகிற ஐச்வர் யத்துக்கனுரூபமாய், திருமுடியிலே விளங்காநிற்கிற திருவபிஷே கம், கதிராயிரமிரவிகலந்தெரித்தாலொத்த நீண்முடியிறே. (அங்கத) ஸர்வாச்ரயமான திருத்தோள்களைப்பற்றி விளங்காநின்றுள்ள திருத் தோள்வளைகளை. (ஹார) பொன்னின் மாமணியாரமணியாகத்தி லங்குமாலென்றும், பெரியவரைமார்பில்பேராரமென்றும் சொல் லுகிறபடியே, விளங்காநின்ற திருவாரம். (கண்டிகா) திருக்கழுத்தி லேவிளங்காநின்ற முத்துதிருக்கட்டுவடம். (மணீந்த்ர) அவன்றனக் கும் ஸதாஸ்ப்ருஹணீயமான ஸ்ரீகௌஸ்துபம். (காஞ்சீகுண) திருவ ரையிலே விளங்காநின்ற அரைநூல்பட்டிகை. (நூபுர) திருவடிகளைப் பற்றி விளங்காநின்றுள்ள திருச்சிலம்பு. (ஆதி) சப்தத்தாலே பலப லவேயாபரணம் என்றும், அபரிமித திவ்யபூஷணவென்றும் சொல் லுகிறபடியே, அஸங்க்யாதமென்கை. (ரதாங்க) இந்த ஆபரணங்க ளோடு விகல்பிக்கலாம்படி சோபாவஹமான திவ்யாயுதங்களின் சே ர்த்தியை அநுபவிக்கிறார். (லஸத்துளஸ்யாவநமாலயோஜ்வலம்) ஸர்வைச்ர்யஸூசகமாய், திருவடிகளளவும் தாழ்ந்து, அல்லித்துழா யலங்கல், என்கிற வனமாலையாலே விளங்காநின்ற வுன்னை. ஆபரணா யுதாதிகள்தன்னைப்பற்றி விளங்குகையும், அவற்றாலேதான் விளங்கு கையுமாகச் செல்லுகிறபடி. ஸ்ருக்வஸ்த்ராபரணைர்யுக்தம் ஸ்வாநு ரூபைரநூபமை:. சின்மயைஸ்ஸ்வப்ரகாசைச்ச அன்யோன்யருசிர ஞ்ஜகை: - ருஅ.

ச்லோ.—சகர்த்தயஸ்யாபவநம் புஜாந்தரம்
தவப்ரியம் தாமயதீயஜன்மபூ: -
ஜகத்ஸமஸ்தம்யதபாங்கஸம்ச்ரயம்
யதர்த்தமம்போதிரமந்த்யபந்திச - ருஎ.

ச்லோ.—ஸ்வவைச்வரூப்யேண ஸதானுபூதயா
ப்யபூர்வவத்விஸ் மயமாததானயா -
குணேநரூபேண விலாஸசேஷ்டிதை:
ஸதாதவைவோ சிதயாதவஶ்ரியா - ௬அ.

---

வ்யா.—சகர்த்தேதி. மேலில்ச்லோகத்வயத்தாலே பிராட்டியோட்டைச்சேர்த்தியை அனுபவிக்கிறார். இதில், முதல்ச்லோகத்தாலே பிராட்டியுடைய மேன்மையையும், இவள்பக்கல் ஈச்வரனுக் குண்டான வ்யாமோஹத்தையும், அருளிச்செய்கிறார். (தவபுஜாந்தரம் யஸ்யபவநம் சகர்த்த) ஸர்வயஜ்ஞமயம்வபு: என்கிற திருமார்பை, பிராட்டிக்கு கோயிற்கட்டணமா கப்பண்ணியருளிற்று. (யஸ்ய) என்கிறது, இதிலுண்டான ப்ரமாணப்ரஸித்தியாலே, ஸர்வயஜ்ஞமயம்வபுரத்யாஸ்தே, பச்யதாம்ஸர்வதேவானும் யயௌவக்ஷஸ்தலம்ஹரே:, மின்வலமார்பினில்வாழ்கின்றமங்கை, திகழ்கின்றதிருமார்பில் திருமங்கைதன்னோடும் திகழ்கின்றதிருமாலார், என்திருமகள்சேர்மார்பன், மையயகண்ணாள்மலர் மேலுறைவாளுறைமார்பினன், அலர்மேல்மங்கையுறைமார்பா, மார்வத்துமாலை, செய்யாள்திருமார்பினில் சேர்திருமால். (ப்ரியந்தாமயதீயஜன்மபூ:) யாவளொருத்தி யவதரித்த திருப்பாற்கடல்,அயர்வறுமமரர்களதிபதியான தேவருக்கு, இனிதமருமிடமாயிற்று. ஸ்ரீ:பூர்வமுததே:. தேவதானவயத்நேந ப்ரஸூதாம்ருதமந்தனே - நேதாநீம்த்வத்ருதேஸீதே ஸ்வர்க்கோபி மமரோசதே. (ஜகத்ஸமஸ்தம்யதபாங்கஸம்ச்ரயம்) அஸ்யேசாநாஜகத:, ஈச்வரீம்ஸர்வபூதாநாம்; த்வம்மாதாஸர்வலோகாநாம், என்கிறபடியே, இவ்வுபயவிபூதியும் இவளொருத்தியுடைய மந்தகடாக்ஷத்தைப்பற்றி யுண்டாயிருக்கிறது. (யதர்த்தமம்போதிரமந்தி) விண்ணவரமுதுண வமுதில்வரும் பெண்ணமுதுண்டவெம்பெருமான் என்கிறபடியே, யாவளொருத்தியை பெறுகைக்கு கடல்கடைந்தருளிற்று. (அபந்திச) யாவளொருத்தியுடைய பிரிவாற்றாமையாலே, கடலையடைத்தருளிற்று. ஏஷஸேதுர்மயாபத்த: ஸாகரேஸலிலார்ணவே - தவஹேதோர்விசாலாக்ஷி நளஸேதுஸ்ஸுதுஷ்கர: - ௬எ.

வ்யா.—ஸ்வவைச்வரூப்யேண. இதில், பிராட்டியினுடைய நிரதிசயபோக்யதையையும், உனக்கேற்க்குங் கோலமலர்பாவை, என்கிறபடியே, அவனுக்கேயாயிருக்கிற விருப்பையும் அனுபவிக்கிறார். (ஸ்வவைச்வரூப்யேண ஸதானுபூதயாபி) ஸர்வசக்தியான தேவர்,

ச்லோ.—தயாஸஹாஸநமநந்தபோகிநி
ப்ரக்ருஷ்டவிஜ்ஞாநபலைகதாமநி -
பணாமணிவ்ராதமயூகமண்டல
ப்ரகாசமாநோதரதிவ்யதாமநி - ௩௯.

---

ஸர்வவிக்ரஹத்தாலும், ஸர்வகாலமும், ஸர்வப்ரகாரத்தாலும், அநுபவியாநின்றாலும், பிராட்டியினுடைய போக்யதையை பரிச்சேதிக்கப் போகாது. ஸௌபரியைப்போலே, அநேகவிக்ரஹத்தைப் பரிக்ரஹித்தாலும் முடியாது. பர்யாயேணப்ரஸுப்தஸ்ய, என்கிறபடியே, ப்ரகாரங்களநேகமானாலும் முடியாது. (அபூர்வவத்விஸ்மயமாததாநயா) நித்யாபூர்வம்போலே ஆச்சர்யாவஹமா யிருக்கும். ஏகதாபவதி, த்விதாபவதி, என்று, நித்யஸூரிகள் தன்திறத்தில்படுமதெல்லாம், பிராட்டியைக்குறித்துத்தான் படுமென்கை. பண்டிவரைக்கண்டறிவதெவ்வூரில், என்றும், அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமென்றும், ஆழ்வார்களும், ஸதாபச்யந்தியென்று நித்யஸூரிகளும், நித்யாபூர்வதையாலே தேவர்திறத்தில் படுமதெல்லாம், தேவர் படும்படியாயிறே, பிராட்டி போக்யதையிருப்பது. உகப்பிப்பதெவ்வழியாலே என்னில், (குணேநரூபேண விலாஸசேஷ்டிதைஃ) வடிவழகாலும், சீலாதிகுணங்களாலும், ஸக்ருத்த்வதாகார விலோகநாசயா, என்கிறபடியேயும், ஈர்கின்ற குணங்களையுடையாய், என்கிறகுணங்களையும், உன்செய்கைநைவிக்கும், யென்கிற சேஷ்டிதங்களிலும், அபியுக்தர் ஆழங்கால்படும்படியிருக்குமிறே யவன். இப்படி யிவள் ஸ்வரூபாதிகளிலே அழுந்துகிறான். அவன், ஸ்வரூபத்தாலே அபரிச்சின்னன், இவள், போக்யதையாலே அபரிச்சின்னை. (ஸதாதவைவோசிதயா) துல்யசீலவயோவ்ருத்தாம், என்றும், உனக்கேர்க்குங் கோலமலர்ப்பாவை, என்றும் சொல்லுகிறபடியே, தேவர் தமக்குத்தகுதியாயிருக்குமவள். ( ஸதா ) என்று பரவ்யூஹவிபவரூபேண வுண்டான ஸர்வாவஸ்தைகளிலும் என்கிறது. குணேநரூபேண விலாஸசேஷ்டிதை ஸ்ஸதாதவைவோசிதயா என்னவுமாம். (தவஸ்ரீயா) விஷ்ணோஃஸ்ரீஃ, என்றும், உன்திரு, என்றும், சொல்லுகிறபடியே, அநந்யார்ஹையென்னுதல், தேவர்க்கு ஸம்பத்தாயிருக்குமென்னுதல்- ௩௮.

வ்யா.—தயாஸஹ. இதில் பர்யங்கவித்யையில் சொல்லுகிறபடியே, திருவனந்தாழ்வான்மடியிலே பிராட்டியோடே யெழுந்தருளியிருக்கிற சேர்த்தியை யநுபவிக்கிறார். (தயாஸஹாஸநம்) ஸ்ரீயா

ச்லோ.—நிவாஸசய்யாஸநபாதுகாம்சுகோ
பதானவர்ஷாதபவாரணாதிபி: -
சரீரபேதைஸ்தவசேஷதாம்
கதைர்யதோசிதம்சேஷஇதீரிதேஜநை: - சய.

---

ஸார்த்தம் ஜகத்பதிராஸ்தே என்கிறபடியே, நித்யவிபூதியில் மிதுனமாயிருந்திறே யடிமைக்கொள்வது. அவதாரத்திலும் பவான்ஸ்து ஸஹவைதேஹ்யா என்னக்கடவதிறே. (அனந்தபோகினி) ஸ்ரீய:பதித்வத்தால்வந்த உத்கர்ஷித்தோபாதியிறே, இவனேட்டைச்சேர்த்தியும். கந்தர்வாப்ஸரஸஸ்ஸித்தாஸ்ஸ கின்னரமஹோரகா: - நாந்தம்குணாநாம்கச்சந்தி தேநாநந்தோயமுச்யதே என்கிறபடியே, குணாநந்த்யத்தாலே அனந்தனென்னக்கடவதிறே. ஈச்வரன் ரக்ஷணத்திலே அஸங்க்யாதகுணன், இவன், கைங்கர்யார்த்தமாக அஸங்க்யாதகுணன். ( போகினி ) மென்மை, குளிர்ச்சி, நாற்றமிவற்றை ஸ்வபாவமாகவுடைய திருமேனியிலே. போகம் - சரீரம். ( ப்ரக்ருஷ்டவிஜ்ஞானபலைகதாமனி) இருவருமாய் பரிமாறும்போது அவர்களுக்கும் படியான ஜ்ஞாநசக்த்யாதிகளுக்கு ஆச்ரயமாயிருக்குமவன். ஒருத்தனென்று அவனுக்குக்கூசவேண்டாதே, துகைத்துப் பரிமாறலாம்படியான தாரணஸாமர்த்த்யத்துக் காச்ரயமாயிருக்குமவன். (பணாமணீத்யாதி) தன்னுடைய பணாமணிஸமூஹங்களினுடைய ரச்மிமண்டலங்களினாலே ப்ரகாசியாநின்றமத்யத்தையுடைய திவ்யாந்த:புரத்தையுடையவன். மணிவிளக்காமென்கிறபடியே, திவ்யாந்த:புரத்துக்கு மங்களதீபமாயிறேயிருப்பது - ௩௯.

வ்யா.—நிவாஸ. திருவனந்தாழ்வானுடைய வ்ருத்திவிசேஷங்களை அனுபவிக்கிறார். தமக்கடிமையிலுண்டான த்வரையாலே, உபமானமசேஷாணாம்ஸாதூநாமென்னும்ந்யாயத்தாலே,அடிமையில் ருசியுடையார்கெல்லாம் உதாஹரணபூதமாயிறே, திருவனந்தாழ்வானுடைய வ்ருத்திவிசேஷங்களிருப்பது. இவனுடைய காஷ்டையை அருளிச்செய்கிறார். (நிவாஸ)எழுந்தருளியிருக்கிற திருமாளிகையாம். (சய்யா) கண்வளர்ந்தருளுகைக்குப் படுக்கையாம். (ஆஸன) இருந்தால் சிங்காஸனமாம். (பாதுகா) நின்றால் மரவடியாம். (அம்சுக) பும்ஸ்த்வாவஹமான திருப்பரியட்டமாம். (உபதான) புல்குமணையாம். (வர்ஷாதபவாரணாதிபி:) சென்றால்குடையாம் என்கிறபடியே, வர்ஷித்துக்கும் ஆதபத்துக்கும் சத்ரமாம். (சரீரபேதை:) கைங்கர்ய

ச்லோ.—தாஸஸ்ஸகாவாஹநமாஸநம்த்வஜோ
யஸ்தேவிதாநம் வ்யஜநம்த்ரயீமய: -
உபஸ்திதம்தேநபுரோர்கருத்மதா
த்வதங்க்ரிஸம்மர்த்தகிணங்கசோபிநா - சக.

பேதமே சரீரபேதத்துக்குஹேது. (தவசேஷிதாம்கதை:) தேவருடைய விக்ரஹங்கள் ரக்ஷண ஹேதுவா யிருக்கிறப்போலே, இவனுடைய விக்ரஹங்கள் சேஷித்வத்தையடைந்திருக்குமென்கை. (யதோசிதம்)யதாயதாஹி கௌஸல்யா என்கிறபடியே, தத்தத்காலோசிதமாயிருக்கை. (ஜநை:சேஷிஇதீரிதே)சிறியார்பெரியாரென்னுதே, ஸர்வராலும் சேஷினென்று சொல்லப்படுகை. சேஷித்வந்தானொருவடிவுகொண்டால் போலேயிருக்கை. (ஜநை:) பெருமக்களுள்ளவர் என்கிறபடியே, நித்யஸித்தரைச்சொல்லவுமாம். பரகதாதிசயாதாநேச்சயோ பாதேயத்வமேவயஸ் யஸ்வரூபம்ஸசேஷி:, பரச்சேஷீயென்கிற சேஷித்வத்தின்படியே பாரதந்த்ர்யம் பரேபும்ஸீத்யாதி - சய.

வ்யா.—தாஸஸ்ஸகேதி. இதில், வாஹநத்வஜாதி ஸர்வவ்ருத்திகளையும் உடையனாய், ஈச்வரனுக்கு மோம்பழம்போலே ஸதாவிரும்பும்படி அபிமதராயிருக்கிற பெரியதிருவடியோட்டைச் சேர்த்தியை அநுபவிக்கிறார். (தாஸ:) தன்னுடைய வ்யாபாரங்களடங்க, ஈச்வரனுக்கு அதிசயத்தை விளைக்குமவையாயிருக்கும். (ஸகா) ஜகத்வ்யாபாரங்களில், ஈச்வரன் தன்னோடே உசாவவேண்டும்படி யானபெருமையையுடையவன். (வாஹநம்) ஆச்ரிதருடைய ஆபத்துக்களிலே, ஈச்வரனைக்கொடுவந்து சேர்க்குமவனாயிருக்கை. (ஆஸநம்) ஒருகார்யமில்லாதபோது, ஸிம்ஹாஸநஸ்தநா யிருந்தாலோபாதி தன் மேன்மைக்கு ஸத்ருசமென்னும்படி ஸிம்ஹாஸநமாயிருக்கை. (த்வஜம்) ஈச்வரன் கிட்டுவதற்குமுன்னே, எழுந்தருளி நின்றானென்று, ஆச்ரிதர்க்கு ப்ரீதிஹேதுவான கொடியானவன். அவனுடைய ரக்ஷகத்வத்துக்கு ஹேதுவானவனென்றுமாம். பொன்மலையின் மீமிசைக்கார்முகில்போல் என்றும், புள்ளூர்கொடியாய் என்று, முண்டான ப்ரஸித்தியைச்சொல்லுகிறது. (விதாநம்) விநதைசிறுவன் சிறகென்னும், மேலாப்பின் கீழ்வருவா னென்கிறபடியே, ஆதபநிவாரணமா யிருக்கை. கருடஞ்சததர்சோச்சைரந்தர்தானகதம்த்விஜ - க்ருதச்சாயம் ஹரேர்மூர்த்னி பக்ஷாப்யாம் பக்ஷிபுங்கவம்.

ச்லோ.—த்வதீயபுக்தோஜ்ஜிதசேஷபோஜிநா
த்வயாநிஸ்ருஷ்டாத்மபரேணயத்யதா -
ப்ரியேணஸேநா பதிநாந்யவேதிதத்
ததாநுஜாநந்த முதாரவீக்ஷணை: - சஉ.

இதிபராசர:. (வ்யஜநம்) தன்னைமேற்கொண்டுபோம்போது, சாமரங்கள்போலே திருச்சிறகாலே ஆச்வாஸகனாயிருக்கை. (த்ரயீமய:) த்ரிவ்ருத்தேசிரோ, காயத்ரம்சக்ஷு: என்கிறபடியே, வேதங்களை அவயவங்களாகவுடையனாயிருக்கை. அவயவார்த்தேமயட். ஈச்வரன் வேதப்ரதிபாத்யன்; இவன் வேதசரீரன். (தேநகருத்மதாபுர: உபஸ்திதம்) ஸர்வேச்வரன் தன்னை ப்ரகாசிப்பிக்கும் நிலைக்கண்ணாடிபோலேயும், மோம்பழம்போலேயும், திருமுன்பே ஸர்வதாஸன்னிஹிதனாயுள்ளவன். (த்வதங்க்ரிஸம்மர்த்தகிணாங்கசோபிநா) தன்னை மேற்கொண்டால், திருவடிகளாலே நெருக்கிறதழும்பு, தனக்கு போகசிஹ்நமாகையாலே, அத்தாலேவிளங்காநிற்கு மவன். ஈச்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துபம் லக்ஷணமானால்போலே, இவனுக்கும் அது தாஸ்யசிஹ்நமாயிருக்கும் - சக.

வ்யா.—த்வதீய. உபயவிபூதி விஷயமான தன்னுடைய ஸர்வபரத்தையும், இவன்பக்கலிலேவைத்து, இவனிட்டவழக்காயிருக்கிற ஸ்ரீஸேநாபதி ஆழ்வானுடைய தாஸ்யஸாம்ராஜ்யத்தை அனுபவிக்கிறார். (த்வதீயேத்யாதி) தேவரமுதுசெய்து, கைவாங்கினப்ரஸாதத்தாலே தரிக்குமவரா யிருக்கை. த்வதீயவென்கையாலே வகுத்தஸ்வாமியுடைய சேஷமே போஜ்யமென்கிறது. யதுச்சிஷ்டமபோஜ்யமென்கையாலே, அல்லாதாருடைய உச்சிஷ்டம் அபோஜ்ய மென்கை. புக்தோஜ்ஜிதமென்கையாலே, கலத்ததுண்டு என்கிறபடியே, அமுதுசெய்துகைவாங்கினபின் புற்றையபதேபோஜ்யம்; முன்பு பாத்ரசேஷமே அபோஜ்யமென்கிறது. (சேஷபோஜிநா) தனக்கு தாரகமாயிருக்கு மளவன்றிக்கே, ரஸான்பக்தஸ்யஜிஹ்வாயாம் என்கிறபடியே, ஈச்வரனுக்கு போக்யமாவது, மாழ்வாரமுதுசெய்தாலென்கை. ( த்வயாநிஸ்ருஷ்டாத்மபரேண ) நம்மிலும் பெரியவன், ஸமர்த்தனென்று, தேவராலே தன்பக்கலிலே வைக்கப்பட்ட உபயவிபூதிரூபமான பரத்தையுடையவனாலே (ப்ரியேண)ஸர்வாபிமதனானவனாலே. ( ஸேநாபதிநா ) ஸர்வஸேநாநிர்வாஹகனாலே அசைவிலமரர்தலைவர்தலைவா என்னக்கடவதிறே. ( யத்யதாந்யவேதி )யா

ச்லோ.—ஹதாகிலக்லேச மலைஸ்ஸ்வபாவத
ஸ்ஸதானுகூல்யை கரஸைஸ்தவோசிதை: -
க்ருஹீததத் தத்பரிசாரஸாதனை:
நிஷேவ்யமாணம் ஸசிவைர்யதோசிதம் - சரு.

தொருகார்யம் யாதொருபடி விண்ணப்பம் செய்யப்பட்டது, இதி லுண்மானம் புறமானம் பார்ப்பதில்லை, செய்யும் ப்ரகாரங்களும் அனுஸந்திப்பதுமில்லை; ஈச்வரன் இவனுக்கிஷ்டப்பின் செல்லுமத் தனை. (உதாரவீக்ஷணைஸ்தத்ததானுஜாநந்தம்) அவலோகனதானேன பூயோமாம்பாலயாச்ச்யுத, என்றும் உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கி ன்ற தண்டாமரைக் கண்ணனென்றும் சொல்லுகிறபடியே, அநவதி கதயாஸௌஹார்த்தானுக்ரஹ கர்பமான இக்கடாக்ஷங்களாலேயா யிற்று, இவனிப்படிசெய்வதென்று நினைப்பிடுவது - சஉ.

வ்யா.—ஹதாகிலேத்யாதி. ஸதாபச்யந்தி ஸூரய:, இத்யாதிக ளில் சொல்லுகிற நித்யஸூரிகளுடைய தாஸ்யைக ஸம்ருத்தியை அனுபவிக்கிறார். அடியார்கள் குழாங்களையுடன்கூடுவதென்று கொ லோவென்றிறே இவர்ப்ரார்த்தனை. (ஹதாகிலக்லேசமலை:) அவித்யா ஸ்மிதாபிநிவேசராகத் வேஷா: பஞ்சக்லேசா: என்கிறவைக்லேசங்க ள்; அவற்றினுடைய ப்ராகபாவத்தை யுடையவர்களென்கை. இத்தால் பத்தவ்யாவ்ருத்தி சொல்லுகிறது. மலமென்று ப்ரக்ருதியாய், தத் ஸம்ஸர்காநர்ஹதயாவந்தப்ராகபாவத்தை யுடையவர்களென்கை. இ த்தால், ப்ரபுத்தஸ்வபாவயுக்தரான முக்தவ்யாவ்ருத்தியைச்சொல்லு கிறது. (ஸ்வபாவதஸ்ஸதானுகூல்யைகரஸை: ) ஸத்தாப்ரயுக்தமான தேவர் திருவடிகளில் கைங்கர்யத்தையே போக்யமாக வுடையரா யிருக்கை. இத்தாலும், ஒருநாள் துடங்கி அடிமைசெய்யத் துடங்கின முக்தவ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. (தவோசிதை:) ஸ்வரூபரூப குணங்களாலே தேவருக்குஸத்ருசலக்ஷரானவர்கள். (க்ருஹீதேத்யா தி) கைங்கர்யோசித பரிகரங்களை ஆதராதிசயத்தாலே விடமாட்டா மையாலே, சூட்டுநன்மாலைப் படியே, தரித்திருக்கையாலே, தேவர் க்கேஸத்ருசரானவர்களாலே ஸேவிக்கப்படாநின்றுள்ளவுன்னை. (ஸ சிவை:)வாத்ஸல்யத்தாலே அவன் முறையழியப் பரிமாறநினைத்தாலு ம், அவனைமுறையுணர்த்தி அடிமைசெய்யுமவர்கள் நீதிவானவரிறே. ஆச்ரிதரக்ஷணத்தில் தேவரைப்ரேரிக்கு மவர்களிறே. (யதோசிதம்) ஸ்வரூபானுரூபமாக வென்னுதல், அவஸரோசிதமாக வென்னுதல்.

ச்லோ.—அபூர்வநாநாரஸபாவநிர்ப்பர
ப்ரபுத்தயாமுக்தவிதக்தலீலயா -
க்ஷணுணுவத்க்ஷிப்தபராதிகாலயா
ப்ரஹர்ஷயந்தம்மஹிஷீம்மஹாபுஜம் - சச.

வ்யா.—அபூர்வேதி. பவான்ஸ்துஸஹ வைதேஹ்யாகிரிஸானு ஷுரம்ஸ்யதே என்கிறபடியே, பிராட்டியை நாநாரஸங்களாலே உகப்பிக்கும் படியை அநுபவிக்கவேண்டுமென்கிறார். (அபூர்வ) ப்ரதிக்ஷணமும் முன்பு கண்டறியாததுபோலேயிருக்கை. (நாநாரஸபாவநிர்ப்பர) பஹுமுகமானர ஸத்தாலும், பாவத்தாலும், நெருங்கும்படி. (ப்ரபுத்தயா) ஸம்பத்தயா. ரஸமாவது - சேதனர், யாதொன்றைஅனுஸந்திய நின்றாலும், யேனமாத்யதி என்கிறபடியே, மதியாநிர்ப்பர்; அதிரேரஸம். அதுக்கடிபாவம் - மானஸவிகாஸம். (முக்தவிதக்தலீலயா) அவ்வோதசானு குணமாய், முக்தமாயும், விதத்தமாயும் உள்ளலீலையாலே. (க்ஷணுணுவத்க்ஷி ப்தபராதிகாலயா) ஒருக்ஷணத்தில் ஏகதேசம்போலே போகப்பட்ட பரகாலம். பரார்த்தகாலம். இவற்றையுடைத்தா யிருக்குமதனாலே. பரகாலமாகிறது - ப்ரஹ்மாயுஸ்ஸு; பரார்த்தகால மாகிறது - அதிற்செம்பாதி. (மஹிஷீம்ப்ரஹர்ஷயந்தம்) யஸ்த்வயாஸஹ ஸஸ் வர்க்கோநிரயோயஸ் த்வயாவிநா. த்வத்வியோகேநமேரா மத்யக்தவ்யமிஹஜீவிதம். ஸர்வதாதேநஹீநாயாராமேண விதிதாத்மனு. தீக்ஷ்ணம் விஷமிவாஸ்வாத்ய துர்லபம்மமஜீவிதம். அகலகில்லேனிறையு மென்கிறபடியே, வ்யதிரேகத்தில் ஆற்றமாட்டாத பிராட்டியை, மிகவு முகப்பியாநின்றுள்ளவனை. ப்ரஹர்ஷயந்தமென்கையாலே, இவ்வுகப்புநித்யமென்கை. (மஹாபுஜம்) சிழ்ச்சொன்னலீலாரஸத்தாலெ, உகப்பிக்குமவ ளோபாதியன்று; அணிமானத்தடவரைத்தோளாலே அணைத்து கப்பிக்கும். என்றும், ஸ்வரூப குணங்களில் காட்டில், ரூபகுணமிறேயினியதாயிருப்பது - சச.

ச்லோ.—அசிந்த்ய திவ்யாத்புதநித்யயௌவந
ஸ்வபாவலாவண்யமயாம்ருதோததிம் -
ஸ்ரீயச்ஸ்ரீயம்பக்தஜநைகஜீவிதம்
ஸமர்த்தமாபத்ஸகமர்த்திகல்பகம் - சரு.

வ்யா.—அசிந்த்யேதி. இப்படி பிராட்டியையுகப்பிக்கிற ரஸபாவங்களுக்கு ஆச்ரயமான வடிவையும், குணங்களை மனுஸந்திக்கிறார். (அசிந்த்ய)விக்ரஹகுணங்களுடைய அவாங்மநஸாகோசரத்வத்

ச்லோ.—பவந்தமேவானுசரன்னிரந்தரம்
ப்ரசாந்தநிச்சேஷமனோரதாந்தரः -
கதாஹமைகாந்திகநித்யகிங்கரः
ப்ரஹர்ஷயிஷ்யாமிஸநாதஜீவிதம் - சரு.

---

தைச் சொல்லுகிறது. ( திவ்ய ) நபூதஸங்கஸம் ஸ்தாநோதேஹோ ஸ்யபரமாத்மநः என்கிறபடியே, அப்ராக்ருதமாயிருக்கை. (அத்புத) க்ருஹீதாம்சம் ஆச்சர்யமாயிருக்கை. முழுசிவண்டாடி யதண்டுழா யின் மொய்மலர்க்கண்ணி யென்கிறபடியே, யிருக்கை. (நித்ய) அ காலகால்யத்வத்தைச் சொல்லுகிறது. ( யௌவநஸ்வபாவ ) யுவா குமாரः என்கிறபடியே, யிருக்கை. தருணௌரூப ஸம்பன்னௌ என்கிற ச்லோகத்தில்படியே, ஸ்வாபாவிகமான யௌவநத்தை யுடைத்தாயிருக்கை. ( லாவண்யமய ) ப்ரசுரமானஸாமான்யசோ பையையுடைத்தாயிருக்கை. (அம்ருதோததிம்) ஸர்வப்ரகாரயோக்ய தையாலே, அப்ரமேயோமஹோததிः என்கிறபடியே, பரிச்சேதிக் கப் போகாமைக்குஒருஸமுத்ரமென்னுமத்தனை.(ஸ்ரீயச்ஸ்ரீயம்)திரு வுக்கும் திருவாகியசெல்வன் என்கிறபடியே பிராட்டிக்கு, மங்களாவ ஹமாயிருக்குமவனை. (பக்தஜநைகஜீவிதம்) எல்லாம் கண்ணனென் கிறபடியே, ஆச்ரிதருக்கு, தாரகாதிகளெல்லாம் தானேயாயிருக்கும வனை. பக்தஜனங்களையே, தனக்குதாரகமாகவுடையவ னென்றுமாம். மமப்ராணாஹிபாண்டவாः. ( ஸமர்த்தம் ) அளவுடையரா ன நித்யஸூரிகள் அனுபவிக்குமவனை, நித்யஸம்ஸாரிகள் அனுப விக்கும்படி ஆற்றநல்லவகைகாட்டுமம்மானை என்கிறபடியே, ஸாத் மிக்கஸாத்மிக்க அனுபவிப்பிக்கும் ஸாமர்த்த்யத்தையுடையவுன்னை. (ஆபத்ஸகம்) காணவராயென்றுகண்ணும் வாயுந்துவர்ந்தவளவிலே, உதவும் ஸ்வபாவனானவுன்னை. (அர்த்திகல்பகம்) என்னையாக்கிக்கொ ண்டு எனக்கே தன்னைத்தந்தகற்பகம் என்கிறபடியே, தன்னைஔதார் யம் பண்ணுமவனை - சரு.

வ்யா.—பவந்தமித்யாதி. கீழ்ச்சொன்ன ஸ்வரூபரூபகுணவி பூதிகளால் பூர்ணனாய், நித்யவிபூதியிலே குறைவற வெழுந்தருளியி ருக்கிற தேவரை, பாஹ்யமனோரதங்களைத்தவிர்த்து, என்னுடைய ஸத்தையாலுள்ள ப்ரயோஜநம்பெறும்படி நித்யகைங்கர்யத்தாலே உகப்பிப்ப தென்றென்கிறார். ( பவந்தம் ) ஸ்வரூபரூபகுண வி பவைः பரிபூர்ணம். இன்பம்பயக்கவென்றுதுடங்கி, ஆள்கின்றவெ

ச்லோ.—திகசுசிமவினீதம் நிர்தயம்மாமலஜ்ஜம்
பரமபுருஷயோஹம் யோகிவர்யாக்ரகண்யைः -
விதிசிவஸநகாத்யைர் த்யாதுமத்யந்ததூரம்
தவபரிஜனபாவம் காமயேகாமவ்ருத்தः - சஎ.

ம்பெருமானென்கிற, பூர்த்தியைச்சொல்லுகிறது. (ஏவ) தனக்கே யாக வெனைக்கொள்ளுமீதே என்கிறபடியே, அனுகூலவ்ருத்தி, தேவருக்கே அனுகூலமாயிருக்கை. (அனுசரன்) யேநயேநதாதாகச்சதி, ஏதமானந்தமயமாத்மான முபஸங்கரம்ய - அனுஸஞ்சரன், குருஷ்வமாமனுசரம் என்கிறபடியே, அனுவர்த்தனத்தையுடையனாய், (நிரந்தரம்)இடைவிடாதேயிருக்கை.(ப்ரசாந்தேத்யாதி)மற்றைநங்காமங்கள் மாற்றென்று, தேவரையொழிந்தவிஷயங்களில், மனோவ்யாபாரங்களை ஸ்வாஸனமாகத்தவிர்த்து. (கதா) என்று கொல்கண்கள் காண்பதென்றும், என்னுள்யானுன்னை யினிவந்துகூடுவதென்னும்படியே, காலத்துக்கெல்லை அருளிச்செய்யவேணும். (அஹம்) ருசியேயாய்,இத்தலையால்உபாயமில்லாத நான். (ஐகாந்திகநித்யகிங்கரः) ஏகரூபமாய், யாவதாத்மபாவியான கைங்கர்யரூபமாகவுடையனாய். (ஸநாதஜீவிதः) ஸநாதமானஸத்தையுடையனாய், என்ஸத்தையை ஸப்ரயோஜனமாக்கியென்கை. (ப்ரஹர்ஷயிஷ்யாமி) மிகவும் உகப்பிக்கக்கடவேன். தன்னுடைய அனுவ்ருத்தியால், ஈச்வரனுக்குப்பிறந்த ப்ரஹர்ஷமிறே-சேதனனுக்கு ப்ராப்யம் - சசு.

வ்யா.—திகிதி. இதில், ப்ராப்யனான ஈச்வரனுடைய வைலக்ஷண்யத்தையும்,தம்முடைய பூர்வ வ்ருத்தத்தையும்பார்த்து,விதிசிவஸனகாதிகளுடைய மனஸ்ஸுக்கு அத்யந்ததூரமாய், அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள் ஆசைப்படுமதானகைங்கர்யத்தை,ஸம்ஸாரியானவனாசைப் படுகையாவதென்,ராஜான்னம்விஷ ஸம்ஸ்ப்ருஷ்டமாவதே என்று, வளவேழுலகில் ஆழ்வாரைப்போலே, தம்மை நிந்திக்கிறார்.(அசுசிம்)அனாதியான தேஹஸம்பந்தயுக்தனானவென்னை. தேஹஸம்பந்தாபாவம் ஸத்தாப்ரயுக்தமான நித்யஸித்தரிறே நித்யசுத்தர். (அவிநீதம்) இவ்வாத்மாவுக்கு தேஹஸம்பந்தம், அசுசிஹேதுவென்றறி கைக்கடியான ஆசார்யஸேவையில்லாமையாலே, ஸுசிக்ஷிதனல்லாத வென்னை. (நிர்த்தயம்) அம்ருதத்தை, விஷத்தாலே தூஷித்தாற்போல, விலக்ஷண போக்யமான பகவத் தத்வத்தை, க்கண்ணற்று தூஷிக்கப்பார்த்த நிர்த்தயனை. (அலஜ்ஜம்) கடதாஸீ, ஸார்வபௌமா னைமேல்விழுமாப்போலே,நம்மைப்பாராதே,மேல்

ச்லோ.—அபராதஸஹஸ்ரபாஜனம்
பதிதம்பீமபவார்ணவோதரே -
அகதிம்சரணாகதம்ஹரே
க்ருபயாகேவலமாத்ம ஸாத்குரு - சஅ.

விழுந்தோம், இது, அபஹாஸ்யமென்று, லஜ்ஜிக்கவு மறியாதவெ ன்னை. ( மாம்திக் ) இப்படி ஹேயகுண பூர்ணனான வென்னை, வே ண்டேனென்று தம்மை குத்ஸிக்கிறார். ( பரமபுருஷ ) ஸர்வாதிக னான புருஷோத்தமனே. ( யோஹம் ) நிஹீநாக்ரகண்யனென்று ப்ரஸித்தனான நான். ( யோகிவர் யேத்யாதி ) யோகிச்ரேஷ்டரில் ப்ரதமகண்யரான ப்ரஹ்மருத்ராதிகளென்ன, ப்ரஹ்மபாவநாநிஷ் டரான ஸநகாதிகளென்ன, இவர்களாலே நினைக்கைக்கும், அத்யந்த ம் தூரமாயுள்ளத்தை. ( தவபரிஜனபாவம் ) ஆத்மஸ்வாமியாய், நி ரதிசயபோக்யமான தேவருடைய கைங்கர்யாம்ருதத்தை, ஸத்தாப் ரயுக்தமான ருசியையும், வைலக்ஷண்யத்தையுமுடைய நித்யஸூரி கள் ஆதரிக்கு மத்தையன்றோ நான் ஆதரித்தது. ( காமயே ) ஸங்க த்தளவிலே நின்றேனோ, பெற்றல்லது தரியாத தசையைப்பற்றி நின்றேன். கதானுஸாக்ஷாத்கரவாணி யென்றும், கதாப்ரஹர்ஷயிஷ் யாமி யென்றும் கூப்பிட்டேன். ( காமவ்ருத்தஃ ) விஷய ப்ரவண னாய், யுக்தாயுக்தங்கள் பாராதாப்போலே தோற்றிற்றுசெய்த நான் ராகம் ஸ்வரூபத்தைப் பார்க்க வொட்டாதிறே - சஎ.

வ்யா.—அபராத. தம்முடைய அயோக்யதையை அனுஸந்தி த்து, அகலப்பார்த்தவர், ருசியின் மிகுதியாலே அகலமாட்டாதேநி ற்க, இந்த அயோக்யதைக்கு பரிஹாரமும், நம் க்ருபாஜனிதமான ப்ரபத்தியேகாணுமென்ன, மீண்டாராய், இந்த அயோக்யதா ஹே தூபூத ஸர்வாபாரதங்களுக்கும் பரிஹாரம் - தன்னுடையவெறுமை யை முன்னிட்டுப் பண்ணும் ப்ரபத்தியே ஆகாதேஎன்று, வேதாந்த ரஹஸ்யத்தை முன்னிட்டு, கேவலக்ருபையாலே தேவர், என்பா பத்தைப்போக்கி விஷயீகரிக்க வேணுமென்கிறார். அதவா, தாம்ப்ரா ர்த்தித்தபோதே ப்ராப்யம் ஸித்தியாமையாலே, ஸம்ஸாரியான நாம் ஆசைப்படக் கடவோமோவென்று, நிந்தித்துக்கொண்டு, பின்பும் ருசியாலே அகலமாட்டாதே, இப்படி விளம்பிக்கைக்கு ஹேதுவான பாபத்தையும், தேவருடைய கேவல க்ருபையாலே போக்கித் தந்தருளவேணுமென்கிறாராகவுமாம். அத்தலையில்பெரு

ச்லோ.—அவிவேககநாந்ததிங்முகே
பஹுதாஸந்ததது:கவர்ஷிணி -
பகவன்பவதுர்த்தினேபத
ஸ்கலிதம்மாமவலோகயாச்யுத - சகூ.

மையின் எல்லையைப்பார்த்து அகன்றார் அங்கு. இங்கு, நீர்மையின் எல்லையைப்பார்த்துக்கிட்டுகிறார். (அபராதஸஹஸ்ரபாஜநம்) தேவர் குணைகபாஜனரானால்போலே, அஸங்குசிதமான அபராதங்களுக்குக் கொள்கலமானவென்னை. அபராதசப்தத்தாலே சொல்லிற்று, புண்யபாபரூபமான பகவன்நிக்ரஹானுக்ரஹமென்கை. ஆகையால், இந்தவேதார்த்தத்தை வெளியிடுகிறார். (பதிதம்) அந்தபாபத்தை விளைக்கும் ஸம்ஸாரத்திலே இருந்திறே கூப்பிடுகிறது. கொடுவினைத் தூற்றுள்நின்று. (பீம) ஜ்ஞாநம் பிறந்தார்க்குக் கட்டடங்க பயாவஹமாயிருக்குமென்கை. அஹம்பீதோஸ்மிதேவேச ஸம்ஸாரேஸ்மின் பயாவஹே. (பவார்ணவ) பரிச்சேதிக்கவரிதாய், அத்தாலே துஸ்தரமாயிருக்கை. ஸம்ஸாரமாகிறகடலிலே புக்கார்க்கு, விஷ்ணுபோதமொழிய, தந்தாமால் கரையேறவொண்ணாதிருக்கை. வைகுந்தனென்பதோர்தோணிபெறாதுழல்கின்றேன் என்னக்கடவதிறே. (உதரே) நின்பன்மாமாயப்பல் பிறவியில்ப் படுகின்றயானென்கிறபடியே, எடுக்கப்பார்த்தாலு முனக்கு மெட்டாதபடியாயிருக்கை. (பதிதம்) கர்மம்புகத்தள்ள விழுந்துகிடக்கிறபடி. (அகதிம்) உன்னையொழிய வேறு புகலற்றிருக்கிற வென்னை. (சரணாகதம்) சரணாகதசப்தயுக்தனானவென்னை. (ஹரே) மித்ரபாவமேயடியாக ஸமஸ்ததுஃகங்களையும் போக்குகையே ஸ்வபாவமாகவுடையவனே. (கேவலம்க்ருபயா) ஆர்த்தப்ரபன்ன னல்லேனென்னாதே, க்ருபாமாத்ரமநோவ்ருத்திஃ என்கிறபடியே, ஸஹகாரமில்லாத க்ருபையினாலே. (ஆத்மஸாத்குரு) ஆத்மஸாத்தாகப்பண்ணி யருளவேணும். நம்முடையவனென்று விஷயீகரித்தருளவேணும் - சஅ.

வ்யா.—அவிவேக. அபராதபஹுளமான பின்பு, சாஸ்த்ரீயமான உபாயாந்தரங்களை பற்றிப் போக்குதல், விட்டுபற்றுதல் செய்கையொழிய, க்ருபயாகேவலமாத்மஸாத்குரு வென்று, நம்மைநிர்ப்பந்திக்கிற தென்னென்ன. சாஸ்த்ரீயானுஷ்டானத்துக்கு ஜ்ஞாநமேயில்லை. வேறுகதியில்லாமையாலே, விடமாட்டேன். ஆனபின்பு, க்ருபாகார்யமான விசேஷகடாக்ஷமே - எனக்குஜ் ஜீவன

ச்லோ.—நம்ருஷாபரமார்த்தமேவமே
ச்ருணுவிஜ்ஞாபனமேகமக்ரத: -
யதிமேநதயிஷ்யஸேததோ
தயநீயஸதவநாததுர்லப: ௫0.

ஸாதனமென்கிறார். (அவிவேக) அதாவது - விவேகாபாவம்; ஜீவபர விவேகாபாவம். தேஹாத்மவிவேகாபாவம். த்யாஜ்யோபாதேயவி வேகாபாவம். பந்தவிமோசன விவேகாபாவம். இவையாகிற மேகப டலங்களாலே திரோஹிதமான மனஸ்ஸை யுடையவனுகையாலே, உஜ்ஜீவநோபாயத்தில், திங்மாத்ரமும் தெரியாதிருக்கிறதற்குமேலே. (பஹுதாஸந்ததது:கவர்ஷிணி) பஹுப்ரகாரமாய்,இடைவிடாதே யுண்டான து:கவர்ஷத்தையுடைத்தானதிலே. அவிவேகம்து:கத்தைவி ளைக்கையாவது-அஜ்ஞாநத்தாலே கர்மமாய், அத்தாலே தேவாதிச ரீரப்ரவேசமாய், அத்தாலே தாபத்ரயரூபமானது:கமாயிருக்கும். பொய்நின்றஞாநமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும் என் கிறபடியே. (பஹுதா) ஆத்யாத்மிகாதி பஹுப்ரகாரமாயிருக்கை. ( பகவன் ) இத்தலையில் து:க்கத்தை பரிஹரிக்கைக்கு, ஜ்ஞாநசக்த்ய பாவத்தாலும், தேவரா லல்லது பரிஹாரமில்லாத இதிலும்,தே வர் அறியாததுண்டோ. (பவதுர்த்திநே) ஸம்ஸாரமாகிற மழைக்கா விருளிலே. துர்த்திநம்-மேகதிமிரம். (பதஸ்கலிதம்)கொடுவினைத்தூ ற்றுள் நின்றுபாவியேன் பலகாலும் வழிதிகைத்தலமருகின்றேன், என்கிறபடியே. (மாம்) கர்மாத்யுபாயங்களில் ப்ரச்ச்யுதனை யென் னை. நான்படுகிறபாடு - இதுவானல், சாஸ்த்ரீயானுஷ்டானத்துக்கு நான்ஆர்.தேவரையொழிய வேறுண்டோவென்று கருத்து.(அவலோ கய) அவலோகநதாநே நபூயோமாம்பாலய என்று சொல்லுகிறப டியே, ஸகலக்லேசமும் போம்படி பார்த்தருளவேணும். ஸாதனாந் தரநிஷ்டர்க்கும், தேவர்விசேஷகடாக்ஷம் உத்தாரகமிறே. ஜாயமான ம்ஹிபுருஷம்பச்யேன்மதுஸூதனஃ என்று,அதிகாரஸித்தியும் தேவர்கடாக்ஷமேயிறே. ஜிதந்தேபுண்டரீகாக்ஷ என்று,புறம்புள்ளது வக்கையறுப்பது முன்விசேஷகடாக்ஷமிறே. (அச்ச்யுத) அடியரைவ ல்வினைத்துப்பாம்புலனைந்தும் துஞ்சக்கொடானென்கிறபடியே, ஆ ச்ரிதரை ஒருவழியாலும் நசிக்கவிட்டுக்கொடாதவரிறேதேவர்-சகூ.

வ்யா.—நம்ருஷேதி. தேவர்க்ருபையாலல்லது, வேறெனக்கு யில்லாத வோபாதி, தேவர்க்ருபைக்கு நானல்லதுவிஷயமில்லை. இ

ச்லோ.—ததஹம்த்வத்ருதேநநாதவாந்
மத்ருதேத்வம்தயநீயவான்னச -
விதிநிர்மிதமேதமன்வயம்
பகவன்பாலயமாஸ்மஜீஹப: - ௫௧.

த்தையிழவாதே கொள்ளீர் என்கிறார். ( நம்ருஷாபரமார்த்தமேவ) இதுஸம்ஸாரத்திலே கேட்டறிவதொன் றல்லாமையாலே, மெய் யாகமாட்டாதென்று, ஈச்வரஹ்ருதயத்தில் பிறந்த அதிசங்கையை த் தவிர்க்கைக்காக, அன்வய வ்யதிரேகத்தாலே ஸத்யமென்கிறார். ( நம்ருஷா ) லௌகிகர்பக்கலிலே இரக்கம் பிறக்கைக்காக, அ புத்யாச்சொல்லும் வார்த்தையைப்போலே பொய்யன்று. ( பர மார்த்தமேவ ) நினைவுக்கு வாய்த்தலையிலிருந்து அறியும் தேவர் திரு முன்பே, மெய்யே விண்ணப்பம் செய்யலாம்படி ஸத்யமே. (மேவிஜ்ஞாபனம்) ஸர்வஜ்ஞரான தேவர் திருமுன்பே விண்ணப் பம்செய்யுமதுவே - உஜ்ஜீவனோபாயமென்று இருக்கும்என்னுடை ய விண்ணப்பத்தை ; மெய்நின்று கேட்டருளாய் அடியேன் செய் யும் விண்ணப்பமென்னக்கடவதிறே. (ஏகம்) அத்விதீயம். இதுக்கு மேலாக, நிஷ்கர்ஷித்துச் சொல்லுவதொருவார்த்தையில்லை ; இது வேஎல்லையான நிஷ்கர்ஷம். (அக்ரத ஃ ச்ருணு) மேல்கார்யம் செய் யிலும், செய்யாதொழியிலும், முற்படக்கேட்டருளவேணும். ஸம் ஸாரத்தில் பரிமாறுதொன்றென்று அநாதரியாதே, அவதானம் பண் ணிக்கேட்டருளவேணும். ( யதிமேனதயிஷ்யஸே ) தயைகரக்ஷ்யனா ன வெனக்கு, தயைபண்ணியருளீராகில். (தத: ) தேவரீரைக்கிட்டி ன இவ்வஸ்து தப்பினால், பின்பு. ( தயநீயஸ்தவ ) ரக்ஷ்யவிஷயா ர்த்தியான தேவருக்கு ஸாபராதநாய், அநுதாபம் பிறந்ததயநீயவி ஷயம். (நாத) ரக்ஷ்யவிஷயார்த்தியாகைக்கு, தயையேயன்று, ப்ரா ப்தியுமுண்டென்கை. (துர்லப:) தயைகரக்ஷ்யராயிருப்பார் - துர்ல பர். ஸமஹாத்மாஸு-துர்லப : என்னுமவரிறே தேவர் - ௫௦.

வ்யா.—ததஹம். இப்படி தயநீயதயாவான்களான இருவர்க் கும், முக்க்யமான இஸஸம்பந்தம்தானும், தேவரீருடைய க்ரு பையாலேயாயிற்று, ஆனபின்பு, இதைக்கைவிடாதே ரக்ஷித்தருள வேணுமென்கிறார். (தத்) ஆதலால். தயநீயர், தேவருக்கு துர்லமானபி ன்பு. (அஹம்) ஸாபராதனாய், அநுதாபம்பிறந்த நான். (த்வத்ரு தேநநாதவான்) ப்ருசம்பவதிதுஃகித: என்று, து கியானவென்னிலும்,

ச்லோ.—வபுராதிஷு யோபிகோபிவா
குணதோஸாநியதாததாவித: -
ததஹம்தவபாதபத்மயோ
ரஹமத்யைவமயாஸமர்ப்பித: - ருஉ.

என் துஃகத்தைப் பொறுக்கமாட்டாத தேவரையொழிய நாதவானல்லேன். பரதுஃகாஸஹிஷ்ணுத்வமேயிறே தயை. (மத்ருதேத்வம் தயநீயவான்னச) தயைகரக்ஷயனுன வென்னையொழிந்தாலும், தேவரீருடையக்ருபை,குமரிந்துபோமித்தனை. (ஏததன்வயம்விதிநிர்மிதம்) ஒருவரையொழிய வொருவருக்குச்செல்லாத இம்முக்யஸம்பந்தம், தேவரீருடைய கேவலக்ருபையாலேவந்தது. விதிவாய்க்கின்று காப்பாரார் என்கிறபடியே. இப்பக்ஷத்தில்,ததஹமென்கிறவிடத்தில் தத்சப்தம், மேலுக்குஉடலாக விங்கும் அன்வயிக்கக்கடவது. அதவா, விதியென்று - தைவமாய், இச்சாதஏவதவவிச்வபதார்த்தஸத்தா என்கிறபடியே, ஸத்தாப்ரயுக்தமான ஸம்பந்தத்தைச் சொல்லிற்முகவுமாம். (பகவன்) இவற்றில் தேவர்க்கு அறிவிக்கவேண்டுவதுண்டோ. (பாலய) இதை ரக்ஷித்தருளவேண்டுமென்னுதல், இதை புஜித்தருளவேண்டுமென்னுதல். புஜபாலனுப்யவஹாரயோ:. (மாஸ்மஜீஹப:) இத்தலையில் பூர்வாபராதத்தைப்பார்த்தாதல்,தேவர் பூர்த்தியைப்பார்த்தாதல் கைவிட்டருளாதொழியவேண்டும் - ருக.

வ்யா.—வபுராதிஷு. இதில், ஆத்மானுரூபமாகவன்றே, நம்முடைய ரக்ஷணமிருப்பது. தயநீயரான வும்முடைய ஸ்வரூபத்தை நிஷ்கர்ஷித்து, நம்பக்கலிலே ஸமர்ப்பியுமென்ன; சிறப்பில் வீடென்கிற பாட்டின்படியே, எனக்கு அதில் நிர்பந்தமில்லை. அஹம்புத்திபோத்யமான இவ்வஸ்து, தேவர்திருவடிகளிலே, என்னுலே ஸமர்ப்பிதமென்கிறுர். (வபுராதிஷு) தேஹேந்த்ரியமன: ப்ராணபுத்திகளைச்சொல்லுகிறது. இவற்றில், ஒன்றே ஆத்மா என்பாரும், ப்ரக்ருதே:பரமாய், ஜ்ஞாநாநந்தலக்ஷணமென்பாருமாய், ஸ்வரூபத்திலே விப்ரதிபத்தியுண்டாயிருக்கும். இவற்றில் ஏதேனுமொன்று-ஸ்வரூபமாகவுமாம். (குணதோஸாநியதாததாவித:) ஸ்வபாவதோணுத்வ, விபுத்வ, சரீரபரிமாணத்வ, நித்யத்வா, நித்யத்வ, ஜ்ஞாத்ருத்வாதிகளிலே விப்ரதிபத்தியுண்டாயிருக்கும். அதிலேதேனுமொன்று ஸ்வரூபமாகிலும், அதிலு மெனக்கு ஒருநிர்பந்தமில்லை. (தத்) தஸ்மாத். கீழ்ச்சொன்ன ஸ்வரூபஸ்வபாவங்களிலே நிர்ப்பந்தமில்

ச்லோ.—மமநாதயதஸ்தியோஸ்ம்யஹம்
ஸகலம்தத்திதவைவமாதவ -
நியத்ஸ்வமிதிப்ரபுத்ததீ
ரதவாகின்னுஸமர்ப்பயாமிதே - ருரு.

லாமையாலே. (அஹம்) பராகர்த்த வ்யாவ்ருத்தனுய், ப்ரத்யகர்த்த பூதனுய், ப்ரத்யக்ஷபூதனுய் ப்ரத்யக்ஷிக்கிற நான். (தவபாதபத்மயோ:) ரக்ஷகரான தேவருடைய போக்யமான திருவடிகளிலே. (அத்யைவ) ஆத்மா-க்ஷணிகமாகிலும்,இந்தக்ஷணத்திலே ஸமர்ப்பிதமென்கை. (மயாஸமர்ப்பித:) என்னுலே ஸமர்ப்பிதன். யோஹமஸ்மி ஸஸந்யஜே, யஸ்யாஸ்மிநதமந்தரேமி. ஆத்மா ராஜ்யம் தனம் மித்ரம் களத்ரம் வாஹநாநிச. இதிதத்ப்ரேக்ஷிதம்ஸதா. ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ய தர்மம்வக்துமிஹார்ஹஸி - ருஉ.

வ்யா.—மமநாதேதி. இவரை, ப்ரமத்தோடே விடுகிறதென்னென்று பார்த்தருளி, நீர், ஆரத்தை ஆருக்கு ஸமர்ப்பித்தீரென்ன, நிரூபித்தவிடத்து,எனதாவியாவியும் நீ,எனதாவியார்யானுர், யென்கிறபடியே, யுமதை நீரோ ஸ்வீகரித்தீரித்தனே. ஆத்மஸமர்ப்பணமும், ஆத்மாபஹாரமோபாதி என்று, பண்ணின ஆத்மஸமர்ப்பணத்தை அனுசயிக்கிருர். பகவத்பரதந்த்ரமான ஆத்மாவுக்கு, அநாத்யவித்யாஸித்தமான ஸ்வாதந்த்ர்யமடியாக பகவத்வைமுக்யம்பிறந்து, அத்தாலே ஹதனென்று பீதிபிறந்தவளவிலே, ததீயத்வானுஸந்தானத்தால்வந்த தாதாத்ம்யைககரண ஸங்கல்பமாதல், ராஜாபரணத்தை ரக்ஷித்துவைத்து, ப்ராப்தகாலங்களிலே கொடுக்குமாப்போலே, ஆத்மாவை ஈச்வரன்பக்கலிலே ஸமர்ப்பிக்கை யென்னுதல். இவையிரண்டு மர்த்தமன்றென்றும்படி, பண்டே அவனதானவஸ்துவை, அவனதாக விசையுமதொழிய, ஸமர்ப்பணமும். ஆத்மாபஹாரத்தோடொக்கும். (நாத) அகிலஜகத்ஸ்வாமின். அவனதானஸம்பந்தத்தைச்சொல்லுகிறது. (மமயதஸ்தியோஹமஸ்மி) குணமாயும், விபூதியாயும், மமதாவிஷயமாயுமுள்ளது யாதொன்று,அதுக்கு,ஆச்ரயமான நான் யாவனெருவனுகிறேன். (தத்ஸகலம்) ஔபாதிகமாயும், ஸ்வாபாவிகமாயுமுள்ளதெல்லாம். (மாதவதவைவ) ஸ்ரிய:பதியாய், ஸர்வசேஷியாயுள்ள உன்னுடையவது. அவதாரணத்தால், அன்யசேஷித்வத்தை வ்யாவர்த்திக்கிறது. (ஹி)ஸர்வேஷாமேவலோகாநாம் பிதாமாதாசமாதவ: இத்யாதி ப்ரமாண ப்ரஸித்தியைச்சொ

ச்லோ.—அவபோதிதவாநிமாம்யதா
மயிநித்யாம்பவதீயதாம் ஸ்வயம் -
க்ருபயைததநந்ய போக்யதாம்
பகவன்பக்தி மபிப்ரயச்சமே - ௫௪.

ல்லுகிறது. ( நாதமாதவ ) ஸர்வஸ்வாமியாய், ஸ்ரீயஃபதியான வஸ்துவுக்கே, அனன்யார்ஹசேஷிம் - ஸகலபதார்த்தங்களுமென்கை. யானே நீ யென்னுடைமையும்நீயே. (நியதஸ்வமித்யாதி) ஸமர்ப்பணம்மிகையாம்படி, ஜ்ஞாநம்பிறந்தகாலத்துடன், ப்ரமித்தகாலத்துடன் வாசியற, (நியதஸ்வமிதிப்ரபுத்ததீ:) என்று, தெரிந்தபுத்தியையுடையநான். ( அதவா ) கீழில் ஸமர்ப்பணபக்ஷ வ்யாவ்ருத்தி. ( தேஇன்னுஸமர்ப்பயாமி ) இதனையுடையவுனக்கு, எதை ஸமர்ப்பிப்பேன். ஸமர்ப்பணீயமேது; ஸமர்ப்பகரார். ஸமர்ப்பணீயமாகைக்கு ஸ்வாம்யமில்லை. ஸமர்ப்பிகைக்கு ஸ்வாதந்த்ர்யமில்லை. ஸம்ஸாரபீதியாலே ஸமர்ப்பிக்கையும், ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநத்தாலே அநுசயிக்கையும், இரண்டும்யாவன் மோக்ஷமநுவர்த்திக்கக்கடவது.

வ்யா.—அவபோதித. ஆத்மாபஹாரபர்யாயமான ஆத்மஸமர்ப்பணத்தளவிலே, நான் னில்லாமையாலே, நிர்ஹேதுகக்ருபையாலே, இதரசேஷித்வத்தை யுணர்த்தினுப்போலே, யிந்த ஜ்ஞானம் புருஷார்தோபயோகியாம்படி யிந்தக்ருபையாலே ஸ்தாநத்ரயோதிதபரபக்தியைத் தந்தருளவேண்டுமென்கிறார். (மயிநித்யாம்பவதீயதாம் அவபோதிதவான் ) என்பக்கலிலே நியதையானத்வத்விஷய சேஷிதையை. பவதீயதை யென்கையாலே, அன்யசேஷித்வவ்யாவ்ருத்தி. மயிநித்யாம் என்றது, இத்தலையில் பகவத்சேஷித்வம் ஸ்வரூபமென்கை. ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம். இமாமென்று, சேஷித்வத்தில், இனிமையாலேகொண்டாடுகிறார். ( யதாஅவயோதிவான் ) யாதொருபடி அறிவிக்கப்பட்டேன். ( ஸ்வயம்க்ருபயா ) கேவலக்ருபையாலே. ஸ்வயம் - கேவலம் ( ஏததநந்யயோக்யதாம் ) இதொழியவேறொன்றும் நெஞ்சுக்கு விஷயமாகாதபடியிருக்கும் போக்யதையையுடைத்தான பக்தியை. ( பகவன் ) ஒன்றை ஒருத்தனுக்குச் கொடுப்போமென்றால், ஒருதடையில்லாத ஜ்ஞாநசக்த்யாதிகளால் பூர்ணனென்கை. (பக்திமபிப்ரயச்ச ) யாதொருபடி ஜ்ஞாநத்தைத்தந்தாய், அப்படியே பக்தியையும் தந்தருளவேணும். (மே) அஜ்ஞனாய், அசக்தனாய், ருசிமாத்ரமேயாயிருக்கிறவெனக்கு - ௫௪.

ச்லோ.—தவதாஸ்யஸுகைகஸங்கிநாம்
பவநேஷ்வஸ்த்வபிகீடஜன்மமே -
இதராவஸதேஷுமாஸ்மபூ
தபிமேஜன்மசதுர்முகாத்மநா - ௫௫.

---

வ்யா.—தவதாஸ்யேதி. பகவத்ப்ரஸாதத்தாலே லப்தமானப க்தி ப்ராசுர்யத்தாலே, தச்சேஷத்தளவிலே பர்யவஸியாதே, ததீய சேஷத்வத்தை ப்ரார்த்திக்கிறார். ஆழ்வார், கண்கள் சிவந்ததிலே, பகவத்சேஷத்வத்தை அனுபவித்து, கருமாணிக்கமலையிலே, அனன் யார்ஹசேஷத்வத்தை யனுஸந்தித்து, அவ்வளவிலும் பர்யவஸியா தே, நெடுமாற்கடிமையிலே, ததீயசேஷத்வத்தை யனுஸந்தித்தாப் போலேயும், ஸ்ரீராமாயண புருஷர்களில், ஸ்ரீ சத்ருக்னாழ்வானைப் போலேயும், ததீயசேஷத்வத்தையே ப்ரார்த்திக்கிறார். ( தவதா ஸ்யஸுகைகஸங்கிநாம் ) ஐச்வர்யகைவல்யஸுகங்கள் விக்னமாம் படியிறே தாஸ்யஸுகமிருப்பது. தஸ்யாந்தராயோ மைத்ரேய தேவேந்த்ரத்வாதிகம் பதம். ஸ்வர்க்கோபிதஸ்யவிக்னேனுமீயதே என்றும், அற்றதுபற்றெனிலுற்றது வீடுயிர்செற்றதுஎன்றும், இறுகலிறப்பென்றும், இவை, தாஸ்யத்துக்கு விரோதியாயிறேயிருப் பது. ( ஏகஸங்கிநாம் ) நிஸ்தரந்திமனிஷிண: என்றும், ஸோத்வந: பாரமாப்னோதி, தத்விஷ்ணோ:பரமம்பதம் என்றும், ஸம்ஸாரநிவ்ரு த்தியால்வந்த ஸுகமும், பரமபத ப்ராப்தியால்வந்த ஸுகமும், தாஸ்யஸுகத்துக்கு அபாயமென்கை. தஸ்யயஜ்ஞ வராஹஸ்ய விஷ்ணோரமிததேஜஸ: - ப்ரணாமம்யேபிகுர்வந்தி தேஷாமபிந மோநம:. வாஸுதேவஸ்யயேபக்தா: சாந்தாஸ்தத்கதமானஸா:- தேஷாம் தாஸஸ்யதாஸோஹம் பவேத்ஜன்மனிஜன்மனி. அடியார் அடியாரடியாரெங்கோக்கள் அவர்க்கேகுடிகளாய்ச்செல்லும் நல்ல கோட்பாடேவாய்க்க வென்னக்கடவதிறே. தாஸ்யரஸம்ரஸித்தால், ( தேஷாம்பவநேஷு கீடஜன்மமேப்யஸ்து ) அவர்கள் திருவடிக ளில் அடிமைசெய்யவேண்டா, அவர்கள் திருமாளிகையில், ஒருகீட மாய், ஜனிக்குமதாகிலும் உண்டாகவேண்டும் அபிசப்தம், அவதா ரணத்திலேயாய்,கீடஜன்மமே உண்டாகவேண்டுமென்றுமாம். மனு ஷ்யாதி ஜன்மங்களிலாசைப்படாதொழிந்தது, தேசாந்தரப்ரமண ஸம்பாவனையாலே உத்பத்தி ஸ்திதிலயங்கள் அங்கேயாகக் கிடையா தென்றுமத்தாலே, எல்லாரும் உத்க்ருஷ்டஜன்மங்களையன்றோ, ஆ

ச்லோ.—ஸக்ருத்த்வதாகார விலோகநாசயா
தருணீக்ருதாநுத்தமபுக்திமுக்திபி: -
மஹாத்மபிர்மாமவலோக்யதாம்நய
க்ஷணேபிதேயத்விரஹோதி துஸ்ஸஹ: - ௫௬.

---

சைப்படுவதென்ன, தந்தாமுகந்ததன்றோ புருஷார்த்தமென்கிறது. எனக்கிதுவேபெறவேணுமென்கை. ( இதராவஸதேஷு ) தாஸ்யர ஸமறியாதே எனக்கென்றுமவர்கள் இருப்பிடத்திலே. ( சதுர்முகா த்மஜஜன்மாபிமாஸ்மபூத் ) சதுர்முகருபேணவரும் ஜன்மமும்யெ னக்குண்டாமதன்று. சதுர்முகாதிஜன்மம் லௌகிகருக்கு ச்லாக்ய மாநாலும், தாஸ்யருசியையுடைய வெனக்குவேண்டாவென்கிறார். அன்வயத்திலும், வ்யதிரேகத்திலும், இரண்டிலுமுண்டான நிர்ப்ப ந்தந்தோற்ற விருக்கலாமென்கிறார்- ௫௫.

வ்யா.—ஸக்ருதிதி. வைஷ்ணவக்ருஹத்தில் பிறக்கும் பிறப்பா ல்வந்த வேற்றமெல்லாம் வேணுமோ, அவர்கள்கண்டாலு பேக்ஷி யாதே, நம்முடையவனென்று, விசேஷகடாக்ஷம்பண்ணுகைக்கு அ ர்ஹனும்படி பண்ணியருளவேணுமென்கிறார். ( ஸக்ருத்த்வதாகார விலோகநாசயா ) பச்யேமசரதச்சதம், ஸதாபச்யந்திஸூரய: என் கிறபடியே, ஸதாதர்சனம்பண்ணவேண்டியிருக்க, ஸக்ருத், என்றது த்தையை தரிப்பிக்கைக்கு ஒருக்காலமையு மென்கைக்காக, போக மோக்ஷங்களை யுபேக்ஷிக்கைக்கு மொருக்காலமையு மென்கைக்காக. ஒருநாள் காணவாராய் என்றிறேவிடாய்த்தவர்வார்த்தை. நம்மை யொருகால்காட்டிநடந்தால் நாங்களுய்யோமோ. ( த்வதாகாரவி லோகந ) ஸ்வரூபத்தளவிலும், ததாச்ரயமான குணத்தளவிலும் பர்யவஸியாதே, உபயத்துக்கும் ப்ரகாசமான விக்ரஹத்தளவிலே வர அவகாஹித்தவர்கள். ( விலோகந ). ஸூகாடம்பரிஷ்ஸ்வஜே என்னு மளவெல்லாம்வேண்டா, ஒருக்கால் காணவமையும். (ஆசயா த்ருணீக்ருதாநுத்தமபுத்திமுக்திபி: ) காணவேண்டாகாண், காண வேணுமென்று மாசைதானேத்ருணீகரிப்பிக்கும். அநுத்தமபுக்தி: ப்ரஹ்மாதிகள்போகம். அநுத்தமமுக்தி: பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷம். அலமத்யஹி புக்தைர்ந:பரமார்த்தைரலஞ்சந: - யதாப ச்யேமநிர்யாந்தம் ராமம் ராஜ்யே ப்ரதிஷ்டிதம். த்வயாபிப்ராப்த மைச்வர்யம் ஏதேவைநிரயாஸ்ததா, ஸ்தாநஸ்ய பரமாத்மந:. (மஹா த்மபி:) மஹாத்மானஸ்துமாம் பார்த்ததை விம்ப்ரக்ருதிமாச்ரிதா:.

ச்லோ.—நதேஹம்நப்ராணன்னசஸுகமசேஷாபிலஷிதம்
நசாத்மாநம் நாந்யத்கிமபிதவ சேஷித்வவிபவாத் -
பஹிர்ப்பூதம் நாதக்ஷணமபிஸஹேயாதுசததா
விநாசந்தத்ஸத்ய்ம்மது மதநவிஜ்ஞாபநமிதம்-ருஎ.

---

ஸமஹாத்மாஸுதுர்லபஃ என்றும், பேராளன் பேரோதும் பெரியோரைஎன்றும், ஈச்வரந்தானும், ஆழ்வார்களுங்கூடக் கவிபாடுகிறவர்களாலே. ( மாம் ) புருஷார்த்தத்தின்மேலெல்லையிலே ருசியையுடையவென்னை. ( அவலோக்யதாம் ) அவலோகநவிஷயனும்படி. ( நய ) ஸர்வசக்தியான தேவர் நிர்வஹிக்கவேண்டும். நம்பக்கலொழிய,நம்முடையார்பக்கல்கிட ஜன்மமேப்யஸ்து என்றும், அவலோக்யதாம் நயவென்றும், அத்யாதரத்தைப் பண்ணுகிறதெத்தாலேயென்ன; ஸாபேக்ஷனன நானுதரிக்கைக்கு ஹேதுவைச் சொல்லுகிறேன்.ஸ்வதஃபூர்ணரான தேவருக்கு அவர்களுடையவிச்லேஷம் அஸஹ்யமாயிருக்கைக்குஹேது அருளிச்செய்ய வேணுமென்கிறுர். ( தே ) ஸ்வதஃபூரணனுப், அவாப்தஸமஸ்தகாமனுன தேவருக்கு க்ஷணமாத்ரம் துஸ்ஸஹமன்று. அதிதுஸ்ஸஹமென்கை. சிரஞ்ஜீவதிவைதேஹியதிமாஸம்தரிஷ்யதி. நஜீவேயம் க்ஷணமபிவிநாதாமஸிதேக்ஷணும். யத்விநாபரதம்த்வாஞ்ச சத்ருக்நஞ்சாபிமானவ - ஸம்ஸ்மராம்யஸ்ய்வாக்யாநி. ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம். மமப்ராணுஹிபாண்டவா ஃ. கிங்கார்யம்ஸீதயாமம - ருகூ.

வ்யா.—நதேஹமிதி. கீழ்சேஷித்வகாஷ்டையான ததீயசேஷித்வத்தை அனுஸந்தித்தார். இதில் சேஷித்வத்துக்குப் புறம்பானவற்றில் அருசியைச்சொல்லி அவற்றைத்தவிர்த்துத் தந்தருளவேணுமென்கிறுர். ( நதேஹம் ) அஹமபிமானத்துக்கு அர்ஹமாம்படி அந்தரங்கமான சரீரத்தையும், தேவருடைய சேஷித்வத்துக்குப் புறம்பாகில் வேண்டேன். ( நப்ராணன் ) தேஹாதிகளுக்குந் தாரகமான ப்ராணன்களையும் சேஷித்வபஹிர்பூதமாகில்வேண்டேன்.( நசஸுகம் ) தேஹாதிகளையும், ப்ராணன்களையும், ஆதரிப்பது ஸுகார்த்தமாகவிறே. அந்தஸுகமும் வேண்டா. ஸுகமென்று மோக்ஷஸுகத்தைச் சொல்லவுமாம். ( அசேஷாபிலஷிதம்ஸுகம் ) எல்லாருமாதரிக்கும் ஸுகமென்றுமாம். ஸுகமென்னென்னில், தேவாதிஸகலஜந்துக்களும் ஆதரிக்குமிறே. ஸுகமென்று பிரியச்சொன்னபோது அசேஷாபிலஷிதம் நாந்யத்கிமபிஎன்று மேல்கூடக்கடவது. நாந்ய

ச்லோ.—துரந்தஸ்யாநாதேரபரிஹரணீயஸ்யமஹதோ
நிஹீநாசாரோஹம் ந்ரபசுரசுபஸ்யாஸ்பதமபி -
தயாஸிந்தோபந்தோநிரவதிகவாத்ஸல்யஜலதே
தவஸ்மாரம்ஸ்மாரம் குணகணமிதிச்சாமிகதபீ:-ருஅ.

த்கிமபி என்கிறது, புத்ரமித்ரகளத்ரங்களென்கிறது. (நசாத்மானம்) கீழ்ச்சொன்ன ஸகலத்துக்கும் ஆச்ரயமாய், ஜ்ஞாத்ருத்வகத்ருத்வ போக்த்ருத்வங்களையுடையஆத்மாவை. (தவசேஷத்வவிபவாத்பஹிர்ப் பூதம்) ப்ராப்தவிஷயத்தில் சேஷித்வமாகிற பெருமைக்குப் புறம் பானத்தை. அந்தர்ப்பூதமானவன்று எல்லாம் உபாதேயமென்கை. (நாத) சேஷித்வத்துக்குப் புறம்பானவை அஸஹ்யமென்கைக்கு அடியான அவர் ஜநீயஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. (க்ஷணமபிந ஸஹே) க்ஷணகாலமும் ஸஹிக்ககில்லேன். காமினிக்கு பத்ருவிர ஹத்தில் சந்தனகுஸுமாதிகள் அஸஹ்யமானாப்போலே, மாறாளன் கவராத மணிமாமைகுறைவிலம், உயிரினால் குறைவிலமே, நதேவ லோகாக்ரமணம், இது இளையபெருமாளுடைய ஏறாளுமிறையோ ன். (யாதுசததாவிநாசம்)உருமாய்ந்து போகவேண்டும். அடிமைக்கு ப்புறம்பானவை அஸஹ்யமானாலும் போக்குகை ஈச்வரக்ருத்யம் அனுகூலங்கள் ஆதரணீயமானாலும் உண்டாக்குகை ஈச்வரக்ருத்யம். (தத்ஸத்யம்) இது லோகத்திலே கேட்டறிவதொன்றன்று மெய் யாகக்கூட்டுமோவென்ன; இது அஹ்ருதயமாகச் சொன்னதன்று மெய். (மதுமதன) திருமுன்பே பொய்சொன்னேனாகில் உமக்கு ப்பொய்யனை மது பட்டது படுகிறேன். சேஷித்வத்துக்குப் புறம் பானவை த்தைமதுவைப்போக்கினாப்போலே, போக்கியருளவேணு மென்னவுமாம். (இதம்விஜ்ஞாபநம் தத்ஸத்யம்) ப்ராப்யாபே க்ஷையில்புறை யுண்டாகிலும் விரோதிவர்க்கத்தில் அருசியில்பொ ய்யில்லை - ருஎ.

வ்யா,—துரந்தஸ்யேதி. நிக்ரஹஹேதுவான பகவதபசாராத்ய சுபங்கள் வஞ்சரிக்கிற ஸம்ஸாரத்திலே,கைங்கர்யவிரோதிகள் அஸ ஹ்யமாம்படி, அதிலே அருசிபிறந்தத்தைப் போக்கித்தந்தருளவே ண்டுமென்று,யோகிகளுக்கு துர்லபமான விதை அபேக்ஷிப்பாருண் டாவவதே யென்ன. அவதியில்லாத அசுபங்களையும் போக்கவல்லதே வருடைய அபரிச்சின்னகுணங்களை நினைத்திருந்து அபேக்ஷிக்கிறே னென்கிறார். (துரந்தஸ்ய)முடிவன்றிக்கேயிருக்கும் அசுபம், ப்ராய

ச்சித்தத்தாலாதல், அனுபவத்தாலாதல், உத்தரகோடிகாணவொண்ணு திருக்கை. துர்விபாகமாயிருக்குமதென்னவுமாம். உதர்கத்தில் நரகக ர்ப்பவாஸங்கள் பலிக்கை. (அபரிஹரணீயஸ்ய) ஸர்வசத்தியானதேவ ருக்கும் பிர்க்காலிக்கும்படியாயிருக்கை.(மஹத:)ஸங்க்யாவிரஹி தமாயிருக்கை. காலதத்தவமுள்ளதனையும் அனுபவியாநின்றாலும் அவதிகாண வொண்ணுதிருக்கையும், இப்படிப்பட்ட அசுபத்திற்குத் தொகையன்றிக்கே யிருக்கையும், யத்ப்ருஹ்மகல்பநியதானு பவேப் யநாச்யம், அணுபரிமாணனான சேதனனிவற்றை யெல்லாம் செய்தா னென்றுவிஸ்மயப்படும்படியிருக்கை. சீலமில்லாச்சிரியன். (நிஹீந சாரோஹம்) அஹம்புத்திபோத்யமான தர்மிஸ்வரூபம்அதர்மாசா ரநிரூபகமாயிருக்கை. ஆசாரமாகிறது-விலக்ஷணதர்மத்திலே யிழிகை க்கு யோக்யதாபாதகங்களான ஸந்த்யாவந்தனதிகள். பாபானுஷ் டானத்துக்குயோக்யனென்கை. (ந்ருபசு:) சதுஷ்பாததுக்களில் கா ட்டில் த்விபாதமே விசேஷமென்கை. ஜ்ஞானேநஹீந : பசுபிஸ்ஸ மாந:. சாஸ்த்ரவச்யஜன்மமாகையாலே பசுவென்ன வொண்ணுது. ஆஹாரநித்ராபயமைதுநாதிகளிலே நியதியில்லாமையாலே, மனுஷ் யனென்ன வொண்ணுது. இரண்டுஜன்மத்தையும் தப்பினேனென் கை. (அசுபஸ்யாஸ்பதம்) அசுபமாகிறது-சுபவிரோதி. சுபமாகிற து-புருஷார்த்தம். தத்விரோதிக்கெல்லாம் ஆச்ரயம் அக்ருத்யகர ணம் முதலாக அஸஹ்யாபசாரம் முடிவானவற்றிர்க்கு ஆகரமா யிருக்கை. தேவர்குணு நாமாகர மானுப்போலே, நான் அசுபானு மாகரமென்கை. (அபி) இப்படிப்பட்டனு யிருக்கச்செய்தேயும், க்ஷணமபிஸ்ஹேயாது சததாவிநாசமென்று அபேக்ஷிக்கைக்கு,மொ ருவழியுண்டு. அதென்னென்னில் (தயாஸிந்தோ) கீழ்ச்சொன்ன அ சுபஸாகரமெல்லாம், தேவருடைய தயார்ணவத்திலே ஒருகுளப்படி யன்றோ தேவருடையக்ருபாஸித்தை. வதார்ஹமபிகாகுத்ஸ்த : க்ரு பயாபர்யபாலயத். வ்யஸநேஷு மனுஷ்யாணும் ப்ருசம்பவதிது:கி த:. யதிவாராவணஸ்வயம். கச்சானுஜாநாமி. (பந்தோ) ஆச்ரிதரு டைய இழவுபேறுதன்னுதாம்படியான நிருபாதிகஸம்பந்தம்சொல் லுகிறது. அஹம்வோபாந்த வோஜாத :. க்ருதக்ருத்தஸ்ததாராம:. ஐருணம்ப்ரவ்ருத்தமிவமே. உரஸாதாரயாமாஸப்ரார்த்தம் ஸஞ்சாத் யமாதவ:. மமப்ராணுஹிபாண்டவா:. (நிரவதிகவாத்ஸல்யஜலதே) வர்த்ஸல்யமாகிறது—அன்றீன்ற கன்றின்பக்கல் தோஷம் தாயிக்கு

ச்லோ.—அநிச்சந்நப்யேவம்யதிபுநரிதீச்சந்நவரஜ
ஸ்தமச்சந்நச்சத்மஸ்துதிவசநபங்கீமரசயம் -
ததாபீத்தம்ரூபம்வசநமவலம்ப்யாபிக்ருபயா
த்வமேவைவம்பூதம் தரணிதரமேசிக்ஷயமந: - ருகூ.

---

போக்யமாயிருக்குமாப்போலே, ஆச்ரிததோஷம் போக்கியமாயிருக்கை. க்ருபாஸமுத்ரத்துக்கு க்கரையுண்டாகிலும், வாத்ஸல்யஸாகரத்துக்கு க்கரையில்லையென்கை. சரணாகதவத்ஸல: ரிபூணாமபிவத்ஸல:.தோஷோயத்யபிதஸ்யஸ்யாத்.த்வயிகிஞ்சித்ஸமாபன்னே கிம்கார்யம் ஸீததாமம. அப்யஹம்ஜீவிதம் ஜஹ்யாம்.(தவகுணகணம் ஸ்மாரம்ஸ்மாரம் ) ஸ்ம்ருத்வாஸ்ம்ருத்வா குணாநாமாகரோமஹான். யதாரத்நாநிஜலதே:. சதுர்முகாயு:. (இதீச்சாமிகதபி :) அசுபாஸ்பதமான வென்னை நினைத்தஞ்சாதே, தேவர்குணகணத்தை நினைத்து நதேஹம் நப்ராணனென்கிறபடியே, இச்சியாநின்றேன் - ருஅ.

வ்யா.—அநிச்சன்னிதி. இச்சாமியென்கிற இச்சைதான், ஸத்யமோவென்ன. மந்தபுத்தியாநான் விஷயானுரூபமான இச்சையுண்டென்று திருமுன்பே விண்ணப்பம்செய்யப்போகாது. இச்சாஸூசகமானவசனத்தை யவலம்பித்து மெய்யாம்படி யென்னுடைய மனஸ்ஸை சிக்ஷித்தருளவேண்டுமென்கிறார். ( ஏவமநிச்சன்னபி ) உக்தமானப்ரகாரத்துக்கு அனுரூபமான இச்சையன்றிக்கேயிருந்ததாகிலும், நாஸ்திகரல்லாமையாலே இச்சையில்லை யென்னமாட்டார். பேற்றுக்கனுரூபமான இச்சைபெறுமையாலே உண்டென்னமாட்டார். ( புனரிதீச்சன்னிவ ) மெய்யான இச்சையுடையார் சொல்லுமாப்போலே. ( சத்மஸ்துதிவசனபங்கீமரசயம் ) க்ருத்ரிமஸ்துதிவசனம் மெய்யென்று ப்ரமிக்கும்படி பண்ணினேன். வசனப்ரகாரத்தைப் பார்த்தால் ஸர்வஜ்ஞரானதேவரும் மெய்யென்று ப்ரமிக்கும்படி சொன்னேன். பொய்யேகைமைசொல்லி யென்னுமாப்போலே, ஹேதுவென்னென்ன; ( ரஜஸ்தமச்சன்ன: ) அன்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ஹேதுவான ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அனுதிகால மந்ததேஹம்.ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை மறைத்திப்போந்தது ரஜஸ்தமோத்வாரத்தாலேயிறே. ( ததாபி ) இப்படி த்யாஜ்மாகவேண்டும்செயலைச் செய்தேனாகிலும், யதாதத்யேன வர்ணித மென்கிறபடியே, ஸர்வஜ்ஞ ஸகாசத்திலே மெய்சொல்லி பிழைக்கவேண்டியிருக்க, அங்கேபொய் பற்றினால் த்யாஜ்யனிறே.

ச்லோ-பிதாத்வம்மாதாத்வம் தயிததநயஸ்த்வம்ப்ரியஸுஹ்ரு
த்த்வமேவத்வம்மித்ரம் குருரஸிகதிச்சாஸிஜகதாம் –
த்வதீயஸ்த்வத்ப்ருத்ய ஸ்தவபரிஜநஸ்த்வத்கதிரஹம்
ப்ரபன்னச்சைவம் ஸத்யஹமபிதவைவாஸ்மிஹிபர:.

---

( இத்தம்ரூபம் வசனமவலம்ப்ய ) நதேஹன்னப்ராணன், தயாஸிந்தொபந்தோ என்கிற, வசனமாத்ரத்தையே பற்றுசாகக்கொண்டு மாதவனென்றதேகொண்டென்றும், திருமாலிருஞ்சோலையென்னேனென்ன திருமால்வந்து என்னெஞ்சு நிறையப்புகுந்தான்என்றும், உக்திமாத்ரமே ஜீவிக்கையாம்விஷயமிறே. ( க்ருபயா ) வதார்ஹமென்கிறபடியே,தோஷத்திலவிஜ்ஞாதாவாயிற்றுக்ருபாபாரதந்த்ர்யத்தாலே. (எவம்பூதம்மேமன:த்வமேவசிக்ஷய) சத்மஸ்துதிக்கு உபகரணமான மனஸ்ஸை அடிமைகொள்ளக்கடவதேவரே;அதுக்கு உபகரணமாம்படி சிக்ஷித்தருளவேண்டும். தீமனங்கெடுத்தாய், மருவித்தொழும்மனமேதந்தாய் என்கிறபடியே, பாஹ்யமானமனஸ்ஸைத் தவிர்த்து அடிமைக்கு அனுகூலமான மனஸ்ஸைத் தந்தருளவேணும். மனனகமலமறக்கழுவி என்கிறபடியே, மனோநைர்மல்யம் போகத்தாலே பிறக்கடவது. உபாஸகனுக்கு அந்த யோகஸ்தானத்திலே பகவதனுக்ரஹமாயிறே அவ்வதிகாரிக்கிருப்பது. ( தரணிதர ) ரஸாதலகதையான பூமியை ஆபத்தேஹேதுவாக உத்தரித்தரவரல்லிரோதேவர். ஏனமாய் நிலங்கீண்டவென்னப்பனே என்றும்,பன்றியாய் அன்று பாரகங்கீண்ட பாழியானென்றும்,ஸம்பந்தமும் சக்தியுமுண்டு. இவனிடத்தில் இனி யிச்சையேவேண்டுவது. அதையுண்டாக்கி ரக்ஷித்தருளவேண்டுமென்கிறார் - ருக.

வ்யா.—பிதாத்வமிதி. இச்சையுமன்றிக்கேயிருக்க, உக்திமாத்ரத்தைக்கொண்டு இச்சையையும் உண்டாக்கி ரக்ஷித்தருள வேண்டுமென்கிற தென்னென்ன. அவர்ஜநீயஸம்பந்தத்தைச் செல்லுகிறார். ( பிதாத்வம் ) உத்பாதகராய், ஹிதகாமராயிருக்கிற தேவர். ( மாதாத்வம்) கர்பதாரணம்பண்ணி, ப்ரஸவக்லேசத்தை அனுபவித்து, அசுசிப்ரஸவங்களையும் மதியாதே இவன்ப்ரியஹிதமே அபேக்ஷித்திருக்கும் தாயைப்போலே பரிவுடையீர்தேவர். பிதாமஹஸ்யஜகத: பூதாநாம் யோவ்யய: பிதா, தஞ்சமாகியதந்தைதாய். ( தயிததநயஸ்தவம்) அபிமதனாய் நிரயநிஸ்தாரகனான புத்ரனைப்போலே நின்று ஸஹகரிப்பீர் தேவர். நன்மக்களும் மேலாய்த் தாய்தந்தையுமவரே. (ப்ரி

ச்லோ.—ஜனித்வாஹம்வம்சேமஹதிஜகதிக்யாதயசஸாம்
சுசீனாம்யுக்தாநாம்குணபுருஷதத்வஸ்திதிவிதாம் -
நிஸர்காதேவத்வச்சரணகமலைகாந்தமனஸா
மதோதஃபாபாத்மா சரணதனிமஜ்ஜாமிதமஸி ௬௧.

யஸஹ்ருத்வமேவ )ஸர்வகாலத்திலும் சோபனத்தையே பண்ணும்
திருவுள்ளத்தையுடையராயிருப்பீர் தேவரீர். அனர்த்தத்தைப்பண்ணி
னாலும்விடவொண்ணாத அபிமதஸஹ்ருத்வம்.அபிமதனானாலும் வி
டவொண்ணாத அபிமதஸஹ்ருத்வம்.அவதாரணம் ஸர்வத்திலு மன்வ
யிக்கக்கடவது.(த்வம்மித்ரம்)அர்ஜுனன் ஸுபத்ரையுடைய ஸ்வயம்
வரத்தை.தேவருக்குஅறிவித்து லபித்தாற்போலே அசேஷரஹஸ்யங்
களையும்அறிவிக்கலாம்படிவிச்வஸநீயராயிருப்பீர்தேவரே.(குருரஸி)
மன்மனாபவமத்பக்தஃஎன்றும், மாமேகம்சரணம்வ்ரஜ என்றும், நின்
றநிலைகளிலே ஹிதோபதேசம் பண்ணும் ஆசார்யரும் தேவரே.(கதி
ச்சாஸி)புருஷார்த்தோபாய பூதரும் தேவரென்னுதல்.கந்தவ்யத்வா
த்கதிஃ என்று பரமப்ராப்யர் தேவரென்னுதல். ( ஜகதாம் ) இந்
தஸம்பந்தம் தேவாதிஸகலப்ராணிகளுக்கும் ஸாதாரணம். உபயவி
பூதிக்கும் ஸாதாரணமென்னவுமாம். ( த்வதீயஃ) அந்தஸாமான்ய
மொழிய தமக்குண்டான விசேஷப்ரதிபத்தியை அருளிச்செய்கிறார்.
யஸ்யாஸ்மி என்கிறபடியே தேவருக்கு சேஷபூதன்.(த்வத்ப்ருத்யஃ)
தேவருக்கு அதிசயத்தைவிளைத்து ஸ்வரூபம்பெறும் ஸம்பந்தத்தை
யுடையனென்கை. அதினாலேதேவருக்கு ஸ்ப்ருஹணீயனென்னுதல்.
( தவபரிஜநஃ ) ஆத்மதாஸ்யமென்கிற நிருபாதிக தாஸபூதனென்னு
தல். தாஸபூதா ஸ்ஸ்வதஸ்ஸர்வேஹ்யாத்மாநஃபரமாத்மநஃ. அஹம்
ஸர்வம் கரிஷ்யாமி யென்று, ஸர்வகைங்கர்யத்துக்கும் அர்ஹன்.
( த்வத்கதிஃ ) தேவரேப்ராப்யபூதரென் றிருக்கிறேன். அஹம்
ப்ரபன்னச்ச. ப்ராப்யம்பெறுகைக்கு தேவரே உபாயமாக அத்ய
வஸிக்கிறேன். ( ஏவம்ஸதி ) தேவர் ஸர்வவிதபந்துவுமாய், நான்
அனன்யகதியுமான பின்பு. ( அஹமபி ) அஹ்ருதயோக்தனானா
லும். ( தவைவபரோஸ்மி ). தேவருக்கே பரணாகிறேன். ஜ்ஞா
நசக்த்யாலும் ப்ராப்தியாலும் என்கார்யம் தேவருக்கே பரமென்
கை. பரமாகையாவது - ஸர்வதேசஸர் வகாலஸர்வாவஸ்தை களிலும்
ஸர்வப்ரகாரநிர்வாஹ்யனாகை - ௬0.

வ்யா.—ஜனித்வேதி. நீர்மஹாவம்சப்ரஸூதரல்லீரோ; நிரால
ம்பரைப்போலே இங்ஙன்சொல்லுகிற தென்னென்ன. இவ்வம்சத்தி

லே பிறந்தேனேயாகிலும் பாபப்ரசுணனுகையாலே ஸம்ஸாரத்திலழு ந்தாநின்றேன்; எடுத்தருளவேண்டுமென்கிருர். ( மஹதிவம்சே அ ஹம்ஜநித்வா ) வம்சத்துக்கு மஹத்தையாவது - மஹாத்மாக்க ள்வந்து ஜனிக்கை. யதத்திதுர்லபதரம் லோகேஜன்மயதீத்ருசம் எ ன்றும், வம்சத்திலே பிறந்துவைத்து அனர்த்தப்படாநின்றேனென் கை. (ஜகதிக்யாதயசஸாம்) சதுஸ்ஸாகரபர்யந்தமான பூமியெல்லா ம் ப்ரஸித்தமான புகழையுடையவர்கள்.திகழும்தண்திருவருள்செய் து லகத்தார் புகழும்புகழ் தானதுக்காட்டித் தந்தென்கிறபடியே பகவத் விஷயீகாரத்தால்வந்தபுகழ். (சுசீனும்) பகவத்வ்யதிரிக்தவிஷ யங்களில் போக்யதாகந்த ரஹிதராயிருக்கை. ஆந்தரபாஹ்யமான உபயசுசியைச் சொல்லவுமாம். இவ்வம்சத்திலேபிறந்த சுபாஸ்பத மென்னக்கடவீரோ. ( யுக்தாநாம் ) க்ருதக்ருத்யாஃ ப்ரதீக்ஷந்தே என்கிறபடியே நித்யயோகத்தில் ஆகாம்க்ஷமாணராயிருக்குமவர்கள், மாகவைகுந்தம் காண்பதற்கு என்மனமேக வெண்ணுவரென்றிருக் கை. இளையபெருமாளைப்போலே, தேவரோடேயல்லது செல்லாத வர்களென்னுதல். இப்படிப்பட்டவம்சத்திலேபிறந்து, இச்சைபோ ராதென்னக் கடவீரோவென்ன. ( குணபுருஷதத்வஸ்திதிவிதாம் ) சிதசிதீச்வரர்களுடைய, ஸ்வரூபஸ்வபாவஸம்பந்தங்களை யறியுமவ ர்கள். குணமென்று, குணாச்ரயமான ப்ரக்ருதியைச்செல்லுகிறது. ஸ்திதியாவது - ஸ்வரூபஸ்பாவாதிகள். (நிஸர்க்காதேவேத்யாதி) வத் ஸமானது, ஜனித்தபோதே தாய்முலையிலே வாய்வைக்குமாப்போ லே, த்வச்சரணாரவிந்தங்களிலே ஏகாந்தமானமனஸ்ஸை, ஜன்மப்ரா ப்ருதியாகவுடையவர்கள். கீழ்ச்சொன்ன சுசியோகாதிகள், நைஸர் க்கிகமென்கை. (பாபாத்மா) பாபந்தானொருவடிவுகொண்டாப்போ லே யிருக்குமவன். ஜ்ஞாநாநந்தமொழிய, பாபமேநிரூபகமாயிரு க்கை. ( சரண ) இவ்வளவிலும் உன்பக்கலிலே அபகாரமுண்டாம் படி, ஆள்பார்த்துழிதருந்தேவரீரே. ( தமஸி அதோதோநிமஜ்ஜா மி ) ப்ரக்ருதியிலே, தேவரெடுக்கநினைத்தாலும், கைக்கெட்டாத் படி ஆழநின்றேன். பன்மாமாயபல்பிறவியில் படுகின்றயான் என் கிறபடியே, இன்னத்தறைகண்டிலே னென்கிருர். இத்தால்ஸாந்தா னிகர்தேவர்பக்கல், அவகாஹித்தளவும் நான்ப்ரக்ருதியிலேயுள்புக் கேனென்கை ஜனித்தவம்சமிது, தேவர்சரண்யர்,நான்படுகிறபாடிது விறே. அஸமஞ்ஜஸனைப்போலே, வம்சப்ரபாவமும் ஜீவியாதே,

ச்லோ.—அமர்யாத꞉க்ஷுத்ரச்சலமதிரஸூயாப்ரஸவபூ꞉
க்ருதக்நோ துர்மாநீ ஸ்மரபரவசோ வஞ்சநபர꞉ -
ந்ருசம்ஸ꞉ பாபிஷ்ட꞉ கதமஹமிதோ து꞉கஜலதே
ரபாராதுத்தீர்ணஸ்தவ பரிசரேயம் சரணயோ꞉- ௬௨.

---

தேவருடைய நீர்மையும் ஜீவியாதேயிருக்கிறபடியிறே. என்னுடைய பாபப்ராசுர்யமென்கிறார் - ௬௧.

வ்யா.—அமர்யாத꞉. இவ்வம்சத்தில் ஜன்மத்தையும் அஸத்ஸமமாக்கவல்லபாப முமுக்கேதென்ன ; பாபாத்மா என்கிறத்தைப் பரக்கப்பேசுகிறார். ( அமர்யாத꞉ ) வேதமர்யாதைக்கு பஹிர்பூதன். (க்ஷுத்ர꞉) க்ஷுத்ரத்வமாவது - நீசவிஷயங்களிலதிசபலன். உஜ்ஜீவநஹேதுவாந வேதமர்யாதையை அநாதரித்து, அதுக்குமேலே விநாசஹேதுவான நீசஸேவையிலே அதிசபலன். (சலமதி꞉) நீசவிஷயப்ராவண்யம் நாசஹேது, வேதப்ரதிபாத்யவிஷயமே உத்தேச்யமென்று ஒருஜ்ஞாநாதிகன் ஹிதம்சொன்னால், அதில் வ்யவஸ்திதசித்தனல்லேன். ( அஸூயாப்ரஸவபூ꞉ ) பரகுணங்களிலே தோஷத்தையுண்டாக்குகைக்கு உத்பத்திஸ்தானம். தனக்கு தோஷமுண்டாமளவன்றிக்கே, பிறர்குணங்களிலும் தோஷத்தையுண்டாக்குமவனென்கை. ( க்ருதக்ந꞉ ) உபகரித்தவிஷயத்திலே அபகாரத்தைப்பண்ணுகை. கோக்நேசைவஸுராபேச சோரேபக்நவ்ரதேததா - நிஷ்க்ருதிர்விஹிதாஸத்பி꞉ க்ருதக்நேநாஸ்திநிஷ்க்ருதி꞉. என்று, மாத்ருபித்ருசதத்திலும், வத்ஸலதரமானசாஸ்த்ரத்திலும் பஹிஷ்க்ருதனென்கை. ( துர்மாநீ꞉) இப்படி நிக்ருஷ்டனாயிருக்கச்செய்தேயும் ஸர்வோத்க்ருஷ்டருக்கு அவ்வருகையாக தன்னைநினைத்து, ஈச்வரோஹம் என்று இருக்குமவன். (ஸ்மரபரவச꞉ ) தன்னை உத்க்ருஷ்டாத்மாக்களுக்கும், மேலாக நினைத்திருக்கிறவளவன்றிக்கே, விஷயப்ராவண்யஹேதுவான காமனுக்குப் பரதந்த்ரனாகவும், பகவத்ப்ராவண்யஹேதுபூதரானாரை தாழநினைத்தும், அனர்த்தப்பட்டேனென்கை. (வஞ்சனபர꞉) காமபாரவச்யத்தாலே விஷயங்களிலே ப்ரவணனாய், அவ்விஷயங்களிலும் த்ருவ்யங்களைவஞ்சித்து வர்த்திக்குமவன். சூதனாய்க்கள்வனாகி, சூதனைப்பெருக்கிக்கள வினைத்துணிந்து என்றுஞ் சொல்லுகிறபடியே. ( ந்ருசம்ஸ꞉) தான் விரும்பினவிஷயங்களில் வஞ்சகனாயன்றிக்கே, தன்னை விச்வஸித்திருப்பார் பக்கல் க்ரூரகர்மாவாயிருக்குமவன். ( பாபிஷ்ட꞉ ) இதுக்கெல்லாம

ச்லோ.—ரகுவரயதபூஸ்த்வம் தாத்ருசோவாயஸஸ்ய
ப்ரணதஇதிதயாளுர்யச்சசைத் யஸ்யக்ருஷ்ண -
ப்ரதிபவமபராத்துர்முக்தஸாயுஜ்யதோபூர்
வதகிமபதமாகஸ்தஸ்யதேஸ்திக்ஷமாயா: - ௬௩.

---

டி பாபருசியாய், அதிலே வ்யுவஸ்திதனாயிருக்கை. பாவமேசெய்து பாவியானேன், ஒப்பில்லாத்தீவினையேன், நானே நானாவிதநரகம்புகும் பாவஞ்செய்தேன், அஹமஸ்ம்யபராதாநாமாலய: ,ராவணோ நாமதுர்வ்ருத்த:, நீசனென்னிறைவொன்றுமிலேன், என்று அறிவுடையார் தந்தாமைப்பேசும்படியான பாபத்திலே நிஷ்டையுடையவன். (அபாராத்து:கஜலதே:கதம்உத்தீர்ண:) ஒருநாளிலே துடங்கின து:கமென்னுதல், மேலொருநாளிலே முடிவுகாணுதல் செய்யுமதல்லாமையாலே, த்ருஷ்டிவிஷம்போலே காணவே பயமாயிருக்கிற து:க்கஸாகரத்திநின்றும். ( கதமுத்தீர்ண: ) இதிலழுந்திக்கிடக்கிற நான் கரையேறவென்பதொன்றுண்டோ. முத்தனாரென்கிறபடியே, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான தேவரே கரையேற்றவேண்டுமென்கை. ( தவசரணயோ: கதம்பரிசரேயம் ) து: கநிவ்ருத்திக்கும் அக்ஷமனாயிருக்கிற நான், நித்யஸூரிகள் அடிமைசெய்கிற தேவர்திருவடிகளிலே எங்ஙனே பரிசர்யைபண்ணுவன். து:கநிவ்ருத்தியும் தேவருக்கேபரம்; அடிமைகொள்ளுகையும் தேவருக்கே பரமென்கை - ௬௨.

வ்யா.—ரகுவரேதி. புத்திபூர்வேணபண்ணின ப்ராதிகூல்யங்களைப்போக்கப்போமோவென்ன; காகாபராதத்தையும், சிசுபாலாபராதத்தையும் பொறுத்தருளின தேவருக்கு பொறுக்கமுடியாததுண்டோவென்கிறார். (ரகுவர) சரணாகத ரக்ஷணம் பண்ணிப்போந்த ரகுப்ரப்ருதிகள், ஸாதகரென்னும்படி சரணாகத ரக்ஷணத்திலே அதிகராயிருக்கை. ரகுராக்ஷஸஸம்வாதத்தில், சரணாகத ரக்ஷணம் பண்ணிப்போந்தவர்கள் அளவன்றிக்கே, ஸுக்ரீவம்சரணம்கத: என்றும், த்வயிகிஞ்சித்ஸமாபன்னே த்யாரப்ய. என்று, மீறியிவர்படி. (தாத்ருச:) அப்படிப்பட்டவனென்னுமதொழிய, அனுபாஷிக்கைதான் அவஹ்யமாம்படியிறே பண்ணினவபராதம். ( வாயஸஸ்ய ) அபராதம் பண்ணுகைக்காக, ப்ராப்தமான தேவத்வத்தை விட்டு, நிஹீநமானதிர்யக்த்வத்தை பரிக்ரஹித்தானென்கை. (ப்ரணதஇதி) ஸபித்ராசபரித்யக்த: என்கிறபடியே, இவனைப் பரிக்ரஹிக்கில் ரமர்க்கு

ச்லோ.—நனுப்ரபன்னஸ்ஸக்ருதேவநாத
தவாஹமஸ்மீதிசயாசமான :-
தவானுகம்ப்யஸ்ஸ்மரத : ப்ரதிஜ்ஞாம்
மதேகவர்ஜம் கிமிதம்வ்ரதந்தே - சுச.

அனர்த்தமென்று ஸர்வருமுபேக்ஷிக்க, ப்புகலற்று ஸதன்னிபதிதம் பூமௌஎன்கிறபடியே, விழுந்தவனை சரணாகதனென்று ப்ரதிபத்தி பண்ணி. ருஷி, சரணாகதனென்றதும் ராமாபிப்ராயத்தாலே. ( த்வம்தயாளுராபூ: ) ப்ரஹ்மாஸ்தரத்துக் கிலக்காமளவிலே, தேவர்க்ருபயாயர்யபாலயத் என்கிறபடியே, தயாளுவானீர். க்ஷிபாமியென்றும். நக்ஷமாமிஎன்றும் பண்ணிவைத்த ப்ரதிஜ்ஞைபலியாதே,தேவர்க்ருபாகார்யமே பலித்து விட்டுது, பிராட்டிஸன்னிதியாகையாலிறே.(யச்ச)சசப்தத்தாலே,காகாபரார்தத்தைப் பொறுத்தவளவேயோயென்று உதாஹரணாந்தரத்தை ஸமுச்சயிக்கிறார்.(சைத்யஸ்ய)யதுவம்சபூதரில் காட்டில், சேதிகுலோத்பவனென்று தன்னை உத்க்ருஷ்டனாக அபிமானித்திருக்குமவன்.(ப்ரதிபவமபராத்து:)காகத்தைப்போலே ஒருக்கால் அபராதத்தைப்பண்ணின வளவன்றியே, ஜன்மந்தோறும் ப்ராதிகூல்யத்திலே வாஸனைபண்ணினவனுக்கு. (ஸாயுஜ்யதோபூ: ) பஹூநாம் ஜன்மனாமந்தே என்றும், அனேகஜன்மஸம்ஸித்த:என்றும், ஜன்மந்தோறும் ஆச்ரயித்தார்பெறும் பேற்றையிறேகொடுத்தது. ஸாயுஜ்யமாகிறது-ஸமானகுணயோகம். ஸாயுஜ்யம் ப்ரதிபன்னாயே தீவ்ரபக்தாஸ்தபஸ்விந:-கிம்காராமமதே நித்யப்பவந்தி நிருபவத்ரவா:. ( முக்த ) ஆயர்குலத்தீற்றிளம் பிள்ளையென்கிறபடியே, அபராதாநபிஜ்ஞனிறே க்ருஷ்ணன். அதுக்குமேலே யொரு பேற்றை, முடிக்கிறதசையிலே ஸ்வரூபமான வடிவைக்கண்ணுக்கிலக்காக்கினவேற்றம். ( தஸ்யதேக்ஷமாயா: அபதமாக : கிமஸ்தி ) காலபேதத்தாலே தேவர்வேறே யொருவனாகிறீரல்லீர்; தேவர்க்ருபைக்கு அவிஷயமான பாபமுண்டோ. கிம்க்ஷேபே. அபதம்-அஸ்தானம். அவிஷயமித்யர்த்த :. (வத)ஸர்வஜ்ஞரானதேவருக்கு மறுமாற்றமில்லை. க்ஷமைக்குவிஷயீகரிக்குமித்தனையெங்கை — சுரு.

வ்யா.—நன்விதி. ஸ்வதந்தரரான நாம் சிலர்திறத்தில் ஒன்றைச் செய்தோமென்ன இதுவேமர்யாதையாகக்கடவதோவென்ன. கடல்கரையிலே ஆச்ரிதஸாமான்யத்திலே தேவர்பண்ணின ப்ரதிஜ்ஞையென்னையொருவனை யொழியவோவென்கிறார். (நனுப்ரபன்ன: )

ச்லோ.—அக்ருத்ரிமத்வச்சரணாரவிந்த
ப்ரேமப்ரகர்ஷாவதிமாத்மவந்தம்—
பிதாமஹம்நாதமுனிம்விலோக்ய
ப்ரஸீதமத்வ்ருத்தமசிந்தயித்வா – ௬௫.

ஸக்ருதேவ என்றதத்தை ஸ்மரிக்கிறார். (ஸக்ருதேவ) என்றது-ஸஹஸைவஎன்று ஆழ்வான் நிர்வஹிக்கும். அநாதிகாலம் ஸம்ஸரித்துப் போந்தவிவன், ஒருஜன்மமெல்லாம் ப்ரபத்தியை அநுஸந்தித்தால், தான் ஸக்ருதென்கைக்குப் போருமோவென்பர் எம்பார். பகவத் ப்ரபாவத்தைப் பார்த்தால் ஒருக்காலைக்குமேல்மிகை; ப்ராப்யருசிப் ராப்தியளவும் அநுவர்த்திக்கு மென்பர் பட்டர். (நாத) ஒருக்கால்பண்ணினப்ரபத்தி யமைகிறது,வகுத்தநாதனாகையாலே. ஆபிமுக்யமாத்ரமே அமைந்திருக்கிறது, இழவுபேறுதன்னதான குடல்துடக்கு. அசரண்யவிஷயத்தில், ஆர்த்தப்ரபத்திக்கும் பலம் ப்ராபகம். வகுத்தவிஷயத்தில் த்ருபதப்ரபத்திக்கும், பலவ்யாப்தியுண்டு. (தவாஸ்மீதிசயாசமானஃ) (அஹம்தவாஸ்மி) ப்ரத்யக்வஸ்துவானது கிஞ்சித்கரித்து தன்ஸத்தையைலபிக்கவேணுமென்று யாசிக்கை. உத்தரார்த்த ப்ரக்ரியையாலே கைங்கர்யத்தைப்ரார்த்திக்கை. த்வத்பாதமூலம்சரணம்ப்ரபத்யே என்று என்னுடைய வெறுமையை முன்னிட்டுக்கொண்டு,ப்ரபத்திபண்ணினேன். ஐகாந்திகநித்யகிங்கரஃப்ரஹர்ஷயிஷ்யாமிஎன்று,ப்ராப்யாபேக்ஷையும் பண்ணினேன். இரண்டுபதத்தாலும் பக்திப்ரபத்திகளிரண்டிலும் அதிகரித்தவதிகாரிகளிருவரையும் சொல்லுகிறதென்பாருமுண்டு. (ப்ரதிஜ்ஞாம்ஸ்மரதஸ்தவாநுகம்பயஃ) ரதத்வ்ராதம்மமவென்று, கடற்கரையில் பண்ணின ப்ரதிஜ்ஞையை ஸ்மரியாநின்றுகொண்டு,தேவருக்கு அநுக்ராஹ்யன். (தேவ்ரதமித தேகவல்ர்ஜம்கிம்) ஸர்வஸாதாரணபூதரான தேவருடையஅஸாதாரணமான இந்தஸங்கல்ப, மென்னையொழிந்திருக்குமோ. கிம்க்ஷேப. இன்னையொழிய என்று விசேஷித்ததாகிலன்றோ வெனக்கு இழக்கவேண்டுவது. தேவர்ஸத்யஸங்கல் பராகையாலென்னைரக்ஷித்தருளவேணுமென்கை – ௬௪.

வ்யா.—அக்ருத்ரிமேதி. ராமோத்விர்நாபிபாஷதே என்கிற, ஸங்கல்பத்தை விட்டீரேயாகிலும், பெரியமுதலியாரோடு, வித்யையாலும், ஜன்மத்தாலும் உண்டான ஸம்பந்தத்தையே பார்த்தருளி, என்னுடைய நன்மைதீமைகளைப்பாராதே விஷயீகரிக்கவேணுமெ

ன்ன, அதுக்குக்கண்ணழிவில்லாமையாலே அப்படி செய்கிறோமெ ன்று ஈச்வரன் அனுமதிபண்ண, தாம் அனுமதிபெற்றாராய், ஸ்தோத் ரம்தலைக்கட்டுகிறார். (அக்ருத்ரிம) க்ரியயாநிர்வ்ருத்த: க்ருத்ரிம: தத் ரஹித: க்ருத்ரிம: ஸ்வாபாவிக இத்யர்த்த:. குலந்தானே யோகிகுல மாகையாலே, நைஸர்க்கிகமென்கை. மெய்யானப்ரேமமென்னவு மாம். (த்வத்) ப்ராப்தசேஷியான வுன்னுடைய. (சரணாரவிந்த) ஆ ச்ரிதருக்கு இழியுந்துறையாய் போக்யமான திருவடிகளை. (ப்ரேமப் ரகர்ஷாவதிம்) ப்ரேமாதிசய ஸீமாபூமியானவர். நமக்கிதரவிஷய களில் ப்ரேமமெல்லாம் இவர்க்கு வகுத்தவிஷயத்திலேயிறே ருப்பது. ( ஆத்மவந்தம்) பகவத்சேஷத்வம் ஸ்வரூபமாகவே ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாநமுடையவரென்கை. தனவந்தமென்னுமாப்போ லே. (பிதாமஹம்நாதமுனிம்)குடல்துடக்கையுடையராய், பகவத்ஜ் ஞாநநிதியாயுள்ளவரை. (விலோக்ய) கடாக்ஷித்து. (ப்ரஸீத) அபரா தங்களைப் பொறுத்தருளவேணும். (மத்வ்ருத்தமசிந்தயித்வா) அஸத் கர்மத்தைவிஸ்மரிக்கக்கடவராக வேணுமென்கை. மத்வ்ருத்தமென் று ஸத்கர்மத்தை நினைக்கிறது. வ்ருத்தவானென்றால் ஸத்கர்மவ்ருத்த னையிறே சொல்லுகிறது. ஸ்வகதமானவைற்றையனுதரித்து, பெரி யமுதலியார்ஸம்பந்தமெனக்குத் தஞ்சமாகவேணுமென்று ப்ரார்த் தித்து, ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டி யருளுகிறார் – சுரு.

ச்லோ.—யத்பதாம்போருஹத்யான வித்வஸ்தாசேஷகல்மஷ:-
வஸ்துதாமுபயாதோஹம் யாமுனேயம்நமாமிதம்.

எம்பெருமானார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீஆளவந்தார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீஆளவந்தார்ஸ்தோத்ர வ்யாக்யானம்

ஸம்பூர்ணம்.